www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 9/00
දිනමුරසු වාරමලර්
ஆக.07-13,1994

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 62



## மட்டக்களப்பில்— கூட்டணிக்குள் குழப்பங்கள்

## கலவரம் வருமா?

விஜயதுங்கா—சந்திரிகா அனுமதிப்பார்களா?

பளிச் தேர்தல் காலத் திரைமறைவுச் செய்திகள் பளிச்





லேடிஸ் ஸ்பெஷல் பரிசுப் போட்டி

மகாபாரதம்

நில் கவனி முன்னேறு

## அழகியின் இரகசியம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தேவன் நம்மை மீட்டார்


உலகில் வாழும் யாவரும் இறைவனுக்கு எதிராக குற்றங்கள் பல செய்து பாவக்கறை படிந்த தூய்மையற்ற பாவிகளாகவே காணப்படுகின்றோம். **"எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமை யற்றவர்களாகி"** (ரோமர் 3:23) மகா பரிசுத்தமும், பராக்கிரமும் பொருந்திய கடவுள் அண்டை செல்வதற்கு அருகதை யற்ற அற்பரும் ஈனருமாயுள்ளோம்.

எனினும் தேவன் இரக்கத்திலே ஐசுவரியம் உள்ளவர். அவர் அளப்பெரிய அன்பின் நிமித்தம் தள்ளி விடாது உலக மாந்தர் யாவரையும் பாவமற சுத்திகரித்து தன்னண்டை சேர்த்துக் கொள்ள சித்தம் கொண்டார். "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்."

(யோவான் 3:16)

மனித ரூபம் கொண்டு, சிலுவையிலே கொடிய மரணத்தை அனுபவித்ததன் மூலம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, எமது பாவங்களுக்கான தண்டனையை தன்மேல் ஏற்றுக்கொண்டார். எம் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, சுத்திகரிக்கப் பட்டு இறைவனோடு ஒப்புரவாகும் சலாக்கியத்தை உண்டு பண்ணினார். மரணத்தை ஜெயம் கொண்டு உயிர்த் தெழுந்து, எங்களுக்கு என்றென்றுமாய் தேவனோடு சஞ்சரிக்கும் நித்தியமான வாழ்க்கை கிட்ட வழி வகுத்தார்.

## ஆன்மீகம்



"பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வருமோ, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவன்." (ரோமர் 6:23)

இயேசு கிறிஸ்துவை எமது ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்று விசுவாசித்து நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வோம். பிறர்க்கும் அவ்வழியை காண்பிப்போம்.

செ. கீதாஞ்சலி-கொழும்பு-06.

# தோழமை பற்றி அலி (றழி) அவர்கள்

உன் நண்பர்கள் உனக்கு உதவி செய்ய முன் வருகிறார்களா? அந்த அன்பை ஏற்றுக்கொள். தவறு கிடையாது. ஆனால் அவர்களின் உதவி உனக்கு அவமானத்தை தேடித்தரும் என்று தெரிந்தால் அதனை ஏற்றுக்கொள்ளாதே. உதவி செய்துவிட்டு மானத்தை வாங்குகிறவர்கள் மக்கட் திரளில் ஏராளம்.

சந்தேகப் பிராணிகளுடன் அதிகத் தொடர்பு வைத்துக்கொள்ளாதே. அது இறுதியில் உனக்கு அவமானத்தைத் தேடித்தரும். எதற்கும் ஒரு வரம்பு வைத்துக்கொள். யாருடைய தயவையும் அளவுக்கதிகமாக எதிர்பார்க்காதே. இறுதியில் நீ அடையப் போகும் மனவேதனையை இது தவிர்க்கும்.

அனைவரிடமும் அன்புடன் பழகு; பாசத்துடன் உரையாடு; பணிவுடன் நடந்துகொள்; உன் கடமையைச் செய். அவர்களும் அப்படிச் செய்கிறார்களா என்று எண்ணிப் பார்க்காதே. பழகும்போது விதண்டாவாதம் ஏற்படும் என்று தெரிந்தால் தவிர்த்துக்கொள்.

அவர்கள் உன்னை ஒதுக்கிவைக்கும்போது நெருங்கிய உறவுடன் பழகு. அவர்கள் கஞ்சத்தனம் காட்டுகிறார்களா? பொறுப்புணர்ச்சியோடு பணிந்து நின்று பதில் சொல். அவர்களிடம் நீ எந்த உதவியும் பெறவில்லையா? பரவாயில்லை. உனக்கு அவர்கள் அளப்பரிய உதவி செய்திருப்பதாக எண்ணிக்கொள்.

ஆனால் இந்த அன்புக்கு உரியவர்கள் யார் என்று முதலில் நீ தெரிந்து கொள்ள வேண்டும். எச்சரிக்கிறேன். தகுதி இல்லாதவர்களுக்கு இந்த அன்பைக் கொடுத்துவிடாதே!

அத்தியாவசியத் தேவையின்றி எதற்கும் கோபப்படாதே! கோபப்படுகிறவர்கள் எதிரில் வந்தால் கனிவுடன் உரையாடு. அப்புறம் அவர்கள் உனக்கு கனிவு காட்டுவார்கள். உனக்கும் உன் நண்பனுக்கும் எவ்வளவுதான் தொடர்பு இருந்தாலும் அதை நம்பிக் கொண்டு அவனுடைய உடைமைகளை அபகரித்துக் கொள்ளாதே. அவனது பிரத்தியேக உரிமைகளில் தலையிட்டு விடாதே. அவனுடைய உடைமைக்கு நீ தீங்கிழைத்தால் உன்னை அவனது சகோதரன் என்றே சொல்ல முடியாது. ஏனெனில் தீங்கிழைப்பவன் சகோதரனல்ல. முஸ்லிம்கள் அனைவரிடமும் நீ நல்ல விதமாக- விசுவாசமாக நடந்துகொள்ள வேண்டும்.

ஜொஹரா ஹுஸைன்-தியத்தலாவை.

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

நினைத்தால் வியப்பாகத்தான் இருக்கிறது.
வேட்பாளர் பட்டியல்கள் சிலவற்றிலே
இருக்கக்கூடிய பெயர்களை
விழிகள் மேய்ந்தபோதுதான் வியப்பு வந்தது.

பாராளுமன்றம் செல்வது என்பதும்
மக்கள் சார்பில் நாடு அறியும்
பிரதிநிதிகளாக தெரிவாகுவதும்
ஒரு சாதாரண விடயமாக
நினைக்கப்படும்போது-
ஜனநாயகம் கேலிக்கூத்தாக்கப்படுவதை
அறியும்போது வேதனை வருகிறது.

சிற்றூருக்குள்-
ஒரு சிறு சங்கத்திலோ-மன்றத்திலோ
உறுப்பினராய் இருக்கக்கூட இலாயக்கற்றவர்கள்
நாடாளுமன்றம் செல்ல ஆசைப்படுவது
மக்களின் பொறுமைமீது கொண்டுள்ள
அவர்களது நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.
உதைக்கமாட்டார்கள் மக்கள் என்பதால்
ஊருக்குதவாத-உதவத் தெரியாத
'டெக்' திருடன் முதல்-
கொடும் மோசடிக்காரன் வரை
கட்டுப்பணம் செலுத்தி-தமது
கெட்டிக்காரத்தனத்தைக் காட்டி
ஜனநாயகத்தை மட்டுமல்ல-
மக்களது பொறுமையையும் கேலி செய்கிறார்கள்.

பிரசவ ஆசை ஆணுக்கு வந்தால்
அது நிறைவேறாத பேராசை என்கிறோம்.
அப்படி ஆசைப்படுகிறவனை
பைத்தியக்காரன் என்றும் பரிகசிப்போம்.
அப்படித்தான் பாராளுமன்றம் செல்லும்
ஆசையும், அளவற்ற துணிச்சலும்
மோசடி நபர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

திருமலையிலும்-மட்டக்களப்பிலும்
சுயேச்சையாகப் போட்டியிடும்
குழுக்களை- உதாரணமாகக் காட்டலாம்.
வாக்குகள் அவர்கள் பெறப்போவதில்லை.
ஆனால் வரக்கூடாத ஆசை
வந்திருக்கும் நிலை
இன்றைய அரசியலின் அவலத்தை
அப்பட்டமாக வெளிக்காட்டுகிறதல்லவா!

அக்குழுக்களில் உள்ள சிலரை
ஆட்பற்றாக்குறை காரணமாக
பொருத்தமில்லாத பொறுப்புக்களுக்கு
நியமித்த கட்சிகள்-இன்று
வளர்த்த கடா மார்பில்பாய
திகைத்துப் போய் நிற்பதுவும்
அரசியல் அவலம் கலந்த வேடிக்கைதான்.

தங்கள் கட்டுப்பணத்தையே
காப்பாற்ற முடியாதவர்கள்
மண்ணைக் காப்பாற்றப் போவதாக
பிரசுரத்தில் பேசுவது கண்டு
விழுந்து சிரிக்காமல் வேறென்ன செய்வது?

இது ஒருபுறமிருக்க,
தமிழ் பேசும் மக்களது
உரிமைப் போராட்டத்திலே
உயிர் துறந்தவர்களை
வாக்குகள் பெறும் பிரசாரத்திற்கு
உரமாக மாற்றிவரும் கொடுமையும்
நடக்கத்தான் செய்கிறது.

பாராளுமன்றப் பாதை சரியல்ல-
ஆயுதப் போராட்டமே ஒரேவழியென்று
உறுப்பினர்களை போராடவைத்து-
அவர்கள் உயிர் கொடுக்கவைத்துவிட்டு
இன்று- பாராளுமன்றம் போவதற்கு
தியாகிகளின் பெயரை
பட்டியலாய் வெளியிட்டு பேசுவது
மரித்தவர்களுக்குச் செய்யும் துரோகமல்லவா?

பாராளுமன்றத்தையும் பயன்படுத்தலாம்
என்பது- ஆயுத வழியை நம்பியவர்கள்
தற்போது செய்துள்ள முடிவு.
எப்போதோ மரித்தவர்கள்,
பாராளுமன்ற பாதையை மறுதலித்தவர்கள்.
உயிரோடிருந்தவரை அவர்களுக்கு
உடன்பாடில்லாத
ஒரு பாதையை-
அவர்கள் பெயரால் நியாயப்படுத்துவதும்
அவர்கள் தியாகங்களை படிக்கற்களாக்குவதும்
தேவைதானா என்பதை-
நம் தமிழ் கட்சிகள் யோசித்துப்பார்க்க வேண்டும்.

செய்வதில் ஒன்றையேனும் மறக்காமல்
அனைத்தையும் சொல்லி-நினைவூட்டி
வாக்குக் கேட்கும் அவசரத்தில்
வரலாறாகிவிட்ட தியாகப் போராளிகளை
நம்மவர்கள் அவதூறு செய்துவிடாமல்
இருப்பது பொறுப்பாகும்.

□□

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## கவிதைப்போட்டி இல-59

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**அனுதாப வாக்குகள்**


போரின் விளைவால்
உறைவிடம் முழுதும்
மயானமிங்கே!
வாக்களிக்க வம்சமில்லை
மண்டை ஓடுகளை
வை(வி)த்தே
அனுதாப வாக்குகளை
அள்ளிக்கொள்ளுங்கள்!

எம்.சீ.எம். நளீர்
அக்குறணை.

**ஜனநாயக காட்சிக்கூடம்**

இது
சமகால
ஜனநாயக விளைச்சலின்
காட்சிக் கூடம்.

எம்.என்.எம். நவ்ராஜி-அக்குறணை-03.



**பேதமற்ற ஐக்கியம்**

எலும்புக்கூடுகளின் சங்கமத்தில்
இனபேதத்துக்கு இடமில்லை.
உயிருள்ள உடல்கள் அடையாத ஐக்கியத்தை
உயிரற்ற கூடுகள் அடைந்துவிட்டனவே!

எஸ்.சிவசாமி செல்வராஜ்-பூண்டுலோயா.

### வியக்கப்பட்டவை

**களஞ்சியம்**

நாளைய தேசத்துக்காய்
நாம் உருவாக்கிய
தேசியக் களஞ்சியம்.

ஏ.எச்.எம். பாஹிம்-ஹிஜ்ராபுரம்.

**மலிவு விலையில்....**

மனிதநேயம் மண்ணுக்குள்
புதைக்கப்படுவதால்,
மண்டை யோடுகள் தானிங்கே
மலிவு விற்பனை.

பஷீரா மொஹிடீன்-திருமலை.

**டயர்களின் சின்னம்**

எங்களை
அடையாளம் காட்ட
அடையாள அட்டையாலும்
இயலாதோ...?

செல்வி ஷகீலா சுப்பிரமணியம்
புளியாவத்தை.

**பூக்களும் பிஞ்சுகளும்**

எந்த மனிதத் தோப்பில்
எந்த வல்லரசு
என்ன ஆயுதம்
சோதித்து
வீழ்த்தியது?
இத்தனை
பூக்களையும்
பிஞ்சுகளையும்?

த. தயாபரன்-ஆரையம்பதி-03.

**யதார்த்தம்**

இந்த,
நிகழ்கால நூலகம்,
உணர்ச்சிகள்
உறையுமிடம்.
மனிதத்தின்
நினைவுச் சின்னம்.

பேரியாழ்.வ-மானிப்பாய்.

இன்று-
உலகச் சந்தையில்
மலிவாகக் கிடைக்கும்
மானிடப் பொருள்.

திருமதி. சலாஹுடீன்
உக்குவலை.

**அரசாங்கம்**

வாக்காளப் பெருமக்களே
ஜனநாயகம் வாழ-நீங்கள்
எங்களுக்கு தந்துதவிய
ஒட்டுக்களுக்கு - நாங்கள்
காட்டிய நன்றிகள்.

க. பூர்ணிமா-தெஹிவளை.

**வியப்பு**

மானுடம் மலிந்து
மார்க்கெட்டுக்கு
வந்து விட்டதே!

எஸ்.எஸ்.யு. ஸிபா
பேராதனைப்
பல்கலைக்கழகம்.

**கண்காட்சி**

பாரினையுறுத்தும்
பாரிய யுத்தத்தின்
பகுதிநேர
கண்காட்சி.

பூ.இதயரெத்தினம்
ஆரையம்பதி-03.

**நினைவுச் சின்னம்**

மரணித்துப் போன
மனித நேயத்தைக்
காட்சிப் படுத்தும்
மற்றோர்
நினைவுச் சின்னம்!

திருமதி. யோ. யோகேந்திரன்
திருக்கோவில்.

**மனிதக் கழிவுகள்**

போர் வெறியர்கள்
நடந்துபோன
பாதைகளில்
எஞ்சியுள்ள
மனிதக்
கழிவுகள்

ந. சிறீதரன்
வவு/ இறம்பைக்குளம்.

**உயர்ந்த சேவை**

தரமான தலைகள்
தபாலில் தரப்படும்
பழுதான தலை ஒட்டிற்கு
பாகங்கள் இங்குண்டு.
உங்கள் தேவைக்கு
எங்களின் சேவை!

எஸ். சுபாஷினி
கொழும்பு-13.

## கவிதைப் போட்டி இல-62



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 13.08.1994.

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 62
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772, கொழும்பு.

## வாசகசாலை




**அம்பலம்**

அன்பு முரசே!

வாரத்தின் வெள்ளி வரவை எண்ணிக் காத்திருக்கும் என்னால் உன் துணிவைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. இன்றைய தமிழர்களின் துரோகத்தையும், டெக் திருடன் தொடக்கம் பணத்திருடன் வரை அம்பலப்படுத்தி விட்டாய். இந்த விதமாய் நீ தூற்றியும் என் இலட்சியப் பாதையை விடமாட்டேன் என்கிறார்களே. அன்பு முரசே! உன் ஆயுட் காலம் இன்னும் பல ஆயிரம் ஆண்டு நீடிக்க- எதிர்கால சந்ததியினரும் உன் சேவையின் பயன் பெற வாழ்த்துகின்றேன். வாழ்க உன் பணி.

க. தர்மராஜா-காரைதீவு-2.

**வருடும் நயம்**

என் அன்பான முரசே!

நீ சுமந்து வரும் தேன்கிண்ணம், கவிதைப் போட்டி எனை கலை உலகில் சங்கமிக்க வைக்கிறது. கொலை விழும் நேரம் முதல் இலக்கிய நயம் வரை என் இதயத்தை வருடிச் செல்கிறது.

ஏ.கே. பர்ஹானா-காத்தான்குடி.

அன்பின் முரசே!

எக்ஸ்ரே ரிப்போர்ட், உலக ரவுண்டப், அலசுவது இராஜதந்திரி போன்ற பகுதிகளில் நல்ல செய்திகளையும் மற்றும் உலக அதிசயங்கள், கவிதைப்போட்டி, தேன் கிண்ணம் போன்ற பகுதிகளில் உள்ளத்தை உருக்கும் கவிதைகளையும் இதைப் போன்ற இன்னோரன்ன ஆக்கங்களை வெளியிடுகின்ற தினமுரசே உனக்கு தினம் தினம் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ.எம். ஆப்தீன், எம். நபிஸா-சவளக்கடை.

**தினமுரசு**

தினம் தினம்
உனது ஆக்கங்களை
முத்தமிடுகிறேன்
ரசிகனின் தொடர்கதை
சுவையோ சுவை.

அ.வா. சபறுல்லாஹ்-மருதமுனை-07.

எமதன்பிற்கினிய தினமுரசே!

அற்புதனின் நில்!கவனி!!முன்னேறு!!! அற்புதம். திரையுலகம் பற்றிய செய்திகளை சுடச்சுடச் தருவதில் உனக்கு நிகருண்டோ? எம் இதயத்தில் முதலிடத்தைப் பிடித்து விட்ட நீ மேலும் சிறப்புடன் வளர வாழ்த்துகின்றோம்.

யசோ, அனு-பசறை.

என் இதய முரசே!

உன்னிலே எத்தனை வகையான பல அம்சங்கள்? ரசிகன் தரும் இலக்கிய நயம் சுவைப்பதற்கென தனிமையான ஒரு அமைவிடம். மற்றும் அரசியல் அலசல், தேன் கிண்ணம், கொலை விழும் நேரம், அதிரடி அய்யாத்துரை இவைகள் முரசில் தூள் கிளப்புகின்றன.




முரசே இத்தனை அம்சங்களையெல்லாம் சுமந்து கொண்டு வரும் உனக்கு நன்றிகள் பல கூறினாலும் தீராது. எங்கள் வாழ்த்துக்கள் உனக்கு என்றுமே நிலைத்திருக்கும்.

சி. கிருஷ்ணன், சுபாஷ்,
அருள், பிரேம்-உடப்பு-2.

ஓ... மை டியர் முரசு!

ஓராயிரம் அர்த்தங்களை சுமந்து, வாரம் ஒரு முறை மலர்ந்து, வலம் வரும் உயிர் முரசே! நீ சுமந்து வருவது பெரும் சொத்து. அதில் இலக்கிய நயம் தனி முத்து. வாழ்க! வளர்க! தினமுரசு.

அமீனா ஹமீட்-போகஹகும்புர.

வாரம்தோறும் விந்தையான பல செய்திகளை விதைத்துவிடும் தினமுரசு ஒரு சிரஞ்சீவியாகவே இருக்கிறது. குறிப்பாக ஆசிரியரின் 'முரசம்' கலக்கலில் முதலில் இறங்கி விட்டு பிறகு ரசிகனின் 'இலக்கிய நயத்தில்' மூழ்கிப்பார்த்தாலே முரசின் அற்புதம் புரியவரும். கொட்டுவது பிரமாதமாக உள்ளது.

ஷியானி நளீர்-அக்குறணை.

**வருக-முரசே**

முத்தமிழே முக்கனியே முச்சுவையே
தினமுரசே வருக.
மலர் போன்ற உன் முகத்தை
நாம் காணத் தருக.

உன் சேவை என்றும் தொடர மனங்கனிந்த எம் நல்வாழ்த்துக்கள்.

எம்.பிலோமினா, பீ.புஸ்பகலா,
ஜீ. எக்னஸ், ஏ. மதியானந்தவள்ளி,
எஸ்.உதயராணி-காவத்த.

அன்பின் முரசே!
அழகின் உயர்வே
அமுதின் மிளிர்வே
உன்னைப் போற்றவே
என்றும் பாராட்டவே
உல்லாசமாய் உன்னை ரசிக்கவே
காலா காலம் மங்கா புகழ் பெற்று
உன் பணி உயர வாழ்த்துமிவள்

ரோஜா ராஸிக்-குருநாகல்.

என் அன்பின் அபிமானத் தினமுரசே!

தித்திக்கும் தீந்தமிழ் காவியமே, வாரம் ஒரு முறை என் மனதைக் கொள்ளை கொள்ளும் அழகு ஓவியமே, நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் பிரமாதம். அதிலும் தேன் கிண்ணம் என்ற பகுதியும், பாப்பா முரசும் மிகமிகப் பிரமாதம். உன் சேவை வளர்ச்சியடைய என் வாழ்த்துக்கள்.

சமீம் ஸவாஹிர்-மூதூர்-1.

அறுசுவை முரசே!

உருவத்தில் பெரிய மிருகங்களைத்தான் பார்த்திருக்கிறோம். ஆனால் முரசே நீ மனித மலைகளை தத்ரூபமாக புகைப்படத்துடன் பிரசுரிக்கின்றாயே! உண்மையாகவே இதனைப் பார்த்தவுடன் உடம்பு புல்லரிக்கின்றது. இரும்பை மண்தான் தின்னும் என்பதை அறிந்திருக்கிறோம். ஆனால் முரசே நீ மனிதன் இரும்பைத் தின்னுவதைப் படத்துடன் தந்தாயே, இன்னும் வரும் காலத்தில் எத்தனை அதிசயங்களைத் தரப் போகின்றாயோ? முரசே உனக்கும் உனது ஆசிரியருக்கும் எனது மனமார்ந்த நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

செ.ம. ஜனார்த்தன்
வாழைச்சேனை.

# வடக்கு-கிழக்கு இணைப்பை முன்னணி ஆதரிக்காது

## -பௌத்த பீடத்திற்கு அம்மையார் கடிதம்-

பொதுஜன முன்னணி பதவிக்கு வந்தால் இனப்பிரச்சனை தீர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் என்று கூறப்பட்டுவருகிறது.

ஆனால், வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்தில் பொதுஜன முன்னணி தெளிவான கருத்து எதையும் வெளியிடவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி வடக்கு-கிழக்கு இரு மாகாணங்களாக பிரிக்கப்படும் என்று கூறி வருகிறது.

பொதுஜன முன்னணியைப் பொறுத்த வரை அதில் அங்கம் வகிக்கும் வாசுதேவ நாணயக்கார, வடக்கு-கிழக்கு இணைந்திருக்க வேண்டும் என்று கூறிவருகிறார்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றி எதிரான கருத்தையே கொண்டிருக்கிறது.

இதேவேளையில் பௌத்த நடவடிக்கைச் சபை- ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன முன்னணி இரண்டும் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு ஆதரவாக உள்ளனவா இல்லையா? என்று கேட்டு அந்த அமைப்புகளுக்கு கடிதம் எழுதியிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக அதற்கு பதிலளித்த ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா வடக்கு-கிழக்கு பிரிக்கப்படுவதனை தமது கட்சி வலியுறுத்துவதாகத் தெரிவித்தார்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பாக பௌத்த நடவடிக்கைக் குழுவுக்கு அக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா பதில் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு தமது கட்சி ஆதரவளிக்காது என்று அவர் தெரிவித்துள்ளார். அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

"தங்களால் 07.07.94ம் திகதி அனுப்பிய மடல் கிடைக்கப்பெற்றது. நான் வைத்திய ஆலோசனையின்படி ஓய்வில் இருப்பதால் கடிதத்திற்கு உடன்பதில் அனுப்ப முடியவில்லை.

தமிழ் அரசியல்வாதிகள் வடக்கு-கிழக்கை இணைப்பதற்கு வேண்டி நின்றாலும் எங்கள் கட்சி அதை ஏற்றுக் கொள்ள மாட்டாது. பொதுஜன முன்னணி யின் உபதலைவர் சந்திரிக்கா பண்டார நாயக்கா குமாரணதுங்கா அவர்களும் அக்கருத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்.

பொதுஜன முன்னணியின் கொள்கைத் திட்டத்தால் எங்கள் நாட்டிற்கும் இனத்திற்கும் எவ்வித இடையூறும் ஏற்படாது என்பதை உங்கள் கவனத்திற்கு சமர்ப்பிக்கிறேன்."

இவ்வாறு திருமதி சிறிமாவோ தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் சிங்கள தினசரிகளிலும் வெளியாகியுள்ளன. பொதுஜன முன்னணியோ அல்லது சந்திரிக்காவோ, சிறிமாவோ தெரிவித்த கருத்தை இதுவரை மறுக்கவில்லை.

இருபெரும் அணிகளும் வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்தில் தெளிவான நிலையில் இல்லையென்பதை அவற்றின் அணுகு முறைகள் வெளிப்படுத்துவதாக தமிழ் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன. ■

# பொதுஜன முன்னணிக்குள் புகைச்சலைத் தூண்ட முயற்சி!

## அநுராவும்-சுனத்திராவும் அம்மையாருக்கு ஆலோசனை!!

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுஜன முன்னணி வெற்றிபெற்றால் சந்திரிக்காதான் பிரதமர் என்று முன்னணி யினர் பிரசாரம் செய்து வருகின்றனர்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் பொதுஜன முன்னணிக்குள்ளும் சந்திரிக்கா தான் பிரதமராக வேண்டும் என்னும் அபிப்பிராயமே மேலோங்கியுள்ளது.

இதேவேளையில் திருமதி. சிறிமாவோ வின் புத்திரரான திரு. அநுரா பண்டார நாயக்காவும், சிறிமாவோவின் இன்னொரு புத்திரியான சுனத்திராவிம் தமது தாயாரைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

பொதுஜன முன்னணி வெற்றி பெற்றால் திருமதி. சிறிமாவோதான் பிரதமராக வேண்டும் என்றும் அவர்கள் ஆலோசனை சொல்ல அம்மையாரும் அதற்கு உடன்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது.


சண்டே டைம்ஸ் வெளியிட்டுள்ள கார்ட்டூன்

அதனையடுத்தே பொதுஜன முன்னணி பதவிக்கு வந்தால் பிரதமராக தானே பதவி ஏற்கப்போவதாக அம்மையார் ஒரு அறிக்கை விட்டிருந்தார்.

அம்மையாரின் அறிக்கையைப் பார்த்த சுதந்திரக் கட்சியினரும், பொதுஜன முன்னணியினரும் விழுந்தடித்துக்கொண்டு சந்திரிக்காவிடம் ஓடிப்போய்க் கூடி ஆலோசித்தனராம்.

அந்த ஆலோசனையின் முடிவில் அம்மையார் மூலமே சந்திரிக்காதான் பிரதமர் பதவிக்குரிய வேட்பாளர் என்று அறிவிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

அம்மையாரை சந்தித்துப் பேசிய முன்னணி உறுப்பினர்கள், அவரை எப்படியோ சம்மதிக்கவைத்து, முன்னணி வெற்றி பெற்றால் சந்திரிக்காவை ஜனாதிபதி அழைக்க வேண்டும் என்று கடிதம் அனுப்ப ஒப்புதல் பெற்றனர். கடிதத்தைத் தயாரிக்கும் பொறுப்பு பொதுஜன முன்னணி செயலாளர் திரு. ஜயரத்னாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இக்கூட்டம் நடைபெற்றபோது மண்ட பத்தில் இருந்து கவனித்துக்கொண்டிருந்த சுனத்திரா அந்தச் செய்தியை திரு. நிஹால் ஜயவிக்கிரமவுக்கு தொலைபேசி மூலம் அறிவித்தார்.

திரு. நிஹால் ஜயவிக்கிரம நீதியமைச்சின் முன்னாள் செயலாளர். இவரும் சந்திரிக்கா வுக்கு எதிரானவர் என்று கூறப்படுகிறது.

செய்தியறிந்த நிஹால் கூட்டம் நடைபெற்ற அம்மையார் வீட்டிற்கு விரைந்து வந்தார்.

கூட்டத்தில் இருந்த அம்மையாருக்கு நிஹால் வந்துள்ள செய்தி தெரிவிக்கப் பட்டதாம். உடனடியாக அம்மையார் எழுந்து உள்ளே சென்றுவிட்டு சிறிது நேரம் கழித்து திரும்பி வந்தாராம்.

"ஜனாதிபதிக்கு அந்தக் கடிதத்தை இப்போது அனுப்பவேண்டாம்" என்று அம்மையார் முன்னணித் தலைவர்களிடம் கூறியுள்ளார்.

ஆனால், அக்கடிதத்தை தாம் அனுப்பிவிட்டதாக சுதந்திரக்கட்சி செயலாளர் திரு. தர்மசிறி சேனநாயக்கா கூறினாராம். கோபம் அடைந்த அம்மையார் எதுவும் பேசாமல் எழுந்து சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

தற்போதைக்கு அம்மையாரால் எதிர் நடவடிக்கை எதிலும் இறங்கமுடியாது என்றே கூறப்படுகிறது. ஏனெனில் கட்சியும் முன்னணியும் வாக்குகளைப் பெற்றுத்தரும் சந்திரிக்காவின் பின்னால்தான் நிற்கின்றன.

# "ஒத்துக்கொள்ளவில்லை-நாம் உடன்படவில்லை"

## மலையக மக்கள் முன்னணித் தலைவர்

"மலையக மக்கள் சம்பந்தமான கோரிக்கைகளை பொதுஜன முன்னணி ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களது கொள்கைத் திட்டத்தில் அவற்றை சேர்க்க ஒத்துக்கொள்ளவில்லை. அதனால்தான் அவர்களோடு உடன்பாடுகொள்ள இயல வில்லை." என்று மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் கூறியுள்ளார்.

ஊவா மாகாணத்தில் பொதுஜன முன்னணி வேட்பாளர்களில் தமிழர் ஒருவருக்குக் கூட இடமளிக்கப்படவில்லை. சுதந்திரக்கட்சி செயற்குழுவில் கூட தமிழர் எவரும் சேர்க்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மலையகத்தில் ஐந்தரை இலட்சம் வாக்காளர்கள் இருப்பதாக குறிப்பிட்ட சந்திரசேகரன் கடந்த மாகாண சபைத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் மத்தியில் 50 வீதத்திற்கும் குறைவான வாக்குகளையே பெற்றது என்றும் கூறியுள்ளார்.

# "பணிவாக நடித்து வாக்கு சேகரிப்பு"

## தமிழ் அமைப்புக்கள் குறித்து புலிகள்!

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் தமிழ் அமைப்புக்கள் தற்போது பணிவாக நடித்து வாக்குக் கேட்கிறார்கள் என்று புலிகள் யாழ்ப்பாணத் தில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

'தேச விரோத குழுக்கள்' என்று தமிழ் அமைப்புக்களை குறிப்பிட்டுள்ள புலிகள் தேர்தல் தொடர்பாக கிழக்கில் அவற்றுக் கிடையே தொடர் மோதல்கள் நடப்பதாகவும் அதனால் மக்கள் பாதிப்படைவதாகவும் கூறியுள்ளனர்.

இதுவரை மக்களை துன்புறுத்திவந்த அமைப்புக்கள் இப்போது பணிவுடன் வாக்குக் கேட்டு வருகின்றன. தேர்தல் முடிந்தவுடன் அவை தமது அராஜக செயற்பாடுகளைத் தொடரும் என்றும் புலிகள் தமது செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளனர்.

# யாழ் மத்திய கல்லூரிக்கு வயது 175!

## புலிகளின் தலைவர் பிரபா வாழ்த்து!!

யாழ் மத்திய கல்லூரியின் 175வது ஆண்டுவிழா சம்பத்தில் கொண்டாடப்பட்டது. அதனை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரன் வாழ்த்துச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளார்.

"நீண்டதொரு வரலாற்றையும், நிலை யான கல்விப் பாரம்பரியத்தையும் கொண்டது யாழ் மத்திய கல்லூரி. தமிழ் மண்ணில் அறிவொளியை ஏற்றிவைத்து, தமிழரின் தேசிய விழிப்புக்கு வெளிச்சம் காட்டிவரும் பழம்பெரும் கல்விக் கூடங்களில் ஒன்றாக யாழ் மத்திய கல்லூரி முக்கிய இடத்தை வகிக்கிறது. இக்கல்லூரியின் ஆதார பலத்தில்தான் எமது இளம்சந்ததியின் கல்வி தங்கியுள்ளது" என்று பிரபாகரன் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

யாழ் மத்திய கல்லூரியின் 175வது ஆண்டு நினைவுக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

### அசலும்-நகலும்

# போலியில் இருந்தது என்ன?

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியால் 'அத்த' என்ற சிங்கள வார இதழ் பிரசுரிக்கப்படு கிறது. இதேபோன்ற போலி 'அத்த' பத்திரிகை ஒன்றினை அச்சிட்டு வெளியிடு வதற்காக நடைபெற்ற முயற்சி முளையி லேயே முறியடிக்கப்பட்டுள்ளது.

'அத்த' என்றால் உண்மை. இப்பத்திரிகை ஐ.தே.கட்சிக்குமாறான கருத்துக்களையே வெளியிட்டு வருவதுடன் மக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவாக இருந்து வருகிறது.

கடந்த வாரம் இதே 'அத்த' பத்திரிகை யினை அப்படியே அடியொற்றிய போலி பத்திரிகை புறக்கோட்டை புதிய சோனகத் தெருவிலுள்ள தனியார் அச்சகமொன்றில் அச்சிடப்பட்டு இலங்கை எங்கணும் விநியோ கிக்கப்பட ஆயத்தமாகவிருந்தது. புறக் கோட்டை பொலிசாருக்குக் கிடைத்த தகவல்களை அடுத்து அதிகாலை வேளையில் இப் போலிப் பத்திரிகைகளை அச்சிட்ட அச்சகத்தை முற்றுகையிட்டனர். மொத்தம் 500,000 பிரதிகள் அங்கு காணப்பட்டன. இதுதொடர்பாக அச்சகத்திலிருந்த ஒருவரும் கைதுசெய்யப்பட்டார். அவ்வச்சகம் மூடப் பட்டு பொலிசார் காவல் புரிந்து வருகின்றனர். 10 இலட்சம் பத்திரிகைகள் அச்சிட்டு விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக விசாரணைகளி லிருந்து தெரியவருகிறது.

போலி 'அத்த' பத்திரிகையில் பிரதான தலைப்புச் செய்தியாக திருமதி. சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்கா ஒரு மதுபானக்கடை உரிமையாளருடன் தொடர்பு கொண்டுள்ளார் என்ற செய்தி அச்சிடப் பட்டுள்ளது. இந்தச் செய்திக்கு ஏற்றாற் போல், சந்திரிக்கா ஒரு மினி ஆடையுடன் ஒரு மதுக்கடையில் மதுபானம் அருந்துவது போன்ற கேலிச்சித்திரமும் காணப்பட்டதாம்.

# கலவர வதந்தியால் பீதி

## "மக்கள் அஞ்சத் தேவையில்லை"

பொதுத் தேர்தலையடுத்து கலவரம் ஏற்படலாம் என்று தலைநகரில் பரவிவரும் வதந்தியால் தமிழ் மக்கள் மத்தியில் பீதி நிலவுகிறது.

கொழும்பில் தங்கு விடுதிகளில் இருந்த சில தமிழ் குடும்பங்கள் வவுனியாவுக்கு சென்றுள்ளன. ஏனையோரும் செல்லதா இருப்பதா என்று மனச் சஞ்சலத்தில் காணப்படுகின்றனர்.

விஷமச் சக்திகள் சில பரப்பிவரும் வதந்தியே பீதிக்கு காரணமாகும்.

சகல நிலைகைளுயம் எதிர்கொள்ள பொலிசாரும், பாதுகாப்புப் படையினரும் தயாராக உள்ளனர். யாரும் தேவையற்ற பீதியடையத் தேவையில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க முரசுக்குத் தெரிவித்துள்ளார். இவ்வாறான வதந்திகள் முன்னரும் பரப்பப்பட்டன. இவற்றைவிட்டு யாரும் அச்சமடையத் தேவையில்லை என்றும் அவர் கூறினார்.

பொதுத்தேர்தல் திகதி நெருங்கி வருவதையடுத்து தலைநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் பலப்படுத்தப் பட்டுள்ளன. ●

# தலைநகரில் கதிரை-புற நகரில் யானை!

கொழும்பு நகரில் தேர்தல் பிரசாரத்தில் கதிரைதான் பரவலாகக் காணப்படுகிறது.

அதேசமயம் இன்னொரு வேடிக்கை யையும் அவதானிக்க முடிகிறது. காலையில் நீலக்கொடி அலங்காரங்களோடு நின்று பொதுஜன முன்னணி வேட்பாளர்களுக்கு வரவேற்பளித்து ஜெயவேவா கோசம் போடுவார்கள். பின்னர் மாலையில் அதே பகுதியில் நீலக்கொடிகள் மாயமாகிவிடும். பச்சைக் கொடிகள் பறந்துகொண்டிருக்கும். ஐ.தே.கட்சி வேட்பாளர்கள் வருவார்கள். காலையில் நீலக்கொடி சகிதம் ஜெயவேவா கோசம் போட்ட அதே ஆட்கள் இப்போது பச்சைக்கு ஜெயவேவா போடுவார்கள். எல்லாம் ஒரு நோக்கத்தோடுதான். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்கிறார்கள்.

இதேவேளையில் கொழும்பின் புறநகர் பகுதிகளில் யானை பரவலாகக் காணப் படுகிறது. பச்சைக் கொடிகளும் பறக்கின்றன.

## ஐ.நா. அதிகாரிகள் யாழில்!

யாழ்ப்பாணம் சென்றுள்ள ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் இருவர் அங்குள்ள நிலவரங்களைக் கண்டறிந்து வருகின்றனர்.

யாழ் பொது மருத்துவமனை, ஆயர் இல்லம், குண்டுவீச்சினால் பாதிக்கப்பட்ட பகுதிகள், அகதி முகாம்கள், சேதமடைந்த தேவாலயங்கள் என்பவற்றையும் அவர்கள் பார்வையிட்டனர்.

இந்தியாவில் இருந்து திரும்பி அகதி முகாமில் உள்ளவர்களைச் சந்தித்தும் அவர்கள் உரையாடினார்கள்.

## போன கூரே திரும்பிவந்தார்

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் திரு. சிறிசேன கூரே குடும்பத்தினருடன் வெளிநாடு சென்றிருந்தார். சிறிசேன கூரே இல்லாமையால் கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் பிரசாரங்கள் களைகட்டவில்லை. இதனால் அக்கட்சி முக்கியஸ்தர்கள் சிலர் மேற்கொண்ட சமரச முயற்சியால் கூரே மீண்டும் திரும்பிவந்திருக்கிறார். கட்சிக்குள் அவருக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் உரிய கௌரவம் வழங்கப்படும் என்று உறுதி யளிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

பளிச்-பளிச் அம்பலச் செய்தி

# சொன்னதை மறந்தது ஏனோ?

# மட்டக்களப்பு ஈரோசின் குத்துக்கரணம்!

கிழக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடந்த ஐந்து மாதம் முடிவடைவதற்கிடையே மட்டக்களப்பு ஈரோஸ், தான் சொன்னதையெல்லாம் மறந்துவிட்டது. மக்களும் மறந்திருப்பார்கள் என்று நினைக்கிறது.

இந்த ஈரோஸ் யார் தெரியுமா:
1. எமது தமிழ் பெண்களை கடித்துக்குதறி, கற்பழித்து, சின்னாபின்னப்படுத்தியவர்களுக்கு போராட்டத்தின் புத்திரர்களை இதுவரை காட்டிக்கொடுக்காத நிமிர்ந்த நெஞ்சங்களுக்குச் சொந்தக்காரர்கள் தான் இந்த ஈரோஸ்
2. பசீர்சேகுதாவுத் எம் பி. யுடைய திறமையையும் தமிழர் அரசியல் பற்றிய ஆழ்ந்த அறிவையும் தமிழ் முஸ்லிம் ஒற்றுமைக்காகவும் எமது போராட்டத்தின் அழுத்தத்திற்காகவும் பயன் படுத்தியவர்கள் தான் இந்த ஈரோஸ்
தமிழருக்கான போராட்டத்தில் 15...

மட்டக்களப்பு மாநாகரசபைத் தேர்தலில் 'பிரபா' என்று போட்டியிட்ட பிரபாகரன் என்பவர் தலைமையிலான ஈரோஸ் கொழும்பு ஈரோஸ் மீதும், திருமலை ஈரோஸ் மீதும் கடுமையான கோபத்தில் இருந்தது.

தேர்தல் முடிவடைந்த பின் வாய்திறந்த கொழும்பு ஈரோஸ் பேச்சாளர் திரு.சுதாகரன், திருமலையில் போட்டியிட்ட குழு மட்டுமே ஈரோஸ் என்று உரிமை பாராட்டியிருந்தார்.

அதனால் சீற்றமடைந்த மட்டக்களப்பு பிரபாகரன் கொழும்பு ஈரோஸ் 'வியாபாரிகள் கூட்டம்' என்று கண்டித்துத் தீர்த்தார்.

அதுமட்டுமல்ல கடந்த மாநாகசபைத் தேர்தலில் திருமலை ஈரோஸ் ரெலோவுடன் சேர்ந்து போட்டியிட்டது. மட்டக்களப்பு ஈரோஸ் ரெலோவுடன் மோதித் தோல்வி கண்டது.

மட்டக்களப்பு மாநகர மேயர் திரு. செழியன் பேரின்பநாயகத்தைத் தாக்கும் அளவுக்குக்கூட மாநகரசபைக் கூட்டங்களில் பிரபாகரன் ஆவேசப்பட்டார்.

ஆனாலும், பாராளுமன்ற உறுப்பினராகி விடும் அவரது ஆசையை சாதகமாகப் பாவித்து கொழும்பு ஈரோஸ் தலைவர் சங்கர்ராஜி பிரபாகரனை அழைத்து ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை கையில் கொடுத்து தாஜா பண்ணிவிட்டார்.

எம்.பியாக வந்தால் ஈரோசில் முக்கிய தலைமைப் பொறுப்பு உண்டு என்றும் கூறி ஐஸ்வைக்க பிரபா குளிர்ந்துவிட்டாராம்.

மாநகர சபை நிர்வாகத்தை ரெலோவிடம் இருந்து பிடுங்க ஐ.தே.கட்சியுடன் இரகசிய பேரம் நடத்திய பிரபா, சங்கர்ராஜி கொடுத்த சில லட்சங்களால் கூளாகிப்போனார்.

சென்றமுறை மட்டக்களப்பு மாநகர சபைத் தேர்தலில் அவர் பேசிய வீர வசனங்களையும், தேர்தல் நடந்து முடிந்தபின் அவர் நடத்திய திருவிளையாடல்களையும் மட்டக்களப்பு வாக்காளர்கள் இன்னமும் மறந்துவிடவில்லை.

கடந்த மாநகர சபைத் தேர்தலில் "யார் இந்த ஈரோஸ் ஹீரோக்கள் என்ற கேள்விக்கு ஈரோஸ் பதில்" என்று மஞ்சள் கடதாசியில் சிவப்பு மையால் அச்சாகிய வாசகங்கள் கொண்ட பிரசுரம் ஒன்று கோவிந்தன் றோட், மட்டக்களப்பில் உள்ள ஈரோஸ் காரியாலயத்தால் வெளியிடப்பட்டது.

அந்தப் பிரசுரத்தில் 'ஈரோஸ் யார் தெரியுமா' என்று கேட்டு 7 விளக்கம் கொடுக்கப்பட்டிருந்தது.

அதில் இரண்டாவதாக இருந்த விளக்கம் இதுதான்:

"2) பசீர் சேகுதாவூத் எம்.பியுடைய திறமையையும், தமிழ் அரசியல் பற்றிய ஆழ்ந்த அறிவையும் தமிழ்-முஸ்லிம் ஒற்றுமைக்காகவும், எமது போராட்டத்தின் அழுத்தத்திற்காகவும் பயன்படுத்தியுள்ளவர்கள்தான் இந்த ஈரோஸ்."

இதுதான் ஈரோஸ் கடந்த மாநகர சபைத் தேர்தலில் வெளியிட்ட அட்டகாசப் பிரசுரத்தில் இருந்த வாசகம்.

இப்போது பசீர் சேகுதாவூத் மட்டக்களப்பில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்.

"திறமையும், அரசியல் அறிவும் உடைய" பசீர் சேகுதாவூத்தை இப்போது மட்டக்களப்பு ஈரோஸ் துரோகி என்று ஏன் சொல்கிறது? ஏன் எதிர்த்தும் போட்டியிடுகிறது?

எப்படியோ மட்டக்களப்பில் இம்முறை பிரபாகரன் மூலமாக ஈரோஸ் மரண அடி வாங்கப்போவது படு நிச்சயம் என்கிறார்கள் பலர்.

# தொலைக்காட்சிப் பிரசாரத்தில் பச்சைப் பொய்!

# அம்பாறையில் வெல்ல தமிழ் குழுவின் நாடகம்

(அம்பாறையிலிருந்து உதயன்)

கடந்த 10.5.94 அன்று இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பாக அக்குழுவின் செயலாளர் நாயகம் திரு.சுரேஸ் பிரேமச்சந்திரன் உரையாற்றினார்.

அவர் தனது உரையில் அம்பாறை மாவட்டத்தில் தமது குழு போட்டியிடவில்லை என்று கூறினார்.

ஆனால், அம்பாறையில் சுயேச்சைக்குழு சார்பில் போட்டியிடும் கோபால கிருஷ்ணனுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்பிற்கும் இடையே இரகசிய ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் ஈ.பி.ஆர். எல்.எஃப். சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர் கோபால கிருஷ்ணன்.

அதன்பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். குழுவில் இருந்துகொண்டே வேறு அமைப்புக்களில் சேருவதற்கு நோட்டம் பார்த்தார்.

இதற்கிடையே பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். என்ற பெயரில் தேர்தலில் நின்றால் வெற்றிபெற முடியாது என்பதால் புது வேட்பாளராக தன்னைக் காட்டிக்கொள்ள திட்டமிட்டார்.

ஆனால் வேறெந்த தமிழ் அமைப்பும் அவருக்கு ஆதரவளிக்க முன்வரவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். மட்டுமே அவரது தேர்தல் செலவுக்கு மூன்று இலட்சம் ரூபாய்வரை கொடுத்து தேர்தலில் நிற்குமாறு கூறியது.

இதன்மூலம் சுயேச்சைக்குழு என்னும் பெயரில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அம்பாறை மாவட்ட மோதலில் மறைமுகமாக போட்டியிட முன்வந்தது.

'தமிழ் மகாசங்கத்தை' தனது இரகசிய பதவி ஆசைத் திட்டத்திற்கு திரு. கோபாலகிருஷ்ணன் பயன்படுத்த முற்பட, விசயம் அறிந்து விழித்துக் கொண்ட தமிழ் மகாசங்கம் உடனே ஒரு அறிக்கை விட்டது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தாம் யாரையும் ஆதரிக்கப் போவதில்லை. தேர்தலில் பங்குபற்றப் போவதுமில்லை என்று தமிழ் மகாசங்கத் தலைவரும், செயலாளரும் கையொப்பமிட்டு விடுத்த அறிக்கை பத்திரிகைகளிலும் வெளி வந்திருந்தது.

ஆனால் தொலைக்காட்சியில் உரையாற்றிய ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் திரு. சுரேஸ் பிரேமசந்திரன் தமிழ் மகாசங்கத்தின் பெயரை பாவித்து தமது மறைமுக வேட்பாளருக்கு ஆதரவு தேடினார்.

அதிலும் பெரிய வேடிக்கை என்னவென்றால், கோபாலகிருஷ்ணன் தமிழ் மகாசங்க வேட்பாளர் என்றும் அப்பட்டமாக பொய் ஒன்றை அவர் கூறியிருந்தார்.

தமிழர்களது பிரதிநிதித்துவத்தை காப்பாற்ற அம்பாறையில் போட்டியிடுவதை தாம் தவிர்த்துவிட்டதாகச் சொல்லி நம்ப வைக்க தமிழ் மகாசங்கத்தின் பெயரை இழுத்ததை அச்சங்கத்தின் உறுப்பினர்கள் கண்டித்துள்ளனர்.

இதன் மூலம் வெளிப்படும் உண்மை யாதெனில், அம்பாறையில் போட்டியிடும் திரு. கோபாலகிருஷ்ணன் ஈ.பி.ஆர்.எல்.எஃப். வேட்பாளர்.

தமிழ் மகாசங்கத்தின் வேட்பாளர் என்று திரு.சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறியது அப்பட்டமாக வாக்காளர்களை ஏமாற்றும் பேச்சாகும். மறுப்பறிக்கைவிட்டிருந்த மகாசங்கத்தின் பெயரை அவர் பயன் படுத்தியது ஏன் என்றால் தமது வேட்பாளரை வெல்லவைப்பதற்கே. ஆக, அம்பாறையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். போட்டியிடுகிறது.

இதேவேளை, தமிழ் மகாசங்கத்தினர் புலிகளுக்கு பயந்து அறிக்கைவிட்டதாகவும், அவர்கள் பயந்த ஆட்கள் என்றும், கோபாலகிருஷ்ணனும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். குழுவினரும் கூறித் திரிகிறார்கள்.

இதேவேளை, அம்பாறையில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஐ.தே.கட்சி ஆகியவற்றுக்கிடையேதான் தமிழ் வாக்குகளை கவர்வதில் நேரடிப்போட்டி ஏற்பட்டுள்ளது. தமிழ் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க நினைக்கும் வாக்காளர்கள் வெற்றி அலை உள்ள பக்கம்தான் வாக்களிப்பார்கள்.

அநேகமாக கூட்டணிக்கோ, அல்லது ரெலோவுக்கோ ஒரு ஆசனம் கிடைக்கலாம். அல்லது கடும்போட்டியால் இருக்கும் ஒரு பிரதிநிதித்துவம் கூட தமிழருக்கு இல்லாமல் போகலாம்.

## வாக்குப்போடலாம்தான் ஆனால்.....

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா நகரில் வாக்குகேட்டு வரும் வேட்பாளர்களை வாக்காளர்கள் தமது பிரச்சனைகளைக் கூறி தொல்லைப் படுத்துகிறார்களாம்.

நகர மக்களைப் பாதித்துள்ள குடிநீர் கட்டண அதிகரிப்பை உடனடியாக குறைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். அவ்வாறு குறைக்கும் பட்சத்தில் தமது வாக்குகளை அளிப்போமென வேட்பாளர்களிடம் பொது மக்கள் கூறுகின்றனர். தமக்கு ஆதரவு தேடிச்செல்லும் வேட்பாளர்கள் வாக்காளர்களிடம் இப்பிரச்சனை பற்றி தர்க்கம் புரிய வேண்டியுள்ளதாம். ஒரு வேட்பாளர் இடைநடுவில் திரும்பிச்சென்ற சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

## இணைப்பு வேலைகள் பூர்த்தி! மின்சாரம் கிடைப்பது எப்போது?

(மன்னார் நிருபர்)

மன்னார் தாராபுரம் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கவென மேற்கொள்ளப்பட்ட மின்கம்பி இணைப்பு வேலைகள் யாவும் கடந்த ஆண்டு பூர்த்தியாகிவிட்டன. இதற்கான மின் படி குறைமாற்றியும் (டிரான்ஸ் போமர்) இணைக்கப்பட்டு விட்டது. ஆனால் இன்றுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

மன்னார் நகரத்திற்கு மின்சாரம் தற்போது ஜெனரேட்டர் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது. அதுவும் ஒரேஒரு ஜெனரேட்டரை வைத்துக் கொண்டு ஒரு நாளைக்கு 2 மணிநேரம் வரை மட்டுமே மின் விநியோகம் நடைபெற்று வருகிறது.

இதன் காரணமாக தாராபுரத்திற்கு மின்சாரம் வழங்க முடியாதுள்ளதாக மன்னார் மின்சார சபை பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையிலே நீர் மின்சாரத்தைப் பெறாமலிருந்த ஒரேஒரு மாவட்டமான மன்னாருக்கு சென்ற 1990ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் பல கோடி ரூபாய் செலவில் நீர் மின்சார கேபிள்கள் பொருத்தப் பட்டு பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. பின்பு ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக மின்சாரம் வழங்க முடியாமல் போய்விட்டது. எனினும் உடனடியாக நீர் மின்சாரத்தை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிகிறது.


பாராளுமன்றத் தேர்தல் 1994

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் 10

சுயேச்சைக் குழு -1

**தமிழ்த் தேசிய ஒற்றுமை முன்னணியின் அங்கமான ஈரோஸின் சுயேச்சைக் குழு -1 ல் போட்டியிடும் புளொட் (PLOTE) இயக்கத்தின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் உபதலைவர் தோழர் கரவை ஏ. சி.கந்தசாமி. பிரச்சாரச் செயலாளர் செ.கிருபைராஜா(கிருபா) ஆகியோரின் வெற்றியை உறுதிசெய்யுங்கள்.**






2

13

கரவை
ஏ. சி. கந்தசாமி



செ.கிருபைராஜா
(கிருபா)

விளம்பரப் பகுதி



மலையாள மாந்திரீகம்

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கடந்த 27 வருடங்களாக மாந்திரீகத் துறையில் உண்மையான, நிலையான சேவை.

உண்மையை அறிய நேரில் வாருங்கள்.
உங்கள் குறை என்ன?
வாழ்வில் நிந்திப்பா?
வறுமையில் தவிப்பா?
இஷ்ட தேவவைகளில் குறையா?
இஷ்டப்பட்டவனையோ,
இஷ்டப்பட்டவளையோ
தீர்க்கமாகவே அடைந்து தீர வேண்டுமா? இன்னலுக்குப் பின் இன்னலாக வரும் நறுவாயில் எதிர் நீச்சலுக்கு ஏணிப்படியாக பற்பல உற்சாடனங்கள் உண்டு. இன்னும் வசிய ரொஃபி, தீர்க்க முடியாது என முடிவெடுக்கப்பட்ட ஆஸ்துமா நோய், தீராத நோய்கள் அனைத்துக்கும் அம்மனிடம் வாருங்கள்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் 20முதல் 31 வரை நிச்சயம் சேவையில் இருப்பேன். இத்தினங்களில் பூஜைகள், ஆராதனைகள், அன்னையின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதங்கள் பெறலாம். அதுமட்டுமல்ல. எமது பிரிவில் கைரேகை நிபுணத்துவம், வாழ்க்கைச் சுவடி சாஸ்திரம், ஜாதகக் குறிப்பு, எண் ஞானக் குறிப்பு, இனியும் வேறு என்ன என்பதற்கு நேரில் வரவும்.

வறியவர் எனக்கண்டால் எமது ஸ்தாபனத்தில் தனி இடம்

தலைமைப்பீடம்
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை
காம்பிளக்ஸ்
நுவரெலியா.

கொழும்பில்-
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.

தொலைபேசி: 052-2508, 052-3093, 01-434225

வெளி நாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
FAX: 0094 2508, 0094 3093

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

## நாரதர்

# கலவரம் வருமா?

## விஜயதுங்கா-சந்திரிகா அனுமதிப்பார்களா?

பரபரப்பான நிகழ்வுகள் வதந்திகளையும் உற்பத்தி செய்து விடுகின்றன.

தற்போதைய பரபரப்பான நிகழ்வு தேர்தல் திருவிழா.

ஆவேசம் கொண்ட பக்தர்கள்போல் கட்சித் தொண்டர்கள் களத்தில் இறங்கி கச்சை கட்டி நிற்கிறார்கள்.

புதிய ஆட்சித் தேரின் வடம் பிடித்திழுக்க தொடைதட்டி, தோள் தட்டி சமயத்தில் உற்சாகபானம் உள்ளே தள்ளி கட்சிக் கொடிகளோடு ஆரவாரிக்கிறார்கள்.

தேரில் ஏறி பவனிவர ராஜாவும்-ராணியும் காத்திருக்கிறார்கள்.

பொதுமக்கள் அலை யாரை உயரத்தில் தூக்கி தேர்த்தட்டில் உட்கார வைக்கப்போகிறதோ தெரியவில்லை.

ஆனால் ராஜாவின் தேரும் தயாராக



இருக்கிறது. அது பச்சை நிறத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

ராணியின் தேரும் தயாராக இருக்கிறது. அது நீல நிறத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

நீலத் தேரின் வடத்தை பிடித்து நிற்பவர்களிடம் ஒரு வேகம் இருப்பதை அவதானிக்கவும் முடிகிறது.

தேர்தல் பிரசார முதல் சுற்றில் நீலத்தின் கைதான் மேலோங்கியிருந்தது.

இப்போது இரண்டாவது சுற்று பிரசார யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது.

நாடெங்கும் உள்ள நிலவரத்தைப் பொதுவாக கணித்துப் பார்த்தால் சமபல நிலை தெரிகிறது.

ஆயினும்-ஆட்சி மாறப் போகிறது. 17 வருட ஐ.தே.கட்சி ஆட்சி ஆகஸ்ட் 16 நள்ளிரவோடு மூட்டை முடிச்சைக் கட்டிவிடவேண்டியதுதான் என்னும் பிரசாரம் மிக திட்டமிட்டு வெகு நேர்த்தியாக முன்னெடுக்கப்படுகிறது.

17 வருட கால ஆட்சியோடு பத்திரிகைகளுக்கு வளர்ந்திருக்கும் முரண்பாடு ஐ.தே.கட்சிக்கு பாதகமாகியிருக்கிறது.

ஆட்சி மாறப்போவது உறுதி என்ற பத்திரிகைகள் ஏற்படுத்திவரும் தோற்றப்பாடு சந்திரிக்கா அலை மேலோங்க பெருதவி புரிவதை மறுக்கமுடியாது.

இந்த நேரத்தில்தான் தேர்தல் முடிந்ததும் தெற்கே கலவரம் வரலாம் என்றொரு கதை எப்படியோ பரவலாகியிருக்கிறது.

அதுவும் தெற்கில் உள்ள தமிழர்கள் மத்தியில் தினசரி கலவரத்தோடு பேசப்படுகின்ற ஒரு செய்தியாக அது மாறி இருக்கிறது.

தெற்கின் இருபெரும் கட்சிகளும் தமது பலப்பரீட்சையின் இடையே தங்களை பந்தாக மாற்றிவிடுவார்களோ என்று தமிழர்கள் அச்சப்படுகிறார்கள்.

இரு கட்சிகளுமே இனவாதப் பேச்சுக்களை ஓரம் கட்டியுள்ளன. ஆயினும் அதனை உணர்வுபூர்வமான மாற்றமாக கருத தமிழ் மக்கள் தயக்கம் காட்டுகிறார்கள்.

அதனால்தான் இருபெரும் அணிகளில் ஒன்று தோல்வியுறும்போது தமிழர்களுக்கு எதிரான துவேசம் தூண்டிவிடப்படுமோ என்று சந்தேகிக்கிறார்கள்.

கடந்தகாலத்தில் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிப்பீடம் ஏறுவதற்கு இனவாதப் பேச்சுக்கள், இனத்துவேச உணர்வுகள் தட்டிக் கொடுக்கப்பட்டன.

இப்போது அந்த நிலை இல்லை. ஆனாலும் தமிழர்கள் நாட்டைப்பிரித்து எடுத்துவிடுவார்கள். அப்படி பிரித்தெடுத்துவிட்டால் சிங்களவர்கள் கதி அதோகதிதான் என்னும் அபிப்பிராயம் சிங்கள மக்களிடம் குறிப்பிட்டளவு இருக்கவே செய்கிறது.

அந்த அபிப்பிராயத்திற்கு இரு பெரும் அணிகளுமே விட்டுக் கொடுத்துள்ளன.

அதனால்தான் பொதுஜன முன்னணி இனப்பிரச்சனைத் தீர்வை தெளிவாகச் சொல்லாமல் 'கழுவுற தண்ணியில் நழுவுற மீனாக' பேசிவருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி வடக்கு-கிழக்கை பிரித்தே தீருவோம் என்று பிரசாரம் செய்கிறது.

ஆனால், கடந்தகாலத்தில் இருந்தது போல் இல்லாமல் தற்போது சிங்கள மக்களிடம் ஒருமாற்றம் தெரிகிறது.

தமிழர்களுக்கு எதுவும் கொடுக்கக்கூடாது என்ற பேச்சுக்கு பதிலாக தமிழர்களுக்கு ஏதாவது கொடுத்தேயாகவேண்டும் என்ற கருத்து தெற்கே வளர்ந்திருக்கிறது.

ஏதாவது கொடுத்தேயாக வேண்டும் என்று சொல்லும்போதே அதிகமாகக் கொடுத்து விடக்கூடாது என்ற மனோபாவமும் காணப்படுவதை மறந்துவிடக்கூடாது.

அந்த மனோபாவம் வளர பௌத்தமத பீடங்கள் சிலவும், அரசியல் கட்சிகளது வெளிப்படையில்லாத போக்குகளும் உதவிகரமாக உள்ளன.

புதிய முகம், இளைய இரத்தம் என்றெல்லாம் சொல்லப்படும் திருமதி சந்திரிக்காவால்கூட அந்த மனோபாவத்தை மாற்றமுடியவில்லை.

தமிழர்கள் தமக்குரியதைத்தான் கேட்கிறார்கள். வடக்கு-கிழக்கு அவர்களுக்குரியது. அதனை ஏன் நாம் பிரிக்கவேண்டும் என்று சந்திரிக்காவால் பேசமுடியவில்லை.

தமிழர்களுக்கு நாட்டின் ஒரு பகுதியை கொடுத்துவிட்டார். பிரபாவோடு இரகசியப் பேச்சு நடத்துகிறார் என்று எதிரணிகளால் குற்றம்சாட்டப்பட்ட பிரேமாவால்கூட துணிச்சலான ஒரு தீர்வுத்திட்டத்தை முன்னர் முன்வைக்க முடியவில்லை.

இவ்வாறான நிலையில்தான் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தோல்வியுறும் அணி தமிழர்களது வாக்குகளால்தான் தமக்கு பாதகம் என்று நினைத்தால் நிலமை விபரீதமாகிவிடும் என்று தமிழர்கள் பயப்படுகிறார்கள்.

ஆனால்- இன்றைய உள்நாட்டு அரசியல் நிலவரம் அப்படி ஒரு கலவரம் பரவலாக வருவது சுலபமானதல்ல என்பதையே உணர்த்துகின்றது.

இருபெரும் அணிகளுமே தமிழ்-முஸ்லிம் மக்களது வாக்கு வங்கிகளையும் நம்பியிருக்க வேண்டி இருக்கிறது.

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றாலும்கூட, அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சியை ஒரு கை பார்க்கவே எதிரணி திட்டமிடும்.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளது மொத்த எண்ணிக்கை முக்கியமான விடயம் என்பதால் சிறுபான்மை மக்களை பகைத்துக் கொள்ள எதிரணி நினைத்தும் பார்க்காது.

'இனவாதம் இல்லாத புதிய முகம்' என்று ஏற்பட்டுவரும் 'இமேஜ்' கெட்டுப்போக சந்திரிக்கா விரும்பமாட்டார்.

எதிரணிக்குள் குறிப்பாக சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் முக்கிய இடங்களில் இருந்த இனவாத உணர்வு உள்ளவர்கள் ஆளும்கட்சியின் பக்கம் போய்விட்டார்கள்.

தென் மாகாணசபைத் தேர்தலில் இனவாதத்தை தோற்கடித்தவர்கள் என்று தம்மைக் கூறிக்கொண்ட எதிரணி திடீரென்று இனவாதத்தை கையில் எடுப்பது சாத்தியமானதல்ல.

மறுபுறம் ஆளும்கட்சி தோல்வியடைந்தால்கூட அதற்குள் உள்ள அணிகள் தம்மை பலப்படுத்திக்கொள்ளவே நினைக்க வேண்டியிருக்கும்.

ஏற்கனவே யாழ் நூலக எரிப்பு விடயத்தில் திரு. காமினி திசநாயக்கா இணைத்துப் பேசப்பட்டார். அதற்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று மறுப்பதோடு அமைச்சர் தொண்டமானோடு நெருங்கி மலையக தமிழ் மக்களிடமும் ஆதரவினைப் பெறும் அரசியலை ஆரம்பித்திருக்கிறார்.

தேர்தலில் ஐ.தே.கட்சி தோல்வியடைந்தால்கூட, கட்சிக்குள் தலைமை ஏற்கும் புதிய அணிக்கு தேசிய ரீதியில் செல்வாக்கு வேண்டியிருக்கும்.

அதுதவிர, வடக்கு-கிழக்கு பிரிப்பு பற்றி ஆளும்கட்சி நேரடியாகப் பேசினாலும்கூட தமிழ் மக்கள்மீது வன்முறையைத் தூண்டிவிடும் எண்ணம் அதற்கு இருக்கமுடியாது.

தேர்தலில் தோல்வியடைந்தமையால் சட்டம்-ஒழுங்கு மீறல்களுக்கு இடமளித்துவிட்ட ஒரு கட்சியாக, ஆட்சியாக தன்னை வெளிப்படுத்த ஐ.தே.கட்சி விரும்பாது.

ஆக, இருபெரும் அணிகளில் எந்தவொரு அணி வெற்றிபெற்றாலும், தோல்வியடைந்தாலும் தமிழ் மக்களுக்கு எதிராக கலவரம் ஏற்படும் என்ற பயம் தேவையற்றது.

வேண்டுமானால் இரு அணிகளினதும் ஆதரவாளர்களிடையே மோதல்கள் நடக்கக் கூடும். அதனால் ஊரடங்குச் சட்டம் வாக்களிப்பு முடிந்தவுடன் போடப்படலாம்.

எதிரணி வெற்றியடைந்தால் 17 வருடத்தின் பின்னர் கிடைத்த அதிகாரத்தை எவ்வாறு உறுதிப்படுத்தலாம் என்பதில்தான் உடனே நாட்டம் கொள்ளும். தம்மை ஒரு ஜனநாயக அரசாக காட்டிக்கொள்வதில் ஆரம்பவேகம் காட்டும்.

ஆளும்கட்சி வெற்றிபெற்றால் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் பற்றிய வியூகங்களை வகுப்பதிலும், மேலும் வாக்காளர்களை கவர்வதிலும் அக்கறை செலுத்த வேண்டியிருக்கும்.

தோல்வியடைந்தால்கூட வீம்புக்கு மல்லுக்கட்டி நிற்க ஐ.தே.கட்சி தலைமை தயாராக இல்லை. ஜனாதிபதி விஜயதுங்காகூட கௌரவமாக ஒதுங்கிக்கொள்ளவே விரும்புவார்.

எனவே- கலவரம் என்ற வதந்தியில் உண்மையிருக்க முடியாது.

கடந்தகாலத்தில் நடந்துமுடிந்த கலவரங்களுக்கு அரசாங்கங்கள் அனுசரணையாக இருந்தன என்பதை மறந்துவிடமுடியாது.

அடக்கமுடியாத நிலையில் அல்ல, அடக்க விரும்பாமல் இருந்தமையால் கலவரம் பரவலாகியது.

தற்போது அந்த நிலை இல்லை என்பது வெளிப்படை.

ஆனால் இந்த நிலவரத்தையெல்லாம் தலைகீழாக மாற்றி ஒரு கொதி நிலையை உருவாக்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் புலிகள்.

மிக முக்கிய கட்டத்தில் தெற்கே அவர்கள் ஏதவாது செய்துவிட்டால் அது சில சமயம் வேண்டாத சூழ்நிலையை விளைவிக்கலாம்.

□□

அஷ்ரப்-சந்திரிக்கா ஒப்பந்தம் பற்றிய ஆளும் கட்சி மற்றும் தினேஷ் தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் எதிர்பிரசார இலவச விளம்பரம் அந்த ஒப்பந்தத்தின் பிரபலத்தை அதிகமாக்கிவிட்டது.

முஸ்லிம் காங்கிரசை பொதுஜன முன்னணி பூரணமாக நம்புகிறதோ இல்லையோ அதன் தலைவர் அஷ்ரப் கிழக்கில் ஒரு வலுவான தளத்தில் நிற்பதை நம்பித்தான் ஆகவேண்டும்.

"ஐ.தே.கட்சியும்-சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் பேரினவாதக் கட்சிகள்தான். ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் பொதுஜன ஐக்கிய முன்னணியில்தான் இணைந்திருக்கிறது." என்று வாழைச்சேனைப் பொதுக்கூட்டத்தில் மு.காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் பேசியிருக்கிறார்.

ஆனால், என்னதான் பெரிதாக பொதுஜன முன்னணி பற்றிக் கூறப்பட்டாலும் அதிலே தீர்க்கமான பங்கை வகிப்பது சுதந்திரகட்சியே என்பது தெளிவு.

பொதுஜன முன்னணியின் வேட்பாளர் பட்டியல் முதல் தேர்தல் உத்திகள்வரை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் விருப்பத்தை முதன்மைப்படுத்தியே உருவாக்கப்பட்டுள்ளன.

பொதுஜன முன்னணி ஆட்சிக்கு வந்தாலும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியே முக்கிய முடிவுகளை தீர்மானிக்கும் இடத்தில் இருக்கும்.

திருமதி. சந்திரிக்கா சுதந்திரக் கட்சியின் செல்வாக்குமிக்க தலைவி. அக் கட்சிக்கு புதிய வலுவை ஏற்படுத்த திருமதி. சிறிமாவோ அம்மையாரால் அழைக்கப்பட்டவர்.

அதுமட்டுமல்ல, பொதுஜன முன்னணியில் உள்ள கட்சிகள் எதுவும் சுதந்திரக்கட்சியோடு சமநிலையில் நோக்கப்படக் கூடியவையல்ல.

ராமர் பாலம் போட அணில் செய்த உதவிபோல, சிறீலங்கா சுதந்திரக்கட்சி பதவிக்குவர பொதுஜன முன்னணியில் உள்ள கட்சிகள் தமக்குரிய வாக்குகளை கொடுத்து உதவலாம்.

திறந்த பொருளாதாரக் கொள்கை என்றால் துள்ளிக்குதித்த இடதுசாரிகள் இப்போது வாய்மூடி இருப்பது ஒன்றே போதும். அவர்கள் இருப்பதைக் கொடுத்து ஏதோ கிடைப்பதை பெற்றுக்கொள்ளும் நிலையில் இருக்கிறார்கள் என்பதனை அறியலாம்.

எனவே- சிறிலங்கா சுதந்திரக் கட்சி பேரினவாதக் கட்சிதான். ஆனால் பொதுஜன முன்னணி அதற்கு நேர்மாறானது என்று மு.காங்கிரஸ் தலைவர் பேசியிருப்பது உறுத்தலாக இருக்கிறது.

தனது எதிரணிகளது வாயை அடைக்கும் அவசரத்தில் உண்மை நிலைக்கு மாறாக அவர் பேசிவிட்டதாகவே தோன்றுகிறது.

அதேசமயம் அஷ்ரப்-சந்திரிக்கா ஒப்பந்தம் என்றவுடன் அதில் ஏதோ மர்மம் இருப்பதுபோல ஆளும் கட்சி மெதுவாகவும், தினேஷ் குணவர்தனாவின் கட்சி உரத்தும் பேசுவது அர்த்தமற்றது.

ஒப்பந்தம் என்றவுடன் அதுவும் சிறுபான்மையினரோடு பெரும்பான்மையோர் செய்யும் ஒப்பந்தம் என்றவுடன் தென்னிலங்கைத் தலைவர்கள் உடனே புரளிகளை கிளப்பிவிடுகிறார்கள்.

பண்டா-செல்வா ஒப்பந்தத்திற்கும் அப்படித்தான் நடந்தது. டட்லி-செல்வா ஒப்பந்தமும் அதே கதைதான்.

இவர்கள் உண்மையாகவே ஒப்பந்தங்களை கண்டு பயப்படவில்லை. அந்த ஒப்பந்தங்கள் யாருக்கிடையே செய்யப்படுகிறதோ அவர்களை அரசியல் ரீதியாக தோற்கடிக்க ஒரு வாய்ப்பாக ஒப்பந்தம் பற்றிய சந்தேகங்களை கிளப்பி விடுகிறார்கள்.

சென்ற முறைகள் போல இம்முறை தினேஷ் குணவர்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி இனவாதத்தை வெளிப்படையாகப் பேசவில்லை.

ஆனால் சந்திரிக்கா-அஷ்ரப் ஒப்பந்தம், வடக்கு-கிழக்கு பிரிப்பு என்று அக்கட்சி பேசிவருவதும் மறைமுகமான இனவாதம்தான்.

தமிழர்களுக்கோ, முஸ்லிம்களுக்கோ அதிகமாக கொடுக்க அனுமதிக்கமாட்டோம் என்னும் மறைபொருள் அந்தப் பேச்சுக்களில் தெரிகிறது.

ஏதோ தமிழர்களும், முஸ்லிம்களும் சிங்களவர்களுக்கு உள்ள உரிமையில் பங்கு கேட்பது போலவும், சந்திரிக்கா தங்களைக் கேட்டதைக் எடுத்துக் கொடுக்க நினைப்பது போலவும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.



இவ்வாறான பேச்சு பேரினவாதமே அல்லாமல் வேறென்ன? என்று கேட்பதில் நியாயம் இருக்கிறது.

ஆட்சியமைப்பில் தமிழ்-முஸ்லிம் சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் பங்குவகிக்கக்கூடிய சூழல் ஏற்பட்டால் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும் நெருக்கடிகளைக் கொடுப்பதற்கு சாதகமாகலாம்.

அந்த வகையில் பொதுஜன முன்னணியின் ஒரங்கமாகவிருந்து ஆட்சியில் பங்குகொள்ளும் அஷ்ரப் முடிவை கண்டிக்கமுடியாது.

ஆனால், அவ்வாறு ஒரு நிலை ஏற்பட்டால் மு.காங்கிரஸ் எப்படி நடந்து கொள்கிறது என்பதை பொறுத்தே, அபங்களிப்பு பற்றிய சரியான கணிப்பைக் கூறமுடியும்.

ஏனெனில் ஐ.தே.கட்சி ஆட்சியிலும் முஸ்லிம் அமைச்சர்கள் பலர் இருந்துள்ளார்கள். அவர்களிலே சிலர் தனிப்பட்ட ரீதியில் வளர்ந்தளவுக்கு அவர்கள் சமூகம் வளரவில்லை என்பது முஸ்லிம் மக்களது குறைபாடாக இருக்கிறது.

அந்தக் குறைபாடுகளும் முஸ்லிம் காங்கிரஸ் அலைக்கு ஒரு காரணம் என்பதும் மறுக்கமுடியாதது.

---

## அதிரடி அய்யாத்துரை



தமிழ் வேட்பாளர்கள் பகிரங்க கூட்டம் நடத்துறதிலை பிரியப் படேல்லையாம். கூட்டமும் சேராது- என்பது ஒரு காரணம். இன்னொரு காரணம் ரெண்டு எழுத்தார் ஏதாவது விசேஷம் காட்டிப் போடுவினமோ எண்ட திக்திக்.

கொழும்பிலை எங்கடை ஆட்கள் பலர் வாக்காளர்களா பதிவு செய்யேல்லையாம். எல்லாம் 83 அனுபவம்தான். வாக்காளர் பட்டியலை வைச்சத்தான் வீடுதேடி வந்து ரகளை நடந்ததாம்.

வடக்கு-கிழக்கு யுத்த நிலவரப்படி கடந்த சில வாரமாய் உயிரிழப்பு புள்ளிவிபரம் வீழ்ச்சி. உஷ்ண நிலை அங்கை சற்றுக் குறைய தெற்கிலே உயிரிழப்பு புள்ளிவிபரம் ஏறியிருக்குதாம். காரணம் எலக்சன் உஷ்ணம் அதிகமாகியிருக்கு. பச்சை அணி பிரசுரம் அடித்த அச்சகம் ஒண்டும் கல்லெறியாலை காயப்பட்டிருக்குதாம்.

இந்தமுறைத் தேர்தலிலை போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களிலை ஆள்காவி ஏஜென்சிகள் முகங்களும் தெரியுது. பதவி கிடைச்சா காவுற தொழிலை விட்டுபோட்டு சனத்தின்ரை கடனை தீர்ப்பினமோ அல்லது பதவியைச் சொல்லியே இன்னும் பலரிட்டை வாங்கிக் குவிப்பினமோ? ஆனால் ஒண்டு பாருங்கோ அந்த முகங்களிலை எதுவும் வெல்லும் மாதிரித் தெரியேல்லை. ஆட்களை கொண்டுபோய் இடையிலை தொங்கவிட்டுப்போட்டு, இஞ்சை தேர்தலிலை தொங்கிக் கொண்டு இருக்கினம்.

தமிழ் கட்சி செயலாளர் ஒருத்தர் சந்திர ஒளி இழந்து பிரமைபிடிச்சது மாதிரி இருக்கிறாராம். அவர் வாயைத் திறந்தா ஒரே வசைதானாம். வன்னியிலையும் அவருக்கு இடமில்லை. அவரைவிட அவர் கட்சியிலை இருக்கிற ரெண்டுபேர் அதிக விருப்பு வாக்கு வாங்கப்போகும் செய்தியாலை அவர் 'அப்செட்' ஆகியிருக்கிறாராம். தோல்வி நிச்சயம். ஆனால் விருப்பு வாக்குகூட குறைய விழுமே எண்டதுதான் விரக்திக்கு காரணமாம். போன எலக்சனிலை சனத்தை பார்த்து புள்ளடி போடுறது எண்டா போடுங்கோ. போடாட்டி விடுங்கோ. ஆனால் நாங்கள்தான் வருவம் எண்டு சொன்ன கட்சியல்லோ. நினைச்சா கவலை வரும்தானே.

பச்சை அணி முன்னாள் செயலாளர் ஏற்கனவே நான் சொன்னது மாதிரி வெளிநாட்டுக்குப் பறந்துவிட்டார் பார்த்தியளோ? பிரச்சனையில்லாமல் கௌரவமா கழறத்தான் பார்த்துக் கொண்டிருந்தாராம்.

முன்னாள் பெரியவரின் பாரியார் தேர்தல் போட்டியிலை ஆம்-இல்லை எண்டு தடுமாறினதுக்கு மகனும் மகளும்தான் காரணமாம். மகன் ஒருபக்கம் மகள் ஒரு பக்கம் நிண்டு பிடிச்சிழுக்க யார் பக்கம் சாயுறது எண்டு தாய்மனம் துடிக்கும்தானே. முன்னுக்குபின் முரண்பட்ட அறிக்கைகளுக்கு அதுதான் காரணமாம். எப்படியோ கைக்கெட்டினது வாய்க்கு எட்டாமல் போச்சுது.

கொழும்பிலை குமார் குழு வேட்பாளர்கள் சிலர் நுனிநாக்கு ஆங்கிலத்திலை 'டமிள்ஸ்' எல்லாம் தன்மானம் காக்க தங்களுக்கு வாக்களிக்க வேண்டும் எண்டு கேட்கினமாம்.

தேர்தலுக்காக கூட்டணி அமைத்து அதனை ஒற்றுமை எண்டு பக்குவமாக விளக்கும் தமிழ் கட்சிகள் வட்டாரத்திலை விருப்பு வாக்கு வேட்டையிலை மறைமுகமான போட்டி நிலவுதாம்.

தேர்தல் காலம் பாருங்கோ. ஊர்வாதம், சாதி வாதம் பேசி ஊரைப் பிளந்து வாக்குப் பறிக்கிற கோசங்களுக்கு குறைவிருக்காது. பாரதிதாசன் கவிதை ஒண்டு சாட்டையடி மாதிரி வருகுது.

கொலைக்கள மாக்கி விட்டார்
குளிர் நாட்டைத் தம் வாழ்வின்
நிலைக்களம் என்றாரடி-சகியே
நிலைக்களம் என்றாரடி.

ஊர் இரண்டு படுங்கால்
உறவுள்ள கூத்தாடிக்குக்
காரியம் கைகூடுமாம்-சகியே
காரியம் கைகூடுமாம்.

கூத்தாடிகள் என்பது வேட்பாளர்களுக்கு பொருந்துமோ?

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தேர்தல் அரங்கம்

## திரைமறைவுச் செய்திகள்

### -ஒற்றன்- வன்னி ரவுண்டப்

வவுனியா மாவட்டத்தில் தனக்கு இரு ஆசனங்கள் கிடைக்கும் என்று அடித்துக் கூறுகிறது புளொட்.

கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக வன்னியில் நிற்பவர்கள் என்ற சாதகம் புளொட்டுக்கு இருக்கிறது.

கடந்த நகரசபைத் தேர்தலில் கிடைத்த வெற்றி இம்முறை பாராளுமன்றத் தேர்தலை உற்சாகமாக எதிர்கொள்ள புளொட் உறுப்பினர்களைத் தூண்டி விட்டிருக்கிறது.

தமிழ் தேசிய முன்னணி பற்றியும், அது ஒற்றுமையின் வெளிப்பாடு என்றும் பெரிதாகப் பேசினாலும் அதை ஒரு தேர்தல் கூட்டாகவே வாக்காளர்கள் கருதுகிறார்கள்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமக்குள் போட்டித் தவிர்ப்பு உடன்பாடு கண்டுள்ள தேர்தல் கூட்டை தமிழர்களது ஒற்றுமை என்று பொதுப்பட பேசுவது வாக்காளர்களைப் பெரிதாகக் கவரவில்லை.

ஆனாலும் புளொட் அமைப்பினர் வவுனியாவில் மேற்கொண்ட புனரமைப்பு வேலைகள், உதவித் திட்டங்கள் என்பவை வாக்குகளாக மாறி கைகொடுக்கக்கூடும்.

புளொட் வரி வாங்கியது என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். கூறுவதை, புளொட் மிகச் சுலபமாக மறுத்துப் பேசுகிறது.

நாம் வரி வாங்கினாலும் அதிலிருந்து மக்களுக்கும் உதவி செய்துள்ளோம். நிவாரண வேலைகளுக்கு பெரும் நிதி செலவிட்டோம். ஆனால் இந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். மாகாணசபை ஆட்சிக்காலத்தில் மாகாணசபை நிதியை விழுங்கியது மட்டுமல்ல, மக்களிடமும் கப்பம் வாங்கி ஏப்பம் விட்டதை இன்னமும் மக்கள் மறக்கவில்லை. எம்மைக் குற்றம்சாட்ட இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? என்று புளொட் திருப்பிக் கேட்கிறது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் மாகாணசபை கால கட்டாய ஆள்சேர்ப்பு, பணப் பறிப்பு, மற்றும் அதிகார துஷ்பிரயோகங்கள் இன்னமும் மக்கள் மனதில் இருப்பதால் அதன் தற்போதைய ஜனநாயகப் பேச்சுக்களை புளொட் உடைத்துப் போடுவது சுலபமாக இருக்கிறது.

ஆனால் கூட்டணியின் பிரவேசம்தான் புளொட்டுக்கு உண்மையான சவால்.

புளொட் சின்னத்தில் ரெலோவின் தலைவர் செல்வம் போட்டியிடுகிறார். அவர் மன்னார் விடத்தல்தீவைச் சேர்ந்தவர். ஆனால் விடத்தல்தீவு வாக்காளர்கள் புலிகளது கட்டுப்பாட்டில் இருப்பதால் செல்வத்தின் நிலை தடுமாற்றம்தான்.

புளொட் சார்பில் போட்டியிடுவோரில் பாலசந்திரன் என்பவருக்கு வாக்குகளைக் கவரும் பலம் இருக்கிறது. கடந்த நகரசபைத் தேர்தலில் அதிக விருப்பு வாக்குகள் அவருக்கே கிடைத்தன.

புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் உட்பட பலர் கோட், சூட், ரை கட்டி புகைப்படம் எடுத்துப் பிரசுரம் வெளியிட்டுள்ளார்கள். 'தம்பிமார் படிக்கவில்லை' என்று கூட்டணியினர் கிண்டலடிக்காமல் இருக்கட்டும் என்றுதான் இந்த போராளித் தலைவர்கள் அப்படிப் புகைப்படம் எடுத்துள்ளார்களோ தெரியவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை அதன் தலைவர் சிவாவை எப்படியாவது வெற்றிபெற வைக்க முயல்கிறது. தற்போதைய நிலவரப்படி சிவா வெற்றிபெறக்கூடிய சூழல் இருப்பதாகவே கணிப்புகள் கூறுகின்றன.

உலகுக்கு பிரச்சனையைச் சொன்னவர்கள் -தெரியப்படுத்தியவர்கள் தாமே என்று கூட்டணியினர் திரும்பித் திரும்பிப் பாடும் பல்லவி பயன்தருவதாக இல்லை. ஆயுதப் போராட்டமும், இளைஞர்களது தியாகமும் உலகம் இங்கே திரும்பிப் பார்க்க, அதுவும் ஆச்சரியமாகப் பார்க்க முக்கிய காரணம் என்பதை அப்பட்டமாக மறுப்பது கொடுமைதான்.

அமரர் அமிர்தலிங்கத்தை அறியாதவர்கள்கூட பிரபாகரனின் பெயரை அறிந்திருப்பதுதான் இன்றைய உலக நிலவரம். (ஏனைய இயக்கங்கள் கோபப்படக்கூடாது)

ஆனாலும், மூத்த தலைவர் ஒருவர் பாராளுமன்றம் செல்வது நல்லது. உள்ளவர்களில்- அதாவது தேர்தலில் நிற்போரில் இவர்கள் பரவாயில்லை

# பதவிப் போட்டியால் பரிதவிப்புக் காட்சிகள்

# ஓரே கட்சி-உள்ளே சதி!

என்னும் அபிப்பிராயம் சிவாவுக்கு பாராளுமன்றம் செல்லும் வாய்ப்பை வழங்கக்கூடும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி. ராஜமனோகரி புலேந்திரன் மிகவும் வருத்தமான நிலையில் இருக்கிறார். அவரால் அலட்சியமாகப்




**இங்கு இம்மானுவல் சில்வாவின் படம் 'மிஸ்ஸிங்' இதனால்தான் உறுப்பினர்கள் கொதிப்பு-**

பேசப்பட்ட தமிழ் அமைப்புக்களோடு மோதி 'மூட் அவுட்' ஆகும் நிலை சோகம்தான். இது போதாது என்று அவரது மைத்துனரும் 'விட்டேனா பார்' என்று போட்டிக்கு நிற்கிறார்.

சந்திரிக்கா அலையும், வன்னியில் உள்ள சிங்கள வாக்காளர்களும் பொதுஜன முன்னணிக்கு வன்னியிலும் நம்பிக்கை தரும் அம்சம்.

யாழ் மாவட்டத்தில் கிட்டத்தட்ட 10 ஆயிரம் முஸ்லிம் வாக்காளர்கள் இருந்தும் தனது வேட்பாளர் பட்டியலில் ஒரு முஸ்லிம் வேட்பாளருக்குகூட இடம் கொடுக்காத ஈ.பி.ஆர்.எல்.எஃப். வன்னியில் ஒரு சிங்கள வேட்பாளரை நிறுத்தியிருக்கிறது. ஆனால் வாக்குகள் திரும்பாது. பொதுஜன முன்னணிக்குப் போக மீதி ஐ.தே.கட்சிக்குத்தான் சேரும். புளொட்டும் சிங்கள வாக்குகளில் ஒரு கண் வைத்திருக்கிறது.

இதேவேளையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். கட்சிக்குள் வவுனியா மாவட்டத்தில் ஒரே குமுறல்.

முன்னாள் எம்.பி. இராஜகுகனேஸ்வரனின் செல்வாக்கையும், மன்னாரில் முன்னாள் எம்.பி. இம்மானுவல் சில்வாவின் ஓரளவு செல்வாக்கையும் நம்பி அங்கு காலை வைத்துள்ளது ஈ.பி.ஆர்.எல்.எஃப். அதுதவிர அந்தக் கட்சிக்கென்று தனியான ஆதரவு எதுவும் அங்கு குறிப்பிட்டுச் சொல்லும்படி கிடையாது.

இந்த நிலையில் முன்னாள் யாழ் மாவட்ட எம்.பியும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். குழுவின் செயலதிபருமான சுரேஸ் பிரேமச்சந்திரனும் இராஜகுகனேஸ்வரனின் செல்வாக்கில் பங்கு கேட்டுக்கொண்டு பின்கதவால் பாராளுமன்றம் செல்ல நினைப்பதாக குகனேஸ்வரன் வட்டாரம் கொதித்துப் போய் இருக்கிறது.

கொழும்பில் இருந்து சுரேஸ் பிரேமச்சந்திரன் அச்சிட்டு அனுப்பிய பிரசுரங்களில் அவரது இலக்கம் உள்ள பிரசுரங்களே பெருந்தொகையில் காணப்பட குகனேஸ்வரன் வட்டாரம் உஷாராகிவிட்டது. வன்னியில் பிரசுரம் அடிக்கவேண்டாம் என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் போட்ட உத்தரவைத் தூக்கி கிடப்பில் போட்டு விட்டு அங்கும் பிரசுரங்கள் அச்சிடப் பட்டன. அவற்றில் இராஜகுகனேஸ்வரனின் இலக்கம் குறிப்பிடப்பட்டு விருப்புவாக்கு போடுமாறு கோரப்பட்டிருக்கிறது.

இதேசமயம் மன்னாருக்கு கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட முன்னாள் எம்.பி. இம்மானுவல் சில்வா ஓரங்கட்டப்பட்டு சுரேஸ் பிரேமச்சந்திரனும் மற்றும் இரு வேட்பாளர்களும் போஸ் கொடுக்கும் பிரசுரங்களே பெருந்தொகையாக இருந்தனவாம். அதில் ஒருவர் நேவி என்று அழைக்கப்படுபவர்.

இந்த 'நேவி' இந்திய அமைதிப்படைக் காலத்தில் அட்டகாசம் செய்துவிட்டு பின்னர் இயக்கம் ஒரிசாவுக்குப் போய் விட்டபின், வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பும் ஏஜென்சி வியாபாரம் செய்து தில்லுமுல்லுப் பட்டவர். தனக்கும் ஈபிக்கும் கொள்கை முரண்பாடு என்றும் கூறித்திரிந்தவர்.

இப்போது தனது உறவினர்கள் வாக்காளிப்பார்கள்- ஊரவர்கள் ஆதரிப்பார்கள் என்று கூறி இம்மானுவலுக்குப் போட்டியாக முளைத்திருக்கிறார்.

எம்.பியாக இருந்த இம்மானுவல் சில்வாவுக்கு மன்னாரில் உள்ள நல்ல பெயரை பாவித்துக்கொண்டே அவரை ஓரம் கட்டும் ஈ.பி.ஆர்எல்.எஃப். முயற்சிக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

'இம்மானுவல் சில்வாவுக்காக வாக்களிப்போமே தவிர மற்றவர்கள் எம்.பியாக வாக்களிக்கமாட்டோம்' என்கிறார்கள் அவரது ஆதரவாளர்கள்.

அதனால், வன்னியில் இரு ஆசனங்களுக்கு மேல் அதிகமாக கிடைத்தால் மட்டுமே வெளிமாவட்டக்காரரான சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு இடம் கொடுப்போம். இரண்டு மட்டும் கிடைத்தால் ஒன்று இராஜகுகனேஸ்வரனுக்கு, இரண்டாவது இம்மானுவல் சில்வாவுக்கு என்பதே முடிந்த முடிவு என்று சொல்லி ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்துகிறார்கள்.

ஆனால், விருப்பு வாக்கு விடயத்தில் இராஜகுகனேஸ்வரன், இம்மானுவல் சில்வா ஆகியோரைவிட, தனக்கு அதிகமாக எடுத்துக்கொண்டு அதைச் சொல்லியே எம்.பியாக சுரேஸ் பிரேமச்சந்திரன் வட்டாரம் கொழும்பில் இருந்து திட்டம் போடுகிறது. சிராவஸ்தியில் (எம்.பிக்கள் தங்கும் விடுதி) இரகசிய ஆலோசனைகளும் நடந்துள்ளன. ஒரு ஆசனம் கூட கிடைக்குமா என்பது சந்தேகமான நிலையில் இந்த உட்சதிகளும் கலந்து கழுத்தறுப்பதாக வவுனியா மாவட்ட உறுப்பினர்கள் குமுறுகிறார்கள்.

கட்சியில் மத்திய குழு உறுப்பினராகவோ அல்லது முக்கிய பொறுப்போ கொடுக்காமல் இராஜகுகனேஸ்வரனை குட்டி வைத்திருந்த தலைமை இப்போது அவர் தயவில் தேர்தலில் நிற்கிறது. அதிலும் வெட்டி ஓடல் விளையாட்டு ஏன்? என்கிறார் ஓர் உறுப்பினர்.

இராஜகுகனேஸ்வரனிற்கு எம்.பி. என்பதால் கிடைத்த பஜிரோ வாகனத்தை ரூபா 30 இலட்சத்திற்கு விற்றுவிட்டு ஒரு ஓட்டை 'பிக்கப் வானத்தை' கொடுத்து அவமானப்படுத்தியது சுரேஸ் பிரேமச் சந்திரன்தான்.

ஆனால் இப்போது யாழ் மாவட்டத்தில் தேர்தலில் நிற்கப் பயந்து அதே குகனேஸ்வரன் தலைமையில் வன்னியில் தேர்தலில் போட்டியிடுகிறார், என்று இராஜகுகனேஸ் வரனின் பஜிரோ வாகனம் மறைந்த மர்மத்தை உடைத்தார் இன்னொரு உறுப்பினர். அவரது தகவல் உண்மை தான் என்பதை இராஜகுகனேஸ்வரன் 'டப்பா' வானத்தில் ஓடித்திரிவதை வைத்து உறுதி செய்துகொண்டோம்.

தேர்தலுக்கு முன்பாக ஒன்றுக்குப் பத்தாக பல வெள்ளைத் தாள்களில் வேட்பாளர்களிடம் கையொப்பம் வாங்கி வைத்திருந்ததாகவும், அப்படியான ஒரு வெள்ளைத்தாளின் உதவியோடு அந்த பஜிரோ விற்கப்பட்டதாகவும் தகவல்.

எப்படியோ பாராளுமன்ற ஆசை, உதட்டில் முற்போக்குப் பேச்சையும், உள்ளே யாரை யார் முந்திக்கொள்வது என்ற போட்டியையும் நம் தமிழ் கட்சிகளிடமும் ஏற்படுத்திவிட்டது. இவர்களோடு ஒப்பிடும்போது கூட்டணி பரவாயில்லை என்று வாக்காளர்கள் நினைப்பதில் கோபப்பட என்ன இருக்கிறது? ■

# புலிகளை எதிர்த்தால் வாக்குகள் பறிபோகும்!

## சுருதி மாறும் பேச்சுக்கள்!

## அவரை என்ன செய்வது?

ரெலோ அமைப்பினர் தமது பிரசாரங்களில் கூறும் முக்கியமான கோஷம் கவனிக்கத்தக்கது.

"புலிகளை இந்த யுத்தத்தில் தோற்கடிக்க முடியாது என்று கூறிய எமது கரங்களை வலுப்படுத்துங்கள்" என்று கூட்டங்களிலும், வானொலி, தொலைக்காட்சி பிரசாரங்களிலும் கூறி வருகிறார்கள்.

இதனால் ஏற்படும் கேள்வி யாதெனில்,

அப்படியானால் மட்டக்களப்பு, வவுனியா பகுதிகளில் படையினரோடு இணைந்து புலிகளுக்கு எதிராக செயற்படும் ரெலோ உறுப்பினர்கள் தமது நேரத்தையும், உழைப்பையும் எதற்காக வீணடிக்கிறார்கள்?

கேள்வி இரண்டு.

புலிகளுக்கு எதிராக இராணுவத் தீர்வு, இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு இதுவே ரெலோவின் நிலைப்பாடு என்று பாராளுமன்றத்தில் பல தடவை பேசிய ரெலோவின் தலைவர்களிர் ஒருவரான திரு.கருணாகரம் (ஜனா) அவர்களின் கரங்களை என்ன செய்யலாம்? பலப்படுத்துவதா? பலவீனப் படுத்துவதா? ஒரே குழப்பம்தான்.

ரெலோவின் கதை இப்படியிருக்க, மற்றொரு வேடிக்கை இது; புலிகளை மட்டுமல்ல புலிகளது குடும்ப உறுப்பினர்களையே வெட்டிக் கொலை செய்து (சமயத்தில் மண்வெட்டியால்கூட) சாதனை படைத்த ஈ.பி.ஆர்.எல்.எஃப்கூட புலிகளைக் கண்டித்துப் பேசினால் கிடைப்பதும் கிடைக்காது என்ற பயந்துபோய் இருக்கிறது.

சமீபத்தில் வானொலி உரையில் தமிழ் குறுந்தேசிய வெறியர்கள் என்று புலிகளை மறைமுகமாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். குற்றம் சாட்டியது. குறும்தேசிய வெறியர்கள் என்று அவர்கள் புலிகளைத்தான் சொல்கிறார்கள் என்று மக்களுக்குத் தெரியாது. ஆனால் புலிகளையும் கண்டித்தோம் என்று நாளை சொல்லிக் கொள்ளவும் வசதியாக இருக்கவேண்டும். அதற்காகத்தான் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிறார்கள்.

ஈ.பி.டி.பி. மட்டுமே தாம் புலிகளை எதிர்ப்பதாக வானொலி, தொலைக்காட்சி உரைகளில் பகிரங்கமாகக் கூறியுள்ளது.

எனினும் ஈ.பி.டி.பி. பிரசுரங்களிலும் புலிகளுக்கு எதிரான முந்தைய காரசார தாக்குதல்கள் காணாமல் போயுள்ளன.

ஆக, மொத்தத்தில் புலிகளது பாசிசத்தை எதிர்த்து களத்தில் நிற்பதாகக்கூறி தமது பல நூற்றுக்கணக்கான உறுப்பினர்களைப் பலிகொடுத்துவிட்டு, இப்போது தேர்தல் களத்தில் புலிகளும் தங்கள் நண்பர்கள்தான் என்பதுபோலப் பேசுகிறார்கள்.

இதற்கு இரண்டு காரணங்கள்தான் இருக்கின்றன.

ஒன்று- எப்படியாவது பாராளுமன்றத்திற்குள் நுழைந்துவிடவேண்டும் என்பது.

இரண்டு- தங்களைவிட தமிழர்கள் மத்தியில் புலிகளுக்கு ஆதரவு இருக்கிறது என்பதை ஏனைய தமிழ் அமைப்புக்கள் அறிந்துவைத்திருப்பது. ●

## எரிந்த விடுதியும்; கறந்த நஷ்டஈடும்

### காமினி பொன்சேகாமீது குற்றச்சாட்டு!

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்துவிட்டு இறுதிநேரத்தில் பொதுஜன முன்னணியில் இணைந்துகொண்டவர்கள் குறித்து முன்னணிக்குள் அதிருப்தி நிலவுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சிக்கு எதிராக போராடும் நாம், அந்த ஆட்சியில் பங்குகொண்டு பொறுப்புகளில் இருந்தவர்களை எப்படி ஆதரிப்பது? என்பதுதான் அவர்களது கேள்வியாகும்.

கலைந்த பாராளுமன்றத்தில் உப சபாநாயகராக இருந்தவரான பிரபல நடிகர் காமினி பொன்சேகா பொதுஜன முன்னணியில் சேர்ந்திருக்கிறார்.

பொதுஜன முன்னணியை ஆதரிக்கும் 'ராவய' என்னும் பத்திரிகை காமினி பொன்சேகா சட்ட ஒழுங்குகளுக்கு புறம்பாக நடந்தார் என்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவருக்கு சொந்தமான உல்லாச பிரயாண விடுதி ஒன்றை எரித்துவிட்டு அதற்கு நஷ்டஈடாக 25 இலட்சத்தை பெற்றுக் கொண்டார். பின்னர் அந்த விடுதியை இராணுவத்தினருக்கு கொடுத்து விட்டு 75 இலட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டார். ஆனால் எரிந்தமையால் ஏற்பட்ட அழிவின் பெறுமதி 18 இலட்சம் மட்டுமே என்று 'ராவய' தகவல் வெளியிட்டுள்ளது.

## வாகனம் இருந்தும்-வசதியிருந்தும்....

திருகோணமலையில் கூட்டங்களுக்கு ஆள்திரட்ட தமிழ் அமைப்புக்கள் சில வாகனங்களோடு ஓடித்திரிகின்றன.

கருத்தரங்கு நடத்தப் போவதாக அறிவித்துவிட்டு வாகனத்தோடு காத்திருந்து சலித்துப்போன தமிழ் அமைப்பொன்று இறுதியில் கருத்தரங்கு நடத்தும் திட்டத்தைக் கைவிடவேண்டி ஏற்பட்டதாம்.

திருமலையில் முட்டுமல்ல. வவுனியாவிலும் கூட்டங்களுக்கு வானத்தில் ஆள்சேர்க்கும்' காட்சி கண்கொள்ளாக் காட்சியாகவே இருக்கிறது.

கூட்டங்களுக்கு ஆர்வமாகச் செல்லும் மக்கள் தொகை குறைந்துவருவதால் வேட்பாளர்கள் சிறு கருத்தரங்குகள் நடத்தி வாக்குக்கேட்டு வருகிறார்கள்.

திருகோணமலையில் மட்டுமல்லாமல் தமிழ் பகுதிகளில் பொதுவாகவே இந்நிலைதான் காணப்படுகிறது. வீர முழக்கங்கள் கேட்டுப் புளித்துப்போன மக்கள் முன்னர் போல் ஆர்வம் காட்டுவதில்லை.

## சிங்கத்தின் தடுமாற்றம்

### தம்பிமார் மட்டுமல்ல தலைவரும் பார்த்துத்தான்!

31.07.94 அன்று இரவு 9.15 மணிக்கு இலங்கை ரூபவாஹினி தொலைக் காட்சியில் கூட்டணித் தலைவர் சிவா உரையாற்றினார்.

முன்னொரு காலத்தில் 'உடுப்பிட்டிச் சிங்கம்' என கர்ஜித்த கம்பீரம் காணாமல் போயிருந்தது.

தம்பிமார் பார்த்துத்தான் வாசிப்பார்கள் என்று கூட்டணியினால் சிலர் கேலி செய்தாலும்கூட தலைவர் சிவா எழுதிவந்து பார்த்துத்தான் வாசித்தார். சமயத்தில் எழுதிய தாள்களை கண்ணுக் கருகே கொண்டுவந்து பார்த்தும் வாசிப்பில் தடுமாறினார்.

உப்புச் சப்பில்லாத பேச்சாக இருந்தது மாத்திரமல்லாமல், ஞாபக மறதி காரணமாக பல தவறான தகவல்களையும் அவரது உரை வெளியிட்டது.

குட்டிமணி-ஜெகன் வழக்கில் திரு.சம்பந்தர் ஆஜராகி வாதிட்டதாக திரு. சிவா கூறினார். ஆனால் சம்பந்தர் அந்த வழக்கில் தலைகாட்டியதே கிடையாது.

குட்டிமணி-ஜெகன்-தங்கத்துரை (இவரது பெயரை தலைவர் மறந்துவிட்டார்) வழக்கில் மிக முக்கிய ஆர்வம் காட்டி உழைத்தவர் சட்டத்தரணி நவரத்தினம் என்னும் கரிகாலன். அவர் இப்போது வெளிநாடொன்றில் இருக்கிறார். அவரது உழைப்பை சம்பந்தருக்கு எடுத்துக் கொடுப்பது நியாயம்தானா?

இந்தியாவில் பல பிரதேசங்களுக்கு சென்று அங்குள்ள பிரதமர்களைச் சந்தித்து பேசியதாக திரு. சிவா கூறினார். ஆனால் நாம் அறிந்தவரை இந்தியாவில் ஒரு பிரதமர் மட்டுமே இருக்கிறார். பிரதேசங்களுக்கு பிரதமர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. (தடுமாறி விட்டார்)

13வது திருத்தச்சட்டத்தை தமிழில் சொல்ல முடியாமல் தடுமாறி இறுதியில் ஆங்கிலத்திலேயே சொல்லிச் சமாளித்ததையும் அவதானிக்க முடிந்தது. சிங்கம் தளர்ந்துதான் விட்டதோ?

சமஷ்டி தீர்வு காணப்படவேண்டும், தமிழ் மக்கள் வீரமுள்ள மக்களாக வாழவேண்டும். அதற்காக உதயசூரியனை ஆதரிக்கவேண்டும் என்றும் திரு. சிவா தெரிவித்தார். யார் மீதும் தாக்குதல் இல்லாதது அவரது பேச்சில் தெரிந்த அரசியல் நாகரிகம். ●

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## அலசுவது-இராஜதந்திரி

# இனப்பிரச்னைத் தீர்வில் தங்கியிருக்கும் இலங்கையின் 21ம் நூற்றாண்டு வளர்ச்சி!

# சீரற்ற திறந்த பொருளாதாரத் திட்டத்தினால் 'கழிவுப் பண்டக மையமாக' மாறியுள்ள இலங்கை!

இனப்பிரச்னைத் தீர்வு; திறந்த பொருளாதாரக் கொள்கை. இந்த இரு அம்சங்களுமே இத்தடவை பாராளுமன்றத் தேர்தல் பிரசாரங்களில் முக்கிய விடயங்களாக இடம்பெற்றுள்ளன.

கடந்த பதினேழு வருடகாலத்தில் பொருளாதார ரீதியாக இலங்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறி வருகின்றது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களை உள்நாட்டில் ஊக்குவித்தும், மற்றும் உள்நாட்டினருக்கு விரிவான வகையில் வெளியுலகப் பொருளாதாரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான வசதி வாய்ப்புக்களை வழங்கியுமிருப்பதாக ஐ.தே.க.வினர் தெரிவித்து வருகின்றனர்.

1977ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையின் பாரம்பரியமாக இருந்து வந்த பொருளாதாரக் கொள்கைகளில் மாற்றங்களைக் கொண்டு வந்தது உண்மையே.

ஏற்றுமதி, இறக்குமதி என்ற அடிப்படையில் பெரும்பாலும் காலனித்துவ காலத்தைச் சேர்ந்த பொருளாதாரக் கொள்கையைத் தழுவியதாக இருந்த இலங்கையில், திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதன்மூலம் விரிவான வர்த்தக, கைத்தொழில் தொடர்புகள் ஏற்பட்டிருந்தன.

ஆயினும் இத்திறந்த பொருளாதாரக் கொள்கையினால் நாடு எவ்வளவு தூரம் பயனடைந்துள்ளதென்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான வசதி, வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர்களுக்கு கூடுதல் சலுகைகளையும், ஊக்குவிப்புக்களையும் கொடுக்கும் வகையில் சுதந்திர வர்த்தக வலயங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக உள்நாட்டில் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்.

பாரம்பரிய பண்டங்களான தேயிலை இறப்பர், கறுவா, ஏலம், மற்றும் இரத்தினக்கற்கள் என்பவற்றின் ஏற்றுமதியில் தங்கியிருந்த இலங்கை தற்போது வெளிநாட்டு முதலீடுகள் மூலம் பல்வேறு வகையான உற்பத்திகளையும் மேற்கொண்டு வருகின்றது.

இருந்தபோதிலும் திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக கூடுதல் நன்மையைப் பெறுவோர் முதலீட்டாளர்களாக இருக்கின்றனரே தவிர, சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரம் எந்தவகையிலும் முன்னேற்றத்தை அடைந்ததாகக் காணப்படவில்லை.

செல்வந்தர்கள் மேலும் செல்வந்தர்களாகியுள்ளதுடன் சாதாரண மக்கள் தொடர்ந்து பல்வேறு பொருளாதாரச் சிக்கல்களையும் எதிர்நோக்கியவர்களாகவே இருக்கின்றனர்.

ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் வேலை வாய்ப்பை வழங்கியுள்ளதாக ஐ.தே.கவினர் குறிப்பிடுகின்றனர்.

பலர் வேலை வாய்ப்புக்களைப் பெற்றிருப்பது உண்மையே; ஆயினும் அவர்கள் பெறும் வருவாய் நேர்த்தியான வாழ்க்கையை நடத்துவதற்கு எந்த வகையிலும் போதுமானதாக இருக்கக் காணப்படவில்லை.

பொருட்களின் விலை உயர்வு, மின்சாரக் கட்டண உயர்வு, மற்றும் போக்குவரத்துக் கட்டண உயர்வு என்பன ஒரு சாதாரண உத்தியோகத்தரையோ அல்லது தொழிலாளியையோ பெரிதும் பாதிப்பவையாகவே இருக்கின்றன.

திறந்த பொருளாதாரக் கொள்கை தனியார் போக்குவரத்துத் துறையில் தாராளப் போக்கை அறிமுகப்படுத்தியிருந்தது. ஆனால் இத்தாராளப் போக்கு கூடுதல் வாகன இறக்குமதிக்கு வசதியளித்த அதேசமயம், இலங்கையை ஒரு 'கழிவுப் பண்டக மைய'மாகவும் (Dumping ground) மாற்றிவிட்டுள்ளது.

வாகன இறக்குமதியில் கண்மூடித்தனமான போக்கு காணப்படுகின்றது. இதனால் தரங்கெட்ட, மற்றும் பிறநாடுகளில் நிராகரிக்கப்பட்ட வாகனங்கள்கூட இலங்கையில் குவிந்திருக்கக் காணப்படுகின்றன.

திறந்த பொருளாதாரக் கொள்கை இலங்கையைப் பொறுத்தவரை ஒரு புதிய அம்சமாகவும், பல்வேறு ஏற்றுமதி, இறக்குமதி வாய்ப்புகளையும் கொண்டிருப்பதால் வர்த்தக, கைத்தொழில் சமூகத்தவரிடையே பிரபலம் பெற்றதொன்றாக இருக்கின்றது.

ஆயினும் இத் திறந்த பொருளாதாரக் கொள்கை இலங்கையில் அனைத்துத் தரப்பினரும் பயனடையக்கூடிய வகையில் அமைந்திருக்கவேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

தாராள இறக்குமதிக் கொள்கை என்ற அடிப்படையில் இலங்கையில் பாரியளவு பயனற்ற பண்டங்கள் வந்து குவிந்திருக்கக் காணப்படுகின்றன.

இத்தகைய பண்டங்களினது இறக்குமதியில் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்படுவதுடன், பொருளாதார, கைத்தொழில் ரீதியாக ஆக்கபூர்வமான பயன்களை வழங்கக்கூடிய சாதனங்களின் இறக்குமதிகளையே ஊக்குவிக்கும் நிலை தோன்ற வேண்டும்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வருகை வேலைவாய்ப்புக்களை பெரிதும் வழங்கியுள்ளது. ஆயினும் மனிதவளம் தவிர்ந்த ஏனைய உள்ளூர் மூலவளங்களின் பயன்பாட்டில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சிறிதளவு பங்களிப்பையே செய்துள்ளனர்.

வெளிநாட்டு முதலீட்டாளரின் உற்பத்தி நடவடிக்கைகள் பெரும்பாலும் வெளியூர் மூலப்பொருட்களை இலங்கையில் முடிவுப் பொருட்களாக மாற்றுவதாகவே அமைந்திருக்கின்றன.

ஆனால் இலங்கையில் உள்ள மூல வளங்கள் தகுந்த வகையில் பயன்படுத்தப்படாதவையாக இருக்கின்றன.

எனவே இலங்கையைப் பொறுத்தவரை திறந்த பொருளாதாரக் கொள்கை பல்வேறு துறைகளிலும் சீர்திருத்தங்களைக் கொண்டிருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகின்றது.

அபிவிருத்தியடைந்துவரும் ஒரு நாட்டில் திறந்த பொருளாதாரக் கொள்கை நிச்சயம் வரவேற்கப்பட வேண்டியதொன்றே.

இன்று உலகில் பல்வேறு நாடுகளும் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கே முக்கியமளித்து வருகின்றன. தீவிர கம்யூனிஸப் போக்கைக் கொண்டிருந்த ரஷ்யா, சீனா ஆகியனகூட தமது பொருளாதாரக் கொள்கைகளில் படிப்படியாக தாராளப் போக்கைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளன.

இந்தியாவும் தனது மூலவளம், மற்றும் தொழில் வளம் என்பவற்றுக்குக் குந்தகம் ஏற்படாத விதத்தில் திறந்த பொருளாதாரத் திட்டத்தை அனுசரித்து நிற்கின்றது.

அண்மையில் தனது சுயாட்சியை உறுதி செய்த பாலஸ்தீனமும், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

வியட்நாம், தாய்லாந்து, போன்ற தென்கிழக்காசிய நாடுகளும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்து வருகின்றன.

இன்று சர்வதேச ரீதியாக கடல், ஆகாய போக்குவரத்து என்பன பெரிதும் வளர்ச்சி கண்டுள்ளன. விண்வெளியில் சுமார் இரண்டாயிரம் செய்மதிகள் வலம் வருகின்றன.
இச் செய்மதிகள் மூலமாக தொலைதொடர்பு, பொதுசனத் தொடர்பு என்பவற்றிலும் வியத்தகு மாற்றங்கள்-வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் உலகில் எந்தவொரு நாடும் குறுகிய கண்ணோட்டங்களுடன் பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டிருக்க முடியாது.

சர்வதேச ரீதியான அபிவிருத்தித் திட்டங்களுக்கும், பொருளாதார நடைமுறைகளுக்கும் வளைந்து கொடுக்கும் வகையிலேயே உலக நாடுகள் தத்தமது பொருளாதாரத் திட்டங்களை வடிவமைக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளன.

எனவே ஐக்கிய தேசியக் கட்சியினர் தாம் அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரத் திட்டம் பற்றி தேர்தல் மேடைகளில் விபரித்து வருவதுடன், பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றும் பட்சத்தில் இத் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு 'ஆப்பு' வைக்கப்படும் எனவும் குறிப்பிட்டு வருகின்றனர்.

1977ம் ஆண்டுக்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இலங்கையில் நிலவிய பொருளாதார நிலைமை, இன்றுங்கூட நாட்டு மக்களில் பலருக்கு 'சிம்மசொப்பனமாகவே' இருக்கின்றது.

இடதுசாரித் தலைவர்களுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி நடத்திய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நடைமுறைகளைப் பின்பற்றியிருந்தனர்.

இதனால் உணவுப் பஞ்சம்கூட ஏற்பட்டிருந்ததுடன் மக்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

ஆனால் இன்று உலகோடிணைந்த பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதே அவசியமானதாகின்றது.

கடந்த பதினேழு வருடகாலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினால் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை, நாட்டில் பாரியளவு பயன்களைத் தராவிடினும், இன்றைய சர்வதேச பொருளாதார நிலவரங்களுடன் ஒத்துப்போகக்கூடிய அம்சங்களைக் கொண்டதாக இத்திறந்த பொருளாதாரத்திட்டம் காணப்படுகின்றது.

இந்நிலையில் இலங்கைக்குப் பொருத்தமான விதத்தில் இப் பொருளாதாரத் திட்டம் புனரமைப்புச் செய்யப்படவேண்டியதாக இருக்கின்றதே தவிர, எக்கட்டத்திலும் இத்திறந்த பொருளாதாரமுறை நிராகரிக்கப்பட முடியாததாகவே இருக்கின்றது.

எனவே பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றும் பட்சத்தில் திறந்த பொருளாதாரத் திட்டத்தினை நீக்கியோ, அல்லது அதனை தவறாகக் கையாளுமேயானால் பொருளாதார ரீதியாக மிகவும் பின் தள்ளப்பட்ட நிலைக்கு இலங்கை தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

2000ம் ஆண்டை நோக்கிய சிந்தனைகள் என்று கூறி உலக நாடுகள் ஒவ்வொன்றும் குறுகிய பொருளாதார, அரசியல் வரம்புகளுக்குள்ளிருந்தும் தம்மை விடுவித்தவண்ணமுள்ளன.

இனரீதியான ஒடுக்குமுறைகள், மற்றும் பொருளாதார ரீதியான கட்டுப்பாடுகளுக்குள்ளான நாடுகளில் ஏற்பட்டுவரும் விழிப்புணர்வுகள், ஆரோக்கியமான அரசியல், மற்றும் பொருளாதார நடைமுறைகளுக்கு வழிவகுத்தவையாக இருக்கக் காணப்படுகின்றன.

இந்நிலையில் இலங்கையிலும் அரசியல், பொருளாதார நிலவரங்கள் உறுதியாகவும் ஆரோக்கியமானதாகவும் இருக்கவேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

பொருளாதார ரீதியாக வளர்ச்சி காணப்படும்போது அரசியலில் குத்து வெட்டுக்கள் நீடித்து இரத்தப் பிரவாகம் பெருகுமானால், எந்தவொரு துறையிலும் நேர்த்தியான வளர்ச்சியைக் கண்டுவிடமுடியாது.

இலங்கையின் கடந்தகால அனுபவங்கள் ஒரு நல்ல படிப்பினையாக இருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி 1977ம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததும் பொருளாதார ரீதியாக தாராளப் போக்கைக் கடைப்பிடித்தது. ஆனால் அரசியல் ரீதியாக தொடர்ந்து குறுகிய இனவாதத்தையே கொண்டிருந்தது.

இலங்கையின் இனப்பிரச்னையைத் தீர்ப்பதில் தாராளப் போக்கை ஆட்சியாளர்கள் கைக்கொள்ளவில்லை.

ஜனநாயக ரீதியாக அரசியல் நடைமுறைகளில் நம்பிக்கை வைத்துத் தீர்க்கவேண்டிய பிரச்னைகளை, பலாத்காரமாக இராணுவ அணுகுமுறைகள் மூலம் தீர்ப்பதிலேயே ஆட்சியாளர்கள் ஆர்வங்காட்டியிருந்தனர்.

இதனால் இலங்கை எத்தகைய பொருளாதாரத் திட்டத்தைக் கொண்டிருந்த போதிலும் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் நிலவும் இனப்பிரச்னை சார்ந்த ஆயுதப் போராட்டம், நாட்டின் ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்கு பாரிய சவாலாகவும், அச்சுறுத்தலாகவுமே இருந்து வருகின்றது.

கடந்த ஒரு தசாப்த காலத்தில் நாட்டின் பெருமளவு நிதியை இராணுவ நடவடிக்கைகள் ஏப்பம் விட்டுள்ளன. இதுவரை காலமும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டங்களில் பாதுகாப்புத்துறைக்கே பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டு வருவதுடன், இந்த ஒதுக்கீடு வருடா வருடம் கோடிக்கணக்கில் அதிகரித்துச் செல்வதாகவும் இருக்கின்றது.

இலங்கை எதிர்காலத்தில் பொருளாதார ரீதியாக ஒரு சுபீட்சத்தைக் கொண்டிருக்கவேண்டுமானால், மறுபுறத்தே அரசியல் ரீதியான உறுதிப்பாட்டையும் நிச்சயம் கொண்டிருக்க வேண்டும்.

இன்று தேர்தல் பிரசாரங்களில் ஐக்கிய தேசியக் கட்சியினரும், பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் தத்தமது பொருளாதாரக் கொள்கைகள், மற்றும் இனப்பிரச்னைக்கான தீர்வு என்பன பற்றி மேடைக்கு, மேடை பிரஸ்தாபித்து வருகின்றனர்.

எதிர்காலத்தில் ஆட்சியமைப்பவர்கள் யாராகவும் இருக்கலாம். அவர்கள் தமது கொள்கைத் திட்டங்களுக்கேற்ற வகையில் பொருளாதார நடைமுறைகளையும் கொண்டிருக்கலாம்.

ஆயினும் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஒரு நிரந்தர தீர்வைக்காணாதவரை இலங்கையில் ஸ்திரமான அரசியல், பொருளாதாரச் சூழ்நிலைகளைக் கொண்டிருக்க முடியாதென்பதே கடந்தகால அனுபவமாக இருக்கின்றது.

எனவே எதிர்கால இலங்கையின் அரசியல், பொருளாதார மறுமலர்ச்சி என்பது வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்விலேயே பெரிதும் தங்கியிருக்கின்றது.

21ம் நூற்றாண்டின் சவால்களைச் சந்திப்பதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவேண்டிய காலகட்டத்திலேயே இலங்கை இருக்கின்றது.

இனிவரப்போகும் ஆட்சியாளர்கள் கூட 21ம் நூற்றாண்டுக்கு ஏற்ற வகையில் புதிய அரசியல் சிந்தனையைக் கொண்டவர்களாக இருக்கவேண்டியவர்களாகின்றனர்.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்ந்தும் பழமையான குறுகிய இன-மதவாதக் கண்ணோட்டங்களுடன் அணுகப்படுமானால் இலங்கை மேலும் பல தசாப்த காலங்களுக்குப் பின்தள்ளப்பட்டு, 'காட்டு மிராண்டித்தனம்' அரசோச்சுவது தவிர்க்கப்படமுடியாததாகவே இருக்கும்.







## லேடீஸ் ஸ்பெஷல்

# உங்கள் இல்லத்தை அழகுபடுத்த எளிய முறைகள்

# இல்லம் அழகாக உள்ளம் உவகை பெறும்

உங்கள் இல்லத்தை அழகாகவும் துப்பரவாகவும் வைத்திருக்க சில சாதாரண எளிய முறைகளைக் கையாளலாம். பெரும் பிரயத்தனம் எதுவுமில்லாமலேயே இம்முறைகளைக் கையாண்டு பலனடையுங்கள்.

- உங்கள் இல்லம் பல அறைகளைக் கொண்டதாக இருக்குமானால் ஒவ்வொரு அறையை மட்டும் ஒரு நேரத்தில் துப்பரவாக்குவதற்குத் தெரிவு செய்யுங்கள். சிறிய இடமாக இருந்தாலும் ஒவ்வொரு பகுதியாகத் தனியாகப் பிரித்துக் கொள்ளுங்கள்.
  குறிப்பிட்ட அறையோ அல்லது பகுதியோ தட்டு முட்டு சாமான்களால் நிரம்பியிருக்கும். முதலில் அத்தனை பொருட்களும் உங்களுக்குத்தேவைதானா என்பதைத் தீர்மானியுங்கள். தேவையானவற்றை முதலில் பட்டியல் போட்டு எடுத்து வேறாக வைத்துவிட்டு தேவையில்லாதவற்றை உடனடியாக அகற்றி விடுங்கள்.
- உங்களுக்குப் பிள்ளைகள் இருந்தால்- அவர்கள் குறிப்பிட்ட பணியைச் செய்யும் வல்லமையுள்ளவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களிடம் உங்கள் துப்பரவாக்கும் பணியில் சிலவற்றைப் பகிர்ந்து கொடுங்கள்.



- உங்களை நாடி உங்கள் இல்லம் தேடிவருபவர்களின் கண்களில் முதன் முதலில் படும் இடங்களை துப்பரவு செய்வதிலும் அழகூட்டுவதிலும் முதலில் கவனம் செலுத்துங்கள். வீட்டின் முன் கதவு, யன்னல்களைத் துடைத்து, தூசகற்றிச் சுத்தம் செய்யுங்கள். முன்புற அழகைக் கொண்டே உள்ளேயும் அழகும் தூய்மையும் காணப்படும் என்று பார்ப்போர் கருதுவார்கள்.
- யன்னல்களைத் துடைப்பதற்கு 4 பைந்த் வெந்நீரில் இரண்டு மேசைக்கரண்டி மதுசாரத்தைக் கலந்து கொள்ளுங்கள். இந்தக் கலவையைப் பயன்படுத்தினால், கடைகளில் பணம் கொடுத்து வாங்கும் அழுக்கு நீக்கிகளை விட அதிக பலன்கிட்டும்.
- யன்னல், கதவுகள் மற்றும் மர-உருக்குத் தளபாடங்களைத் துடைப்பதற்கு பழைய 'ரெறி' துணி வகைகளையே பயன்படுத்துங்கள். இவற்றைப் பயன்படுத்தினால் துடைத்தபின் துடைக்கப்பட்ட இடங்களில் நூற் பிசிர்கள் ஒட்டமாட்டா. இவற்றை பலதடவைகள் கழுவிக் கழுவிப் பாவிக்கலாம்.
- பயன்படுத்தும் பீங்கான் பாத்திரங்களில் படிந்துள்ள கறைகளைப் போக்க அப்பச்சோடா கலந்த நீரில் துணியை நனைத்து கறைபடிந்த இடத்தில் தேய்த்தால் கறை நீங்கிவிடும்.
- சீமெந்துத் தரை மற்றும் குளியலறைத் தரை மற்றும் ஓடுகளில் படியும் நீரக்கறையினை நீக்க எலுமிச்சை எண்ணை (Lemon Oil)யைத் துணியில் தொட்டு கறைபட்ட இடத்தைத் தேய்த்து விடலாம்.
- சமையலறையில் ஏற்படும் கறைகளை எலுமிச்சை சாற்றினால் அகற்றிவிட முடியும். கறை படிந்த இடத்தில் எலுமிச்சைச் சாற்றினைப் பிழிந்து அரைமணி நேரத்தின் பின்னர் அப்பச்சோடாவைத் தெளித்து ரெறி துணியினால் அழுத்தித் தேய்த்துவிடவும்.
- உங்கள் குழந்தைகள் சுவரில் சோக் அல்லது கிறையோன் வர்ணங்களால் 'ஓவியம்' வரைந்திருப்பார்கள். அவற்றைப் பேணிப் பாதுகாத்து வைக்கும் பொறுமை உங்களுக்கு நிச்சயம் இருக்காது. அவற்றை நீக்க விரும்பினால் 'ரேப்பன்ரைன்' என்ற திரவத்தை வாங்கித் தடவிய பின்னர் துணியினால் துடைத்துவிட மறைந்துவிடும். உங்கள் 'போல் பொயின்ற்' பேனா, 'ஓவியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தால் அதனை அழிக்க சாதாரண 'பொலிஷிங் கிரீம்' தேய்த்து விடுங்கள்.
- உங்கள் இல்லத்தில் உள்ள மரத் தளபாடங்கள் தரையினைக் கீறி கோலம் போடலாம். ஆகவே நாற்காலி, மேசை போன்றவற்றின் கால் நுனியில் தரையினை துலக்கும் மெழுகுடன் சேர்ந்த ஒருவகை பசையினை (Floor wax paste) தடவிவிட வேண்டும்.

## யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

## முரசின் பரிசு

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

- 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

முரசின் பரிசு
கூப்பன் இல I
உண்மை–நேர்மை–வெளிப்படைத்தன்மை

- பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
- பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
- நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
- மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
- இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.

## உங்கள் வீட்டுப் பொருட்கள் எவ்வளவு காலம் உழைக்கும்...?

நீங்கள் கொள்வனவு செய்யும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் சாதாரணமாக எவ்வளவு காலம் பாவிக்கும்? உங்கள் வியாபாரிகள் இப்பொருட்கள் எவ்வளவு காலம் நீடித்துழைக்கும் என்று நீங்கள் அப்பொருட்களை வாங்கும் போது கூறியிருப்பார்கள். அவர்கள் குறிப்பிட்ட காலத்துடன் இங்கு தரப்பட்டுள்ள காலப் பட்டியலையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து பெற்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது இது:

| | |
|---|---|
| காஸ் அடுப்பு | - 18 ஆண்டுகள் |
| மின்சக்தி அடுப்பு | - 15 ஆண்டுகள் |
| குளிர்சாதனப் பேழை (ரெ:ப்றிஜிரேட்டர்) | - 14 ஆண்டுகள் |
| சலவை இயந்திரம் | - 13 ஆண்டுகள் |
| அறை குளிரூட்டி (எயார் கொண்டிஷனர்) | - 9 ஆண்டுகள் |
| வர்ண தொலைக்காட்சி | - 8 ஆண்டுகள் |
| வி சி ஆர் | -6 ஆண்டுகள் |

குறிப்பு: தரமான தயாரிப்பு நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட பொருட்களுக்குரியதே இக்கால அளவு. தரமற்ற போலித் தயாரிப்புக்களை நீங்கள் வாங்கினால் எவரும் பொறுப்பேற்க முடியாது என்பதை மனதில் வையுங்கள்.

## சமைப்போம் சுவைப்போம் தொகுத்துத் தருவது—சுகந்தினி

### மூவர்ண புலாவ் (Tricolour Pulav)

**தேவையான பொருட்கள்:**

*சமைத்த சாதம் 3 கோப்பை*
*கரட் 2*
*உருளைக்கிழங்கு 2*
*பச்சைப் பட்டாணி அல்லது போஞ்சி 1/4 கிலோ*
*தக்காளி சோஸ் 2 மேசைக்கரண்டி*
*பச்சை மிளகாய் 6*
*கொத்தமல்லி இலை–சிறுகட்டு*
*மஞ்சள் பொடி 1/4 தேக்கரண்டி*
*உப்பு தேவையான அளவு*
*நெய் 3 மேசைக்கரண்டி*

**செய்முறை:**

1. கரட், உருளைக்கிழங்கு, போஞ்சி முதலிய காய்வகைகளைப் பொடிப்பொடியாக தனியாக நறுக்கி வைத்துக்கொள்ளவும்.
2. ஒரு மேசைக்கரண்டி நெய்யை வாணலியில் ஊற்றி அடுப்பில் வைக்கவும். 1/4 தேக்கரண்டி சீரகம் சேர்த்துத் தாளிக்கவும். நறுக்கிய கரட் துண்டுகளைப் போட்டுத் தேவையான அளவு உப்பு சேர்த்து வதக்கவும்.
3. ஒரு கிண்ணத்தில் நெய் தடவி வைத்துக் கொள்ளவும்.
4. காய் வெந்தவுடன் 1 கோப்பை சாதத்தை வாணலியில் போடவும். தக்காளி சோஸ் சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ளவும். சாதம் ஒரேஞ்ச் நிறமாக வரும்.
5. நெய் தடவிய கிண்ணத்தில் கரட் சாதத்தைப் போட்டு நன்றாக அமுக்கி விடவும்.
6. ஒரு தேக்கரண்டி நெய்யில், அரைத்த பச்சை மிளகாய் விழுதைப்போட்டு இரண்டு நிமிடம்வரை வதக்கவும். போஞ்சி அல்லது பட்டாணி போட்டு வேக வைக்கவும். தேவையான அளவு உப்பு சேர்க்கவும். ஒரு கப் சாதத்தைச் சேர்த்து நன்றாகக் கலந்துகொள்ளவும். சாதம் இப்பொழுது பச்சை நிறத்துடன் தோற்றமளிக்கும்.
7. இந்தப் பச்சை நிறச் சாதத்தைக் கரட் சாதத்தின்மேல் போட்டு நன்றாக அமுக்கி விடவும்.
8. ஒரு கரண்டி நெய்யில் 1/2 தேக்கரண்டி சீரகத்தைப் போட்டுத் தாளிக்கவும். நறுக்கிய உருளைக்கிழங்கு, உப்பு, மஞ்சள்பொடி சேர்க்கவும். காய் வெந்தவுடன் ஒரு கோப்பை சாதத்தைப் போட்டுக்கலக்கவும். சாதம் மஞ்சள் நிறமாகக் காட்சி அளிக்கும்.
9. பச்சை வர்ண சாதத்தின்மேல் மஞ்சள் நிறச் சாதத்தைப்போட்டு நன்றாக அழுத்தி விடவும்.
10. கொதிக்கும் நீரின் மேல் சாதம் உள்ள கிண்ணத்தை வைக்கவும். சாதம் சூடாக ஆனவுடன் கிண்ணத்தை ஒரு தட்டில் கவிழ்க்கவும்.
    பின்னர் கறிவகைகளுடன் எடுத்துப் பரிமாறவும்.




## சிந்திக்கலாம் இங்கே...

ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது. விவேகம் இல்லாத துணிச்சலும் அப்படித்தான்.

தனிவழியே போகிறோம். பத்துப் பேர் வழிமறித்து கத்தி நீட்டினால் அவசரப்பட்டு காலைக் கையை தூக்கிவிடக்கூடாது.

புத்திக்கு வேலை கொடுக்க வேண்டும். என் பலம் என்ன? எதிரிலே உள்ளவர் பலம் என்ன என்று எடைபோட்டுக்கொள்ளாமல் உடனே சண்டைக்குப் போய்விடக் கூடாது.

எதிர்க்க முடியாது என்று தெளிவாகத் தெரியும்போது மடியில் இருப்பதை கொடுத்துவிடுவதில் கௌரவக் குறைச்சல் ஒன்றுமில்லை.

எதிரி பலமானபோது பின்வாங்குவதும் பலத்தை திரட்டிக்கொண்டு மீண்டும் முன்னேறுவதும் போர்க்களத்தில்கூட பொதுவாகப் பிரயோகிக்கப்படும் விதியாகவே இருந்து வருகிறது.

ஓரடி பின்னால் வைப்பது ஈரடி முன்னால் எடுத்துவைப்பதற்கே என்பதை மறந்துவிடக் கூடாது.

முன்னேறுவது பற்றியே யோசிக்காமல் பின்வாங்கிக்கொண்டே இருப்பதுதான் கோழைத்தனம்.

குட்டக் குட்ட குனிபவன் கோழை.

ஆனால் தலையை நோக்கி தாக்குதல் வரும்போது குனிந்து தப்பிக்கத் தெரியாதவன் விவேகமில்லாத வீரன்.

ஒரு முறை குட்டுப்படும்போது குனிந்து வாங்கிக்கொண்டாலும் மறுமுறை குட்டவரும்போது குட்டுகிறவன் கரத்தை எப்படி மடக்கிப் பிடிப்பது என்று திட்டம் போட்டுவிட வேண்டும்.

அதுதான் வீரம். விவேகம் உள்ளவன் ஒரு முறை அடிபட்டால் விழித்துக்கொள்கிறான்.

ஆனால் கோழையோ ஆறடி நிலத்திற்குள் அடக்கமாகும்வரை அடிபட்டுக்கொண்டே வாழுகிறான்.

பூனை பயத்தில் ஓடுவதையும், புலி பதுங்குவதையும் ஒரே நிகழ்வாக வைத்து ஒப்பிடமுடியாது.

"சூடுகண்ட பூனை அடுப்பங்கரைப் பக்கம் நாடாது."

ஆனால், காயப்பட்ட புலியோ தன்னை காயம் செய்தவனை சாக வைக்கும் நோக்கத்தோடு தேடி அலையும்.

ஆனால் அந்தப் புலியும் விவேகம் இல்லாமல் வெறிபிடித்தலைந்தால் விழிப்பாயிருக்கும் வேட்டைக்காரன் பொறியில் அகப்பட்டு மாளும்.

துப்பாக்கிக்குள் குண்டுகள் இருந்தாலும் குறிவைத்து சுடத்தெரிந்தவன் சுட்டால்தான் நோக்கம் நிறைவேறும்.

கண்ணை மூடிக்கொண்டு சுட்டால் குண்டுகள்தான் விரயமாகும்.

கோபமும் அப்படித்தான். வீரமும் அப்படித்தான்.

கொள்ளைக்காரன் மீது கோபம் வருவது நியாயம்தான்.

வழிப்பறி செய்தவனை கண்டு பிடித்து நாலு அடிபோடும் வீரமும் வேண்டியதுதான்.

ஆனால்- எங்கே எந்தச் சூழ்நிலையில் அதனை வெளிப்படுத்த வேண்டும் என்பதை விவேகம் தீர்மானிக்க வேண்டும்.

கோபமும்-வீரமும் துப்பாக்கியில் உள்ள குண்டுகள் மாதிரி. அவற்றை குறிதவறாமல் செலுத்த விவேகம் தேவை என்பதை மறந்து விடக்கூடாது.

ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்பது எப்போது வேண்டுமானாலும் எப்படியும் செத்துப்போ என்று அர்த்தம் அல்ல.

எதிர்க்கவேண்டியதை எதிர்க்காமல் சாடிக்கஞ்சி அட்டைபோல சுருண்டு கிடப்பவர்களுக்கு சொல்லப்பட்டதுதான் அந்த முதுமொழி.

தப்பிக்கொள்ள வழியிருக்கும் போதும் சாவின் பொறிக்குள் சென்று தலையைக் கொடு என்று எவரும் சொல்லவில்லை.

எதிரி துப்பாக்கியோடு வருகிறான். முடியுமானால் சுடு என்று மார்பை காட்டிக்கொண்டு நிற்பது மாண்டுபோக வைத்துவிடும்.

ஆனால், விவேகத்தோடு தப்பிக் கொண்டால் மறுபடியும் எதிரியை எதிர்த்துப் போராடும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

உலக வரலாற்றின் உன்னத தலைவர்கள் பலர் சிறைபட்டு வதைபட்டு மீண்டும் எழுந்து போராடி வென்றார்கள்.

சமீபகால வரலாற்றில் நெல்சன் மண்டேலாகூட அதற்கு ஒரு உதாரணம்.

அன்று நெல்சன் மண்டேலா "நிறவெறியர்கள் என்னை சிறையிடுவதோ" என்று விவேகமில்லாமல் எதிர்த்து இறந்துபோயிருந்தால் இன்று கறுப்பின மக்கள் தங்களுக்குள் சிறந்த தலைவர் ஒருவர் இல்லாமல் தவித்துப் போயிருப்பார்கள்.

எனவே-வீரமும்-விவேகமும் இரு கண்கள் என்பது நினைவிலிருக்க வேண்டும்.

வரம்பற்று நீர் இறைத்தால் அது வயலுக்குப் போய்ச் சேராது.

விவேகம் இல்லாத வீரம் இருந்தாலும் அது வெற்றிக்கு வழி சொல்லாது.

(மீண்டும் சிந்திக்கலாம்)

## கைவேலைப் பகுதி-நீங்களும் செய்து பாருங்கள்

### அல்லிப்பூ

**தேவையான பொருட்கள்:**

*வெள்ளைநிற ஸ்ரொக்கிநெற் 1*
*தங்கநிறக் கம்பி 1 டசின்*
*மஞ்சள்நிற மகரந்தம் சிறுகட்டு*
*பச்சைநிற ஸ்ரொக்கிநெற் 1*
*நூல் (கட்டுவதற்கு)*
*கம்ரேப் (ஒட்டும்நாடா)*
*கட்டுக்கம்பி*

**எடுக்கப்படவேண்டிய அளவுகள்:**


1. பெரிய பூ 8 1/2 அங்குல அளவில் 5 துண்டுகள்
2. பெரிய பூ 8 அங்குல அளவில் 5 துண்டுகள்
3. சிறிய பூ 7 அங்குல அளவில் 5 துண்டுகள்
4. மொட்டு 4 அங்குல அளவில் 4 துண்டுகள்
5. இலைகள் 7 அங்குல அளவில் 3 துண்டுகள்
   5 அங்குல அளவில் 1 துண்டு.

**செய்யும்முறை:**

மேற்கூறப்பட்ட 8 1/2 அங்குல அளவிலான 5 தங்கநிறக் கம்பிகளை எடுத்து இரு நுனிகள் சேரும் வண்ணம் குறட்டினால் முறுக்கி- படம் 1ல் காட்டியவாறு- முன் பகுதியை கூர்மையாக அமைத்து வெள்ளைநிற ஸ்ரொக்கிநெற்றினால் இதழ்களை அமைக்கவும். இவ்வாறு அமைக்கப்பட்ட இதழ்களை மகரந்தம் ஐந்தினை எடுத்து கட்டுக்கம்பியில் வைத்துக் கட்டிக்கொண்டு அதன் அருகே இதழை வைத்து நூலினால் கட்டவும். இவ்வாறு ஏனைய நான்கு இதழ்களையும் அருகருகே வைத்துக் கட்டவும். கட்டிய பூவிற்கு கம்ரேப்பினால் நூல்கள் தெரியாமல் சுற்றவும். கம்ரேப் சுற்றியபின்னரே படம் 2ல் காட்டியவாறு (மகரந்தம் தெரியுமாறு) இதழ்களை விரல்களினால் நன்றாக கீழ்நோக்கி வளைக்கவும்.

இவ்வாறு 8 அங்குல, 7 அங்குல பூவையும் அமைக்கவும். மொட்டையும் இவ்வாறு அமைத்து ஓரிதழை மட்டும் நன்றாக கீழே வளைக்கவும்.

இலைகளை படம் 3ல் காட்டியவாறு அமைத்து பச்சைநிற ஸ்ரொக்கிநெற் போட்டு நூலினால் கட்டிய அப்பகுதிக்கு கட்டுக்கம்பியினால் இறுக்கமாக கட்டி தண்டுப் பகுதியை அமைத்துக் கொள்ளவும்.




**எஸ்.எஸ்.**

அமைத்த தண்டுப் பகுதிக்கு கம்ரேப் சுற்றவும். இலைகள் நிமிர்ந்து நிற்க வேண்டும். வளைக்கவேண்டாம்.

இவ்வாறு அமைத்த பூக்கள், மொட்டு, இலைகள் இவைகளை செடியாக அமைப்போம்.

தடித்த கட்டுக்கம்பியை எடுத்து அதில் பூக்கள், மொட்டு, இலைகள் யாவற்றையும் ஒன்றாக சேர்த்துக் கட்டவும். அப்பகுதிக்கு கம்ரேப் சுற்றவும். இவ்வாறு அமைத்த மலர்களை பார்வைக்கு அழகாக்கிக் கொள்ளுங்கள். முற்றத்தில் மலரவேண்டிய அல்லிமலர் எமது கைகளில் மலர்ந்துவிட்டன.

- பூக்கள், இலைகள், மொட்டு என்பனவற்றிற்கு தண்டுப் பகுதிக்கு நீளமாக கம்பி எடுக்கவும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# காளை-காளை முரட்டுக்காளை!

முரட்டுக் காளை மாடுகளை அடக்குவது ஒரு பெருவிருப்பு விளையாட்டு. இலத்தின் அமெரிக்க நாடுகளிலும், ஐரோப்பாவில் சில நாடுகளிலும் முரட்டுக்காளை அடக்கும் போட்டிகள் மிகவும் பிரபல்யம். இப்பொழுது அமெரிக்காவிலும் இந்தப் போட்டிகள் பரவ ஆரம்பித்துவிட்டன. தமிழ் நாட்டில் மிகப் பழங்காலந் தொடக்கம் 'மஞ்சி விரட்டு' என்ற பெயரில் இந்த விளையாட்டு நடைபெற்று வருகிறது.

அண்மையில் அமெரிக்காவின் ஃபுளொரிடா மாநிலத்தில்-தம்பா என்னுமிடத்தில் நடைபெற்ற முரட்டுக் காளையினை மனிதக் காளைகள் அடக்க முற்பட்டபோது பிடிக்கப்பட்ட படம் இது. காளையை அடக்கி அதன் மீது ஏறி சில நொடிகளாவது சவாரி செய்யவேண்டும்.

'கோல்ட் றஷ்' என்பது இக்காளையின் பெயர். இது போட்டிக் கோதாவில் இறங்கி நான்கு வருடங்களாகின்றன. இக்காலங்களில் ஆக 3 தடவைகள் மட்டுமே இதன் முதுகில் வீரர் ஒருவரால் ஏறி சவாரி செய்ய முடிந்தது.

இம்முறை நஷ்வில் என்ற இடத்தைச் சேர்ந்த வேண் ஆர்மர் என்பவர் கோல்ட் றஷ்மீது தாவி ஏறினார். ஏறி இரண்டு நொடிகளில் காளை திமிறிப் பாய்ந்ததில் ஆர்மர், கர்ணமடிக்கிறார். உதவிக்குச் சென்ற மற்றுமொருவர் காளையிடம் உதைவாங்குகிறார். இன்னும் 8 நொடிகள் மட்டும் ஆர்மர் காளையின் மீது அமர்ந்திருக்க வாய்ப்புக் கிடைத்திருந்தால் பல ஆயிரம் டொலர் பரிசு அவருக்குக் கிடைத்திருக்கும். பாவம் பரிசு கிடைக்கவில்லை. மண் கவ்வத்தான் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது அவருக்கு.

# தகவல் பெட்டி






## எனக்கும் தா!

"ஏய்! எனக்கும் ஒரு பங்கு தரமாட்டாயா?" என்று அந்தப் புறா கேட்கிறது. விதையினை உண்பது வட அமெரிக்காவில் காணப்படும் கொறி நாய் இனத்தைச் சேர்ந்த பிராணி. வாஷிங்டன் நகர தேசிய உயிரியல் பூங்காவில் இந்த அரிய காட்சியினை ஒரு படப்பிடிப்பாளர் பிடித்துக் கொண்டார்.

## தபாலில் ஆச்சரியம் பொதிக்குள் நாய்க்குட்டி

இங்கிலாந்தில் எடின்பிறிஜ் என்ற இடத்திலிருந்து 8 மைல்களுக்கப்பால் செல்லப்பிராணிகள் காப்பகம் ஒன்றுள்ளது. பராமரிப்பாரற்ற நாய், பூனை போன்ற வீட்டுச் செல்லப் பிராணிகளை எடுத்து வளர்ப்பது இந்நிறுவனத்தின் பணி. இந்நிறுவனத்துக்கு ஒரு நாள் தபால் மூலம் சிறு பொதி வந்தது. அதனைத் திறந்த ஊழியர்களுக்கு ஒரே ஆச்சரியம். அதற்குள் உயிருடன் ஒரு சிறு நாய்க்குட்டி-மயங்கிய நிலையில் கிடந்தது. அத்துடன் ஒரு துண்டும் கிடந்தது. 'மன்னியுங்கள். இதனைப் பராமரிக்க என்னால் முடியவில்லை' என்ற வாசகம் அதில் காணப்பட்டது.

கடும் குளிரில் ஓரிரவு முழுவதும் அந்த நாய்க்குட்டி தபால் தெரிவகத்தில் கிடந்துள்ளது.



## கவனிக்க நேரமில்லை!

சீனாவின் வீதிகளில் ஒன்றில் தான் இக்காட்சி கிளிக் செய்யப் பட்டது. சீனா இன்னமும் சோசலிச நாடுதான். ஆனாலும் இயந்திரங்களது வேகத்தோடு போட்டி போடும் மனித அவசரம் குடும்பப்பொறுப் புக்களை கவனிக்க நேரமில்லாமல் செய்யும் அவதி மறையவில்லை.

அவசர வாழ்க்கைக்கு ஏற்ப பிள்ளைகளை சைக்கிளில் வைத்துச் செல்ல வசதியான ஒரு கூடை அசையாப் பொருள் போல் அதில் குழந்தையைத் திணித்துவிட்டு, அது பற்றிய சிந்தனைக்கே இடமில் லாமல் விரையும் பெண். மனித உறவுகளின் பொறுப்பற்ற சிதைவுக் காட்சி இது.

## கல் ஒன்று மாங்காய் இரண்டு


"இருக்கும் இடம்தேடி உண்ணத் தந்தால் உண்ணுவேன்" என்றார் பாட்டி ஔவையார்.

இந்த ஒட்டகச் சிவிங்கியாருக்கு ஔவையார் சொன்னது எங்கே தெரியப்போகிறது? அதுதான் உயரத்தில் இருந்து தன் உதட்டில் வைத்து உணவு கொடுக்கும் பாவையை நாடி உணவைப் பெறுகிறது.

இங்கிலாந்திலுள்ள செஸ்ஸிங்ரன் உலகப் புதுமைகள் காட்சியகத்தில் பதிவுசெய்யப்பட்ட படம் இது. பாவையின் பெயர் கிளாரி மீல். அவருக்கு ஒரு கல்லில் இரு மாங்காய். சிவிங்கியாருக்கு உணவு கொடுக்கும் கடமையும் முடிகிறது. ஏணியில் ஏறுவதால் உடலுக்கு பயிற்சியும் கிடைக்கிறது. கில்லாடிதான் கிளாரி மீல்! ஆடிப்பாடி மட்டுமல்ல ஏறி இறங்கி வேலை செய்தாலும் அலுப்பிருக்காதோ?



## பெருவிரலில் உயிர்



இந்தச் சிறுமி 8 அடி உயரமான ஒருதடியில் தன் தலையெழுத்தை நிர்ணயிக்கிறாள். இவளுடைய உயிர் இவள் தந்தையின் இடது கைப்பெருவிரலில்தான் தங்கியிருக்கிறது. இந்தியாவில் பம்பாய் நகர சனசந்தடியுள்ள தெருக்களில் இந்த 3 வயதான சிறுமி புஷ்பா சிங் புரியும் சாகசச் செயல்கள்தான் இவளுடைய குடும்பத்துக்கு அன்றாட உணவுக்கு ஆதாரமாக விளங்குகின்றன. 17 அடி உயரமான கம்பங்களில் தாவி இவள் கர்ணமடிப்பாள். கீழே பாதுகாப்பு வலைகள் எதுவும் கிடையாது. தினசரி பல தடவைகள் இந்த உயிராபத்தான விளையாட்டில் இந்தச் சிறுமி ஈடுபடுத்தப்படுகிறாள். கரணம் தப்பினால் மரணம். ஆனால் வயிறு என்ற ஒன்று இருப்பதால் தினசரி இந்த அவலம்.

www.padippakam.com

# காதல் திருமணமா? —நடிகர் ராம்கி

"ராம கிருஷ்ணன் என்னும் பெயரை சுருக்கி ராம்கி என்று மாற்றிக் கொண்டேன். மிக விரைவில் என்னைப் பற்றி வராவிட்டால் நான் சரியான ஆம்பிளையே கிடையாது." இப்படி மனம் திறந்து பேசுகிறார் மறுபடி எழுந்துவரும் ராம்கி.

"சினிமாவில் இன்னமும் சாதிக்க வேண்டியிருக்கிறது. சாதித்துவிட்டு திருமணம் செய்வேன். இன்னும் இரண்டு ஆண்டுவரை ஓய்வு. அதன் பின் காதல் திருமணமா இல்லையா என்பது முடிவாகும்" என்று பிடிகொடாமல் பேசுகிறார் ராம்கி.

## தமிழச்சி வரப்போறா

நெப்போலியன்-ரஞ்சிதா ஜோடியாக நடிக்க வளர்ந்துவரும் படம் 'தமிழச்சி'. நெப்போலியன்-ரஞ்சிதா நடித்த காதல் காட்சிகள் படமாக்கப்பட்டு மறுவேகமாக வளர்ந்துவருகிறது. இசை-தேவா, பாடல்கள்-வைரமுத்து ஸ்ரீவித்யா, கவுண்டமணி, செந்தில் ஆகியோரும் உண்டு.





## மற்றொரு 12 ஜோடி

'சின்னமேடம்' படம் வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கிறது. அதில் நடித்த ராம்கி-வினிதா ராசியான ஜோடி பட்டியலில் சேர்க்கப்பட்டு விட்டார்கள். அடுத்து இருவரும் இணைந்துள்ள 'உளவாளி' படமும் திரைக்குவரத் தயாராகிறது இருவருக்கும் படு நெருக்கமான காட்சிகள். 'இடுப்பு வலிக்கணும் மாமா' என்றொரு பாடல் காட்சியும் உண்டு. பாடல் வரிகளே போதும். காட்சி எப்படியிருக்கும் என்று ஊகிக்கலாம்.

## கையிலே உரிமை

ரோஜா-செல்வமணி காதல் பரகசிய விசயம். ரோஜா யார் யாருடன் நடிக்கலாம் என்று அனுமதிக்கும் உரிமையை கையில் வைத்திருக்கிறார் ஆர்.கே. செல்வமணி.

## பணமா? மனமா?

நடிகை லட்சுமி அரசியல் பக்கம் போனபின் சினிமா வாய்ப்புக்கள் குறைந்து விட்டன. இப்போது ஒரு புதிய வாய்ப்பு. 'கவிதாஞ்சலி' என்னும் புதிய படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடிக்கப் போகிறார். பணமா-மனமா? என்னும் போராட்டத்தை மையமாகக் கொண்ட கிராமியக்கதை முன்னணி நடிக, நடிகையர்கள் பலர் நடிக்கவுள்ளனர். இசை-தேவா. கதை-திரைக்கதை வசனம்-இயக்கம் பு.வி. வெங்கடேஷ்.

## விஜயசாந்தியின் நிபந்தனை

விஜயசாந்தியை தமிழில் நடிக்க வைப்பவர்களுக்கு துணிச்சல்-பொறுமை இரண்டும் அவசியம்.

அவருக்கு ஊதியம் கொடுக்க துணிச்சல் வேண்டும். அவர் சொல்லும் நிபந்தனைகளைக் கேட்க பொறுமை வேண்டும்.

விஜயசாந்தி போடும் நிபந்தனைகளில் சில கதையில் தனது பாத்திரம் பிரதானமானதாக இருக்க வேண்டும். கதாநாயகனுக்கு சமமான பாத்திரமாகவும் இருக்கவேண்டும். தனது வசதிப்படி படப்பிடிப்பில் கலந்துகொள்ள ஒப்புக்கொள்ள வேண்டும்.

## 'மிஸ் ரேவதி'

'மணி-ரத்னம்' படத்தை தயாரித்து வரும் படநிறுவனம் புதிதாகத் தயாரிக்கும் படம் 'மிஸ் ரேவதி'. ஆனால் நடிகை ரேவதி இதில் கிடையாது. கதாநாயகன் ராஜா. நாயகியாக புதுமுகம் ஒருவர் அறிமுகமாகிறார். முக்கிய வேடத்தில் வடிவேலு நடிக்கிறார். சில்க் சுமிதாவும் உண்டு.

## 'நம்மவர்'

'நம்மவர்' படத்திற்கு தேசிய விருது பெற்றே தீருவது என்ற முனைப்போடு உழைத்து வருகிறார் கமல்.

வித்தியாசமான 'மேக்அப்', ஒவ்வொரு காட்சியும் அசத்த வேண்டும் என்று திட்டமிட்டு கஷ்டம் பாராமல் முழு படப்பிடிப்பு குழுவுமே உழைத்து வருகிறது.

'நம்மவர்' படத்தின் பின் தமிழ்-இந்தி இரண்டு மொழியிலும் தயாராகும் படமொன்றில் கமல் நடிப்பார் என்று ஒரு தகவல்.

## கிசு–கிசு சமாச்சாரம்

### அப்படியா விசயம்?

தமிழில் இருந்து தெலுங்குப் படவுலகப் பக்கம் போய் கவர்ச்சி காட்டியவர் ரம்யா கிருஷ்ணன். இந்தியிலும் போய் ஆடைக்குறைப்பு செய்து உடல் வனப்பை பிரபலமாக்கியவர். இப்போது ரம்யா காதல் வலையில் விழுந்துவிட்டார். தெலுங்கு இயக்குநர் ஒருவரோடு படு நெருக்கமாம். அவர் ரம்யாவை பல படங்களில் நடிக்கவைக்க பலமாக சிபாரிசு செய்துவருகிறாராம். இருவருக்கும் ரகசியத் திருமணம் நடந்துவிட்டதாகவும் தெலுங்குப் படவுலகில் பேசிக் கொள்கிறார்கள்.

### துரத்தோ துரத்து

சிவரஞ்சனி நீலக்கண் அழகி என்று பெயரெடுத்தவர். 'கா' நடிகரோடும் நெருங்கியதால் கிசு-கிசுக்கப்பட்டவர். இதனால் 'கா' நடிகர் வீட்டில் விழிப்பாகி ஒரு பிடி பிடித்துவிட 'கா' நடிகர் சிவரஞ்சனியின் பக்கமே திரும்புவதில்லையாம். பாவம் நீலக்கண் நடிகை. புதுவீடு கட்டிக் குடி புகுந்தும் புதுப்பட வாய்ப்பு இல்லாமல் தயாரிப்பாளர்களை போனில் துரத்துகிறார்.

## கவனம் கடிக்கும்!

நடிகை கௌதமி வீட்டுக்குப் போகிறவர்கள் கவனமாகத்தான் உள்ளே கால் எடுத்துவைக்கிறார்கள். கவனம் தப்பினால் கௌதமி வளர்க்கும் நாய்கள் காலைப்பதம் பார்த்துவிடும். நாய் வளர்ப்பதில் கௌதமியோடு போட்டி போடுபவர்கள் ரேவதி, டிஸ்கோ சாந்தி, மனோரமா. நடிகர்களில் அதிக நாய் வளர்ப்பவர் அர்ஜுன். 7 நாய்கள். அடுத்தது ராம்கி. 5 நாய். பிரசாந்திடம் இருப்பது மூன்று எவ்வளவு உபயோகமான தகவல்கள். மறந்துவிடாதீர்கள்.

## முகப்பில்

ராம்கி-வினிதா
படம்-சின்னமேடம்
விஜயசாந்தி
படம்-ஸ்ரீற ்பைற்றா

## 'எங்கிருந்தோ வந்தான்!'

சத்யராஜ் நடித்து வெற்றிகுவித்த படம் 'கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு' அதை இயக்கியவர் சந்தானபாரதி இப்போது சத்யராஜ் நடிக்க சந்தானபாரதி இயக்கப்போகும் புதியபடம் 'எங்கிருந்தோ வந்தான்' மலையாளத்தில் மோகன்லால் நடித்து வெற்றிபெற்ற 'சித்ரம்' படத்தை தழுவி எடுக்கப்படும் படம் இது. சத்யராஜ் ஜோடியாக ரோஜா நடிக்க, கதை வசனம் எழுதுகிறார் கிரேஸி மோகன. சத்யராஜ் ஸ்ரீவித்யாவோடு நடிக்க இருந்தார் அந்த படத்திற்கான ஒத்திருந்தது பின் போகவில்லை. முன்னர் சிவாஜி நடித்தும் வெற்றிபெற்ற படம் 'எங்கிருந்தோ வந்தான்' இப்போது வந்தான வந்தான ஆகிவிட்டது



விக்னேஷ் — கற்பகம்
படம்-மாமா என் பொண்ணைக்கொடு

www.padippakam.com

# சினிவிசிட்

## வாய்பிளக்கும் செய்தி

### ஆங்கில-இந்திப்பட நடிகர்கள் சம்பளம்

சினிமா மோகம் வளரும் வேகத்திற்கு ஏற்ப நடிக-நடிகையரின் சம்பளமும் உயர்ந்துவருகிறது. இந்திப்பட உலகிலும், ஆங்கிலப் பட உலகிலும் சில நடிகர்கள், நடிகைகள் வாங்கும் ஊதியம் எவ்வளவு என்று தெரிந்தால்- ஐயா! மூக்கில் விரலை வைக்கப் போகிறீர்கள். பட்டியலைப் பாருங்கள்.

| நடிகர்கள் | சம்பளம் |
|---|---|
| சஞ்சய்தத் | 1 1/2 கோடியிலிருந்து 1 3/4 கோடிவரை |
| கோவிந்தா | 1 கோடி |
| சன்னி தியோல் | 80 இலட்சம் |
| ஜாக்கி ஷெராப் | 70 இலட்சம் |
| அனில் கபூர் | 65 முதல் 70 இலட்சம் வரை |
| மிதுன் சக்கரவர்த்தி | 80 இலட்சம் |
| **நடிகைகள்** | |
| ஸ்ரீதேவி | 70 முதல் 80 இலட்சம்வரை |
| மாதுரி டிக்ஷித் | 50 முதல் 60 இலட்சம் வரை |
| ஜூஹி சாவ்லா | 50 இலட்சம் |
| கரிஷ்மா கபூர் | 30இலட்சம் முதல் 40 இலட்சம் |
| ரவீனா டாண்டன் | 20 முதல் 25 இலட்சம் |

**ஆங்கில நடிகர்கள்**

டாம் குரூஸ் 80 கோடி.
ஆர்னோல்ட் ஸ்வார்ஸெனேக்கர் 90 முதல் 95 கோடி.
கெவின் காஸ்ட்னர் 90 கோடி.
சில்வெஸ்டர் ஸ்டாலோன் 80 கோடி.
மைக்கேல் டக்ளஸ் 75 கோடி.
எட்டி மர்பி 70 கோடி.
ஷான் கானெரி 40 கோடி.





சில்க் ஸ்மிதா

## மினிசினி

* போலியோ தடுப்பு, கண்தானம் போன்ற செய்திப்படங்களை ரஜினியை வைத்து இயக்கியவர் எஸ்.பி. முத்துராமன். இவர் மீண்டும் ரஜினி நடிக்க ஐந்து நிமிடம் ஓடக்கூடிய விவரணப் படம் ஒன்றை இயக்கவுள்ளார்.

* கமல் தமிழில் நடித்த படங்கள் தெலுங்கில் மொழிமாற்றம் செய்யப்படும்போது கமலிற்கு குரல் கொடுப்பவர் பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம். இவர் முதல் முதலாக கமல் நடிக்கும் தெலுங்குப் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார். இப்படத்தை கே.விஸ்வநாத் இயக்குவார்.

* ஊர்வசி மலையாளத்தில் தயாரிக்கும் படத்தை இயக்குகிறார் பிரபல மலையாள இயக்குநர் வீஜி தம்பி. இப்படத்தில் கதாநாயகிகளாக ஊர்வசியும், ரேவதியும் நடிக்கின்றனர்.

* கங்கை அமரன் இயக்கத்தில் செல்வா-ரஞ்சிதா நடித்துள்ள 'அத்தை மக ரத்தினமே' என்ற படத்தின் பெயரை தற்போது 'ராசியான பொண்ணு' என மாற்றி விட்டார்கள்.

* பாரதிராஜாவின் 'கருத்தம்மா' படத்தில் நடித்து வருகிறார் ஸ்ரீதேவியின் சித்தி மகள் மகேஸ்வரி. 'கருத்தம்மா' படம் முடிவடைவதற்கு முன் பல பெரிய நிறுவனங்கள் தயாரிக்கும் படங்களில் நடிக்க அழைப்புக்கள் வருகிறதாம். முதல்படம் முடிந்த பின்னர்தான் புதுப்படங்கள் பற்றி யோசிப்பேன் என்கிறார் மகேஸ்வரி.

* பாலசந்தரின் 'வறுமையின் நிறம் சிவப்பு' படத்திலிருந்து இதுவரை 67 படங்களில் நடித்துள்ளார் எஸ்.வி. சேகர். இவர், தனது நாடகப் பிரியா குழு நடத்தி வரும் 'அதிஷ்டக்காரன்' என்ற நாடகத்தை திரைப்படமாக உருவாக்கவுள்ளார். 'அதிஷ்டக்காரன்' மூலம் எஸ்.வி. சேகர் இயக்குநராக பிள்ளையார் சுழி போடுகிறார்.

* மலையாளத்தில் வெளிவந்து வெற்றிபெற்ற படம் 'ராம்ஜிராவ் ஸ்பீக்கிங்'. இந்தப் படத்தின் தழுவல்தான் பிரபு நடித்த 'அரங்கேற்றவேளை'. இப்போது 'ராம்ஜிராவ் ஸ்பீக்கிங்' படத்தின் இரண்டாவது பாகம் 'மாமனார் மத்தாய் ஸ்பீக்கிங்' என்ற பெயரில் தயாராகவுள்ளது.

* 'சிந்துநதிப் பூ' படத்தில் கதாநாயகியாக நடித்த ராஜகுமாரி 'சிந்துநதிப் பூ' வெளிவந்து நீண்டநாட்களுக்குப் பின் புதிய படமொன்றில் நடிக்கவிருக்கிறார். 'சின்னப்பொண்ணு ராதா' என்ற இப்படத்தில் விக்னேஷ் கதாநாயகனாக நடிக்கிறார்.

* பிரபுதேவா, லோகன் குமார் போன்று படங்களில் ஒரு பாடல் காட்சியில் நடனமாடும் வரிசையில் தற்போது சேர்ந்திருப்பவர் மைக்கல். நெப்போலியன்-குஷ்பு நடிக்கும் 'என் பொண்டாட்டி நல்லவ' படத்தில் மைக்கல் ஜாக்ஸன் பாணியில் மைக்கல் நடனமாடுகிறார்.



நெப்போலியன்-ரோகினி
படம்-தாமரை

## எம்.ஜி.ஆர் வழியில் சரத்...

தனது ஒவ்வொரு பிறந்தநாள் அன்றும் பத்திரிகையாளர்களைச் சந்தித்து உரையாடுவது சரத்குமாரின் வழக்கம். அவரும் முன்னர் ஒரு பத்திரிகையாளராகத்தான் இருந்தார். கண்பார்வை இழந்தோர், அனாதைகள், உடல் ஊனமுற்றவர்கள் ஆகியோருக்கும் உதவிகள் செய்து வருகிறார்.

சரத்குமார் தற்போது நடித்துவரும் பிரமாண்டமான படம் 'மகாபிரபு'. ஒரு பாடல் காட்சிக்கு மட்டும் 7 1/2 லட்சம் ரூபாய் செலவழித்து படமாக்கியுள்ளார்கள்.

எம்.ஜி.ஆர். வழியில் ஏழைகளுக்கு உதவும் சரத், எம்.ஜி.ஆர். போலவே பாடல், சண்டைக் காட்சிகளிலும் தனிக் கவனமெடுத்து வருகிறார்.

'ஆணழகன்' படத்தை இப்போது நடிகர் தியாகராஜனே இயக்கி வருகிறார். பிரசாந்த் படங்கள் சமீபத்தில் எதிர்பார்த்தளவு ஓடவில்லை. வெளி இயக்குநர்களை நம்பிப் பயனில்லை என்பதால் பிரசாந்த் நடிக்க தானே இயக்க முன்வந்துவிட்டார் தியாகராஜன்.

'ஆணழகன்' படப்பிடிப்பு ஆரம்பமாகி துரிதமாக நடந்துவருகிறது. 3 1/2 கோடி ரூபாயில் பட்ஜெட் போடப்பட்டிருக்கிறது.

இளையராஜா இசையில் வாலி எழுதிய "ஏலே மச்சி படிக்கும் பட்சி" என்னும் பாடல் காட்சி படமாக்கப்பட்டுள்ளது.

பிரசாந்த் ஜோடியாக இந்தி நடிகை சனேஹா நடித்து வருகிறார். கதை-திரைக்கதை-இயக்கம் மூன்றுமே நடிகர் தியாகராஜன்தான்.

கே.ஆர். விஜயா, பேபி ஸ்ரீதேவி, வடிவேலு ஆகியோரோடு வில்லனாக நடிப்பவர் இயக்குநர் மணிவண்ணன்.



பிரபு-கனகா
படம்-ஜல்லிக்கட்டுக்காளை

## தாமரை படப்பிடிப்பில் அதிசயம்!


நெப்போலியன் காட்டில்தான் இப்போது அடைமழை. 'சீவலப்பேரி பாண்டி' கதையை ஜூனியர் விகடனில் எழுதியவர் தனக்குரிய ஊதியம் கேட்டும் உரிமை கேட்டும் போட்ட வழக்குகளும் படத்தை பிரபலப்படுத்திவிட்டன. நெப்போலியன் அடுத்து எதிர்பார்க்கும் படம் 'தாமரை'.

'தாமரை' படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இரு வெள்ளைக்கார உல்லாசப் பயணிகளையும் பிடித்து படத்தில் நடிக்க வைத்துவிட்டார்கள். கதைப்படி வெள்ளைக்காரர் இருவர் தேவைப்பட்டார்கள். யாரை நடிக்கவைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் படப்பிடிப்பைக் காணவந்தவர்கள் கிடைத்தார்கள் என்கிறார் இயக்குநர் ராஜசிற்பி. 'தாமரை' படத்தின் மூலம் பிரபலமான இயக்குநர் வரிசையில் இடம்பெறலாம் என்பது தான் ராஜசிற்பியின் ஆசை. அதற்காகவே மிக கஷ்டப்பட்டு உழைக்கிறார் மனுசன். படம் ஹிட் ஆனால் எங்கோ போய்விடுவார்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்





## வண்டு



சின்னச் சின்ன வண்டு
சீறும் நல்ல வண்டு!
கருமையான வண்டு
பறந்திடுமே எம்மைக் கண்டு!

நல்ல தேனைத் தேடி
பூவை தினம் நாடி
தேன் குடிக்கும் பாடி! அவை
சுவைக்கும் மலர் கோடி!

மேடு பள்ளம் எல்லாம்
மொய்த்து வரும் வண்டு!

காண்பவர் கண்களை
கொள்ளை கொள்ளும் வண்டு!
கொடுமை ஏதும் செய்தால்
கொடுக்கால் கொத்தும் வண்டு!
குறும்புகள் பல செய்தே
கும்பிடு போடும் வண்டு!

அனுப்பியது- ஆர். ரமேஸ்குமாரி
நாநுஓயா.

"தம்பி சற்றே மெலிவானால்-அண்ணன்
தானடிமை கொள்ள லாமோ?
செம்புக்கும்-கொம்புக்கும் அஞ்சி-மக்கள்
சிற்றடி மைப்பட லாமோ?"
-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

# பிச்சைக்காரர்கள்

ராஜபாளையம் என்ற ஊரில் நீலகண்டன் என்ற பணக்காரன் ஒருவன் இருந்தான். அவனிடம் இலட்சக்கணக்கான பணம் குவிந்து கிடந்தது. பணம் இருக்கும் இடத்தில் மனம் இருக்காது, என்பதற்கு உதாரணமாக அவன் பெரும் கஞ்சனாகவும் திகழ்ந்தான். யாருக்கும் மனமிரங்கி ஒரு காசுதானும் தர்மம் செய்யமாட்டான். அப்படி யாராவது அவனிடம் கையேந்தினால் 'போடா பரதேசி' என்று சொல்லி விரட்டியடித்துவிடுவான்.

ஒருநாள் நடுத்தர வயதுள்ள ஒரு பிச்சைக்காரர் அவன் வீட்டிற்கு வந்து பிச்சை கேட்டார்.

பிச்சைக்காரரின் குரல்கேட்டு மிகவும் ஆத்திரத்துடன் வீட்டிற்குள்ளிருந்து வெளியே வந்த நீலகண்டன், "பிச்சை யாவது, மொச்சையாவது போ போ." என்று அடிக்காத குறையாகத் துரத்தினான்.

அந்தப் பிச்சைக்காரரும் அமைதியுடன் சென்றுவிட்டார்.



மறுநாள் பிற்பகல் நேரம் அதே பிச்சைக்காரர் வேறு வீடுகளில் உணவு வாங்குவதற்காக நீலகண்டன் வசிக்கும் தெரு வழியாக வந்துகொண்டிருந்தார்.

அப்போது அந்தத் தெருவில் பலர் பதறியடித்தபடி அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எதற்காக இப்படி ஓடிக்கொண்டிருக்கிறார்கள் என்று புரியாமல் பார்த்தார் அந்தப் பிச்சைக்காரர். அங்கே பணக்காரனான நீலகண்டனின் வீடு தீப்பற்றி எரிந்துகொண்டிருப்பதைக் கண்டார். உடனே பரபரப்படைந்து நீலகண்டனின் வீட்டை நோக்கி வேகமாக நடந்தார்.

அப்போது காற்று பலமாக அடித்து, நெருப்பு வேகமாக மற்ற இடங்களுக்கும் பரவிக்கொண்டிருந்தது.

வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்த நீலகண்டனின் மனைவி பத்மா "ஐயோ! என் குழந்தை வீட்டிற்குள் அகப்பட்டுக் கொண்டுவிட்டானே, அவனை யாராவது காப்பாற்றுங்களேன்," என்று கதறிக் கொண்டிருந்தாள்.

நீலகண்டன் அங்குமிங்கும் ஓடி, "யாராவது என் குழந்தையைக் காப்பாற்றுங்கள். தயவு செய்து காப்பாற்றுங்கள்," என்று அங்கு கூடி நின்று, வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த சிலரிடம் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டான்.

"உன் குழந்தையைக் காப்பாற்றுவது பெரும் பாவம். மற்றவர்களின் வேதனையைப் புரிந்துகொள்ளாமல், இதுவரை நீ எங்களை உதாசீனப்படுத்தினாய் அல்லவா? இப்போது நீ குவித்து வைத்திருக்கும் பணம் உன் குழந்தையைக் காப்பாற்றும்," என்று அவனால் பாதிக்கப்பட்ட ஒரு சிலர் கூறினார்கள்.

நீலகண்டனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

நெருப்பிற்குள் பாய்ந்து சென்று குழந்தையைக் காப்பாற்றும் தைரியமெல்லாம் அவனுக்குக் கிடையாது. ஆகவே, அவன் மறுபடி சிலரிடம் ஓடிஓடி வந்து கெஞ்சினான். அவன் மனைவியோ, "ஐயோ என் குழந்தை என்று மேலும் அலறினாள்."

அதே சமயம் அத்தனையையும் கேட்டுக்கொண்டிருந்த அந்தப் பிச்சைக்காரர் தன் கையிலிருந்த பாத்திரத்தைக் கீழே போட்டுவிட்டு கண்ணிமைக்கும் நேரத்தில் தீக்குள் பாய்ந்தார்.

அந்தக் காட்சியைக் கண்ட பலருக்கு ஒரு வினாடி மூச்சே அடைத்துவிட்டது. எல்லோரும் வெளியே பதறியபடி இருக்க, உள்ளே சென்ற பிச்சைக்காரர் சிறிது நேரத்தில் உடல் முழுவதும் நெருப்புக் காயங்களுடன், கைகளில் குழந்தையுடன் பாய்ந்து வெளியே வந்தார்.

நீலகண்டனின் மனைவி ஓடிச்சென்று தன் குழந்தையை வாங்கினாள். தாய்ப் பாசம் கரைபுரண்டோட தனது குழந்தையை மார்போடு அணைத்தாள்.

நீலகண்டன் அந்தப் பிச்சைக்காரரைப் பார்த்தபோது, அவரை அவனுக்கு உடனேயே அடையாளம் தெரிந்துவிட்டது. அவரை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்ட அவன், "ஐயா! பிச்சையெடுக்க வந்த உங்களை நேற்று துரத்தி அடித்துவிட்டேன். சிறிதுகூட மனிதத்தன்மையே இல்லாமல் மிகவும் மோசமாக இதுவரை வாழ்ந்துவிட்டேன். எந்தப் பணத்தை விரும்பிச் சேர்த்தேனோ அது இன்று என் குழந்தையைக் காப்பாற்றவில்லை. எந்த மனிதனை வெறுத்து விரட்டி அடித்தேனோ, அந்த மனிதர்தான் என் குழந்தையைக் காப்பாற்றினார். ஐயா என்னை மன்னித்துவிடுங்கள்," என்றான்.

தன் உடம்பில் பட்டிருந்த நெருப்புக் காயத்தின் வலியைக்கூடப் பொருட்படுத்தாது, அந்தப் பிச்சைக்காரர், "ஐயா நான் பசித்தபோது மட்டும்தான் பிச்சை எடுக்கிறேன். மற்ற நேரங்களில் என்னால் கொடுக்க முடிந்த இரக்கத்தையும், உதவியையும், யார் என்றும் பார்க்காமல் அவற்றைப் பிச்சையாகப் போடுகிறேன். நேற்று உங்களிடம் நான் பிச்சை கேட்டபோது நான் பிச்சைக்காரன், இன்று நீங்கள் பலரிடம் உதவியைக் கேட்டபோது நீங்கள் பிச்சைக்காரர். நீங்கள் பலபேரிடம் பிச்சை கேட்டும் யாரும் பிச்சை என்ற உதவியைப் போடவில்லை. நான், நீங்கள் கேட்காமலே பிச்சை போட்டிருக்கிறேன். ஆகவே, சந்தர்ப்பத்தைப் பொறுத்து நாம் எல்லோரும் பிச்சைக்காரர்கள்தான்," என்று கூறிவிட்டு தனது பாத்திரத்தை எடுத்துக்கொண்டு அந்த இடத்தை விட்டுச் சென்றார்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு ராஜபாளையத்தில் மிகப் பெரும் பணக்காரரும் நீலகண்டன்தான், மிகப்பெரும் தர்மவானும் நீலகண்டன்தான்.

குழந்தைகளே! ஆபத்து நேரத்தில் பகைவன் அவலக்குரல் கொடுத்தாலும் பகைமையை மறந்து உடனே உதவ வேண்டும். இதுவே மனிதப் பண்புகளில் எல்லாம் உயர்ந்த பண்பு. ■

## விடுகதைகளும் விடைகளும்

1. தொட்டால் பிடித்துக்கொள்ளும். ஆனால் பசையும் அல்ல! விட்டால் விளக்கெரியும் எண்ணெயும் அல்ல! அது என்ன?
2. செவி இல்லாத செவிடன், செகம் பூராகவும் திரிகிறான். கால் இல்லாத கபடன். காடும் மேடும் போகிறான். அவன் யார்?
3. சின்னச் சதுரப் பெட்டி. சிங்கார வர்ணப் பெட்டி. கற்றோர்க்குக் கைப்பெட்டி. விற்றோர்க்குப் பணப்பெட்டி. அது என்ன?
4. உண்டதை நினைப்பான். உதையை மறப்பான். உயிரைக் கொடுப்பான். வழியும் நடப்பான். அவன் யார்?
5. வேற்றூரிலிருந்து வந்தாள். விதவிதமாய் உடுத்து வந்தாள். காற்றுப் போலப் பறந்து வந்தாள். ககனமெல்லாம் சுற்றி வந்தாள்! அவள் யார்?

**விடைகள்**

1. மின்சாரம் 2. பாம்பு
3. புத்தகம் 4. நாய்
5. கடிதம்

கந்தப்பெருமாள் திமலதாசன்
மட்/மாங்காடு சரஸ்வதி வித்தியாலயம்
செட்டிபாளையம்

1. பெட்டியைத் திறந்தால் கிட்ணன் பிறப்பான்.
2. முக்கண் படைத்தவரே, உன்னை ஒருவர் தீண்ட வருகிறார். உனக்கு யார் சொன்னது? நாவில் தண்ணீர் இல்லாதவர் சொன்னார். அது என்ன?
3. தலை உண்டு; கால் இல்லை. உடம்புண்டு; வால் இல்லை. அடித்தால் சீறும். அது என்ன?
4. நீல நீரைக் கொண்டு நீண்ட நேரம் கக்குவார். அவர் யார்?
5. ஆடி அசைந்து வரும். அடியிலே சிந்தி வரும். கூடி இருக்கும் பெண்களெல்லாம் குடுமி ஆட்டி வரும். அது என்ன?


**விடைகள்**

1. நிலக்கடலை 2. மணி
3. தீக்குச்சி 4. பேனா
5. திரு வைக்கல்லு

ஏ. மகேந்திரன்
ஒலியாமுல்லை,வத்தளை.

## செய்து பாருங்கள்

ஒரு போத்தலில் மண்ணெண்ணெய் எடுத்துக்கொள்ளவும். அதை படத்தில் காட்டியுள்ளபடி ஒரு தட்டில் வைக்கவேண்டும். பின் போத்தலைத் தொடாமல் போத்தலில் உள்ள மண்ணெண்ணெயைத் தட்டிற்கு வரச் செய்யவேண்டும். எப்படி செய்யமுடியும் என்று யோசிக்கிறீர்களா?



ஒரு 'ஸ்ட்ரோ' அல்லது சிறு குழாயின் மூலம் மெதுவாகப் போத்தலினுள் நீரை விட்டுக்கொண்டே இருக்கவேண்டும். மண்ணெண்ணெய் நீரைவிட இலேசானது. அதனால் போத்தலில் உள்ள மண்ணெண்ணெய் மேலே மிதந்து போத்தலின் விளிம்பிற்கு வந்து தட்டில் வழிந்து விடும். அப்படி முழுவதுமாக மண்ணெண்ணெய் வழியும்வரை நீரை விட்டுக்கொண்டே இருக்கவேண்டும்.




உங்கள் நண்பனை ஏதேனும் ஒரு எண்ணை மனதிற்குள் நினைத்துக் கொள்ளச் சொல்லுங்கள். (உதாரணம் 2) அதை இரட்டிப்பாக ஆக்கச் சொல்லுங்கள். (2×2=4) அப்படி இரட்டிப்பாக்கச் சொன்ன தொகையை ஐந்தால் பெருக்க வேண்டும். (5×4=20) வரும் விடையை உங்களிடம் கூறச் சொல்லுங்கள். அந்த விடையில் உள்ள '0'ஐ அழித்துவிட்டால் உங்கள் நண்பர் மனதிற்குள் நினைத்துள்ள எண் எது என்று நீங்கள் சரியாகக் கூறிவிடலாம். ஒரு எண்ணை இரட்டிப்பாக்கி அந்த எண்ணை ஐந்தால் பெருக்குவதும், 10ஆல் பெருக்குவதும் ஒன்றுதான். இரண்டு விதத்திலும் ஒரே விடைதான் வரும்.

அதுபோல ஒரு எண்ணை நினைத்து (உதாரணம் 5) அதனுடன் 7ஐக் கூட்டவும் (5+7=12) கூட்டி வந்த விடையை இரட்டிப்பாக்கவும். (12+12=24) அதனுடன் 16ஐக் கூட்டவும். (24+16=40) அதை இரட்டிப்பாக்கவும். (40+40=80) அப்படி வந்த எண்ணை 4ஆல் வகுக்கவும். (80÷4=20) அந்த விடையிலிருந்து 15க் கழிக்கவும் (20-15=5) நீங்கள் நினைத்த எண் கிடைக்கும்.

## அறிவோம் மனதில் பதிவோம்



விமானக் கப்பல், விமானம் போலவே விண்ணில் பறக்கக்கூடியது. இதனை ஆங்கிலத்தில் 'எயார் ஷிப்' அல்லது 'டிரிட்ஜிபிள்' என அழைப்பர். பெருமபாலும் இவை இராணுவ நடவடிக்கைகளுக்குத்தான் பயன்படுத்தப்படும். 1931ம் ஆண்டு ஏப்ரல் 4ம் திகதி அமெரிக்க விமானப் படையைச் சேர்ந்த விமானக் கப்பல் 207 பயணிகளை அழைத்துச் சென்றது. விமானக் கப்பலில் குறைந்தளவு பயணிகள்தான பயணம் செய்யலாம். முதன்முறையாக நிறையப் பயணிகளை அழைத்துச் சென்று சாதனை புரிந்துள்ளது அமெரிக்க விமானப்படை.




இங்கிலாந்தில் வாக்குரிமை பெறப் பெண்கள் பல ஆண்டுகள் கடுமையாகப் போராடினர். இதில் பல பெண்கள் இறந்தனர். இந்த இயக்கத்தை 'சப்ரஜெட்' என அழைத்தனர். 1908ம் ஆண்டு ஜுன் 24ல் 'சப்ரஜெட்டுக்கள்' ஒரு விமானக் கப்பல் (பலூன் போன்ற பறக்கும் இயந்திரம்) இங்கிலாந்து பாராளுமன்றத்திற்கு மேல் பறந்து அங்கிருந்து, 'எங்களுக்கு வாக்குரிமை தா,' என்ற வாசகங்கள் அடங்கிய தாள்களைக் கீழே வீசி எறிந்தனர்.

## எழுதுங்கள் நீங்களும்

பாப்பா முரசில் உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. எழுதுங்கள்.

பாப்பா முரசு
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 13.08.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 52
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 49

**பரிசுக்குரியவர்**

அல்துல்காதி அப்துல் முகீத்து
கிண்ணியா அ.மு. ஆண்கள் பாடசாலை
கிண்ணியா-03.

**பாராட்டுக்குரியவர்கள்**

வை. சுகந்தி
விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்
திருகோணமலை.

ம. நளினி
நாமகள் வித்தியாலயம்-கல்குடா

ந. யோகேந்திரன்
புனித அந்தோனியார் வித்தியாலயம்
வத்தளை.

சி. லோகிதராஜ்
புனித வளனார் த.வி
திருகோணமலை.

எம்.எஸ்.எம். சக்ரான்
அல்-அக்ஸா மு.வி.
பொல்கஹவெல.

சி. செந்தூரன்
கொழும்பு இந்துக் கல்லூரி
இரத்மலானை.

பாதிமா ரிஸ்னா
பலாங்கொடை.

து.லிசாந்தன்
சரஸ்வதி தேசிய கல்லூரி-பதுளை

## உயர்ந்த இடத்தில்



இமயமலைப் பகுதிகளில் ஒருவகை வாத்துக்கள் உள்ளன. அவற்றிற்கு 'பார் ஹெடட் கூஸ்' என்று பெயர்.

இவை மற்றப் பறவைகளைவிட மிக உயரமான இடத்தில் வாழ்வதோடு 7500 மீற்றர் உயரத்தில் பறக்கின்றன. அவ்வளவு உயரமான இடத்தில் பறவைகள் பறப்பது அரிது. இவை சாதாரண வாத்துக்களைவிட பெரியதாகவும், அன்னப்பறவைகளைவிடச் சிறியதாகவும் இருக்கும். இமயமலையில் உள்ள பெரிய ஏரிகளில் இவை அதிகம் காணப்படும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# சொன்னது நீதானா?



முரசு 59இல் வெளியான படத்திற்கு பொருத்தமாக- வாசகர்கள் தம் மனதில் பட்டதை மடலில் பதிவுசெய்து அனுப்பியுள்ளார்கள்.

"காலையில இருந்து ஒன்னும் சாப்பிடாம ஏண்டா உம்முனு உக்கார்ந்திருக்கே?"
"நீங்கதானே அப்பா என்னைத் தேர்தல்ல நிக்க வேணாம்னு சொல்லிட்டீங்களே!"
"தேர்தலாவது மண்ணாங்கட்டியாவது [illegible]"
"[illegible] தேர்தல்ல நிக்கிறேன்னு [illegible]"

ஆர். பாலகிருஷ்ணன்-மாத்தளை.

**டாடி இலக்சனில் நிற்கிறார்**

"டேய் என்னடா மிண்டர்ர கப்பல் கவிழ்ந்த மாதிரி கவலையா இருக்காரு!"
"அவர்ட டாடி இந்த முறையும் இலக்சன் கேக்குறாராம்"
"அட சந்தோசப்பட வேண்டிய சங்கதி.. இதுக்குப் போய்..."
"நீயொண்டு. அவர்ட டாடிக்கு போன முற இலக்சன்ல எத்தனை வோட் கிடைச்சதுன்னு தெரியுமே?"
"தெரியாது.."
"மூன்றே மூன்றுதான்"
"!!!!"

எம்.வை.எம். ஸஹ்ரான்-குருநாகல்.

அரவணைக்க கரங்களில்லா
அன்புக்கேங்கும் பிள்ளைநான்
காளை நானும் வாடுகின்றேன்
கனவுகள் . நாளை தூங்குமா
பாதைகளின் சோக விளிம்பில்
என் பௌர்ணமிக்காக தினம்
காத்திருக்கிறேன்.

தெ.லோஜனா-கொழும்பு-15.

**யாரிடம் சொல்லி அழ..!**

வடக்கிலே இருந்து படிக்க முடியாது
தலைநகரில் ஒரு டியூசனிலாவது
படித்து பரீட்சை எழுதுவோமென்றால்
இங்கே எதற்கு வந்தாய்? என்று
கேட்கும் பாதுகாப்பு பகுதி..
ஐ.சி.யைக் காட்டினால்
ஓ.. யாழ்ப்பாணமா என்று

வேறு ஒரு கேள்வி
இந்த லட்சணத்திலே தேர்தல் வேறு!
அமைதி..! அது எட்டாக் கனியோ..

எம்.ஆர்.எம். மஹ்ரூப்-அரனாயக்க.

**பாவம்**

"ஓட்டுப்போட
ஓட்டுரிமை உண்டு
ஆனால் தங்க இடமில்லை.
இனி ஓட்டு வீடுதான்
ஓட்டையாச்சே"

ம. ஸ்ரீகாந்தன்-இங்கிரிய.

**நம்ப முடியவில்லை!**

என் நந்தவனத்தில் நெருப்பா?
யார் சொன்னது?
மீட்டிய வீணை குப்பை(த்)
தொட்டியில் வீழ்ந்ததா...?!
"நீ உடலென்றால்
உயிராய் இணைந்திருப்பேன்"
என்றவளா இன்று
எனைமறந்து சென்றாள்?
வஞ்சியே..! நீயுமெனை
வஞ்சித்து விட்டாயடி..!

வே.ஆ.புட்கரன்-திருப்பழுகாமம்-2.

"டேய் சீதனம் வாங்காமல் திருமணம் செய்வதென்றால் நீ செய். நான் இன்றே எனது வாழ்வை முடித்துக் கொள்கிறேன்." அம்மாவின் அலறல்.
"சீதனத்துக்காகவா என்னைக் காதலித்தீர்கள்? சீதனம் வேண்டுமென்றால் நீங்கள் விரும்பிய பெண்ணைப் பாருங்கள். நான் இன்றே எனது வாழ்க்கையை முடித்துக் கொள்கிறேன்."
அன்புக்காதலியின் சோகம் கலந்த வார்த்தைகள்.
இருவருக்குமிடையில் மகனாய், காதலனாய்...

என். அருளானந்தம்-மண்டூர்.

**கட்சியா, காதலா?**

என் இதயக் கோட்டையினுள் நுழைந்து காதல் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் என் ஆருயிர் கண்ணம்மா திடீரென்று பிட்டிசன் அடித்துள்ளாள்.
"பிரியமான அன்பரே...,
நான் காலம் முழுவதும் உன் இதயக் கோட்டையினுள் அமர்ந்திருக்க வேண்டுமானால் நீ என் கட்சிக்கு வரவேண்டும். நானோ ஆளும் கட்சி, நீயோ எதிர்க்கட்சி. நீ என்ன கட்சியென்று தெரிந்துகொள்ளாமல் உன்னை நேசித்து விட்டேன். மன்னித்துக்கொள். நாம் இணைய வேண்டுமா..? வந்துவிடு என் கட்சிக்கு. நீயென்ன செய்வாயோ நானறியேன். இத்துடன் என் மடலை நிறைவு செய்கின்றேன். இரகசிய மடலை பரகசியம் பண்ணாதே. உன் கருத்தை எழுதி அனுப்பு குட்டை."

என்றும் அன்புடன்,
நான்.

பர்ஹானா புவாத்-கல்முனை-3.

தோழனே..!
'நேற்றிருந்தவர்கள் இன்றில்லை
இன்றிருப்பவர்கள் நாளை இருப்பதும் நிச்சயமில்லை'
நிஜங்கள் போல் உலாவும் நிழல்கள்
அப்படிச் சொன்னதற்காக..
இன்று மட்டும்தான் நம்முடையது என்று—எண்ணி விடாதே!
நாளையதும் நம்முடையதே
நடைகள் அனைத்தையும் முன்னேற்றத்தின் படிக்கல்லாக நினைத்து
வழிநடை வைத்தவர்கள் முன்—வாழ்ந்து காட்டுவோம்
வா.. தோழனே! எழுந்துவா.


ஆர். சாந்தசீலன்-பொத்துவில்.

அவன்: ஏண்டா ரகு அந்த கீதாவையே நெனைச்சி எத்தனை நாளைக்குத் தான் இப்படியே இருக்கப் போற...?

இவன்: இல்லடா ஆனந்த். எனக்கு 'பூட்' தந்த, அந்த கீதா யாரென்று அடையாளம் காட்டு. அவளை உனக்கு எப்படியாவது கட்டி வைக்கிறேனென்று கூறிய கணேஷே நாளைக்கு அவளை கட்டப் போறான். அவட பெயர் கீதாஞ்சலி என்ற படியால் அவனுக்கு கண்டுக்க ஏலாம போயிருக்கும். நான் எந்த மூஞ்ச வைச்சிக்கிட்டு அந்த கலியாணத்துக்குப் போவேன்?

எம். குதுப்டீன்-பலாங்கொடை.

# தேன் கிண்ணம்



**எங்களையும் புதைத்துவிடு!**

பாடுகளால் எங்கள்
பூமி!
✦
ரவைகளின்
ராவு விருந்துக்கு
உயிர்களின்
யாசிப்பு!
✦
சுவாசிக்கும்
பிராண வாயுவிலும்
பிண நெடி!
✦
வெளி மூச்சம்
விடை பெற
மறுக்கும்
இரவின்
அரவங்கள்!
✦
அமைதியின்
கழுத்தை
அகோரமாய்
நெரித்து—இரு
அமாவாசைக்குள்
நெட்டித்தள்ளி
எங்கே? இந்த
தேதசத்தின்
அவசர பயணிப்பு.
✦
காத தூரத்தில்
கண் சிமிட்டி
காலையில்
காலமாகும்
நட்சத்திரமாய்
"சமாதானம்"
...
இயற்கையே
இன்றில்
இரத்தத் தோய்வில்
இரசிக்க எதுவுமில்லை
"............"ஐ
தவிர.
மரங்கள்
மாடிகள்
மாதாவின் மடிகள்
மனங்கள்
எல்லாவற்றிலும்
செல் தின்ற
சிதிலங்கள்.
✦
தீயாய், தீயாய்ப்
புலரும்
தேசத்தில்
கதறி அழும்
அவலங்களின்
கண்ணீர் அறுவடை
✦
இழுத்த
மூச்சிலும்
இரத்த வாடை!
என்ன
சிரமம்
இசேரவிலும்
சிட்டை போட்டு
சூரியக்கழிவுகளால்
சட்டெரிக்க!
✦
கிலி பூத்த
முகத்தோடு
அகத்திலும் தீ
சமந்து
அலையும்
அகதிகளைப் பார்.
✦
இராவணன்
இட்ட தீ
இன்னுமா
இங்கு?
✦
தூக்கியவைகளை
தூக்கி எறி
வாக்கியங்களால்
வகை செய்.
✦
சாந்தியையும்
சமாதானத்தையும்
கொண்டு
சாதிகள்
மதங்கள்
மொழிகளால்
வேற்றுமைப்படாத
புதிய தேசத்துக்கு
அழைத்துப் போ.
✦
வேட்டுக்களால்
விதியை
விரைவாய் நெய்யும்
வேண்டாத
வாழ்க்கையை
விரட்டி விடு.

நிவேப்பிரியன் (முரளி)
பொத்துவில்-03.





**விழிக்குள் ஒரு விழா**

"என் இதயப் பூங்காவில்
காதலை விதைத்த
இனியவளே....!
❤
எனக்கும்
இதயம் இருக்கின்றது
என்று
இனம் காட்டிய
எழில் தேவதையே.!
❤
நீ எனக்கு மட்டுமே
உரியவள் என்ற
நினைப்பு
எனக்குள் எண்ணிலடங்காத
இனிமைகளை
இறைக்கின்றது!
❤
காதலி
என்னை கவிஞர்
என்று
கதைக்கின்றார்களே
உன்னை ரசிக்கும்
கலைஞன் என்று
திருத்தி சொல்லக்கூடாதா?
❤
புல் நுனியில்
இருக்கும்
பனித்துளிபோல
பரிசுத்தமானவளே
❤
என் பாக்களுக்கும்
பதவி தரும்
எண்ணத்தில்
உன் பார்வை
எனக்காக
படியேறி வந்ததோ?
❤
அதிகாலைத் தென்றல்
போல
அழகானவளே!
என்
எதிர்கால சூனியத்துக்குள்
சூரியப்பவனியை
சமந்து வந்தவள்
நீ தானே!!
❤
இளைய தேவதையே!
இளவேனில் காலம்
போல்
இனிமையானவளே!
உன்னை
நான் காதலிக்கின்றேன்.
❤
ஏ கண்களே!
காதலை தந்தீர்கள்
காணும் வரம்
மீண்டும் இல்லையா?
ஆம்
தென்றல் சுமந்த
உன் சுகந்தம்
சொல்கிறது
என் தேவதை
தூர வருகிறாளாம்
ஓ.....
என் வாசல் நோக்கிய
வண்ண வசந்தமே!
வா.....
மெதுவாய் வா!
என் கவிதைச்சோலைக்கு"
கௌரவம் கிடைக்கட்டும்.

சாந்தினி சந்திரன்-பிரான்ஸ்.



**இது ஒரு தேர்தல் காலம்.......!**



உறங்கிக் கிடந்த எங்கள்
ஊரெங்கும் ஊர்வலங்கள்.
உரத்த குரலெடுத்து
அலறும் ஒலிபெருக்கிகள்!

வெள்ளைச் சுவரெங்கும்
வண்ணப் போஸ்டர்கள்.
இதுவரை காணா முகங்களின்
கை கூப்பிய புன்னகைகள்!

ஊருக்காய் உழைத்தவன் நான்
உரிமைக்காய் குரல் கொடுத்தவன் நான்!
இல்லக் கதவுகளை
எப்போதும் திறந்து வைத்து
உங்கள் உள்ளக்குறைகளை
உணர்ந்து தீர்த்தவன் நான்!
இன்னும்....... இன்னும்...!

சுய விளம்பரங்கள்
கணக்கின்றிப் பிரஸ்தாபம்
திருவாளர் பொதுஜனம்

தலை குழம்பி திண்டாட்டம்!

சில புண்ணிய ஆத்மாக்களின்
காலடி படாதா என ஏங்கிய
குடிசைகளுக்குள்—இன்று
முக்கிய புள்ளிகளின்
கௌரவ விஜயங்கள்...!
எப்படி வந்தது இத்தனை மாற்றம்?
ஓ.....! இது ஒரு தேர்தல் (சே)காலம்!

டி.எம்.சுபைர்கான்
காத்தான்குடி-06.

**வெலிக்கடைப் படுகொலை**

காற்றென்ன செய்யும் பாவம்
தன் பாட்டிற்குச் சத்தமிட்டிருக்கும்
கடலலை மிக வெகுண்டு
தரையிற் தலையடித்தழுதிருக்கும்
முகமிழந்த நிலமகளும் உடல் கூனிப்
பெரிதாய்
தன் வயிற்றைப் போய்
நொந்திருப்பாள்.

நடந்தது அது
வாயும் வெறித்தபடியிருக்க
பூட்டிய சிறைக் கதவுள்
ஒரு "புனித வேள்வி"

யாரங்கே
வானத்திலிருந்து வேடிக்கை பார்க்கும்
விண் மீன்களைப் போல
உலகில் உலவும் ஒவ்வொரு மனிதனும்
சடங்களாய் விறைத்திருக்க
என்ன,
மதில்களைப் பிளந்து
நரசிம்மனோ வரப் போகிறான்
நீதி கேட்டு—?

அனாதையாய்ப் போன
அபயக் குரல்கள்
மண்டபத்துள்ளேயே
மோதி ஓய்ந்தன


துடித்துத் துடித்து
மரணித்த உடல்கள்
வடித்த ரத்தத்தின்
பச்சை நெடி கூட
எத்தனை நாளைக்கு
நின்று நாறும்?

எல்லாம் மறைந்தன

ஒன்றும் நடவாதது போல
உலகம்
திரும்பவும் இயங்கு
கலண்டரில் மட்டும்
அந்த நாள்
திரும்பத் திரும்ப
வந்து போகுது

ஆடி 25.

-மதுரகவி-



| மீனம்: | சுப நேரம் |
|---|---|
| (பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) | |
| ஞாயிறு- தெய்வ நம்பிக்கை, மனப்பயம் நீங்கும். | காலை 7 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, வீண் குறைகேட்டல். | பகல் 12 மணி |
| செவ்வாய்- மனமகிழ்ச்சி, முயற்சிகளில் வெற்றி. | காலை 9 மணி |
| புதன்- துயர் நீங்கும், புதிய முயற்சி. | பிப 1 மணி |
| வியாழன்- குடும்பசுகம், சுபகாரிய மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 9 மணி |
| அதிஷ்டநாள்-திங்கள், இலக்கம்- 1 | |

| மேடம்: | சுப நேரம் |
|---|---|
| (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) | |
| ஞாயிறு- ஆடம்பரச் செலவு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- தொழில் பேறு, பணவருவாய். | பகல் 12 மணி |
| செவ்வாய்- முயற்சிகளில் வெற்றி, கடன் படல். | காலை 6 மணி |
| புதன்- உறவினரால் தொல்லை, மனக்கசப்பு. | பகல் 11 மணி |
| வியாழன்- பயனற்ற செயல், இடமாற்றம். | காலை 8 மணி |
| வெள்ளி- தெய்வ நம்பிக்கை, முயற்சித் தடை நீங்கும். | காலை 10 மணி |
| சனி- அந்நியர் உதவி, வெளியிடப் பயணம். | பகல் 11 மணி |
| அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 7 | |

| இடபம்: | சுப நேரம் |
|---|---|
| (கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை) | |
| ஞாயிறு- உயர்ந்த எண்ணம், தொழில் மேன்மை. | காலை 9 மணி |
| திங்கள்- செலவு மிகுதி, புதிய தொழில் முயற்சி. | பகல் 1 மணி |
| செவ்வாய்- குடும்ப சுகம், வீண் மனஸ்தாபம். | காலை 9 மணி |
| புதன்- அந்நியர் உதவி, செய்தொழில் கேடு. | பகல் 12 மணி |
| வியாழன்- பணச் செலவு, கடன் தொல்லை. | காலை 8 மணி |
| வெள்ளி- மனமகிழ்ச்சி, செய்தொழில் இலாபம். | பி.ப 2 மணி |
| சனி- உறவினரால் மகிழ்ச்சி, தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 4 | |

| மிதுனம்: | சுப நேரம் |
|---|---|
| (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) | |
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவருவாய். | காலை 9 மணி |
| திங்கள்- மனஸ்தாபம், உறவினர் தொல்லை. | காலை 6 மணி |
| செவ்வாய்- தெய்வானுகூலம், காரியசித்தி. | பகல் 12 மணி |
| புதன்- துயர் நீங்கும், முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| வியாழன்- பணமிகுதி, கௌரவக் குறைவு. | பகல் 11 மணி |
| வெள்ளி- காரியசித்தி, எடுத்த கருமம் வெற்றி. | பகல் 12 மணி |
| சனி- அந்நியர் சகவாசம், உயர்ந்த எண்ணம். | காலை 6 மணி |
| அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6 | |

| கும்பம்: | சுப நேரம் |
|---|---|
| (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி) | |
| ஞாயிறு- தேகசுகம் பாதிப்பு, வைத்தியச் செலவு. | காலை 6 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, கௌரவம். | பிப 1 மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, மனக் கவலை. | காலை 7 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, குடும்பசுகம். | காலை 10 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணத்தடை. | பிப 1 மணி |
| சனி- கௌரவக் குறைவு, காரியத்தடை. | காலை 7 மணி |
| அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 3 | |

## இந்த வாரம் உங்கள் பலன்
(07.08.94 முதல் 13.08.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| கர்க்கடகம் | - | சூரியன், புதன் |
| கன்னி | - | வெள்ளி |
| துலாம் | - | வியாழன், இராகு |
| கும்பம் | - | சனி |
| மேடம் | - | கேது |
| மிதுனம் | - | செவ்வாய் |
| சிம்மம் | - | புதன் (11.08.94ல்) |

★ சந்திரன்-கர்க்கடகம், சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார் ★

| கர்க்கடகம்: | சுப நேரம் |
|---|---|
| (புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்) | |
| ஞாயிறு- மனக்கலக்கம், பணத்தட்டுப்பாடு. | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, முயற்சி மேன்மை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், புதிய நம்பிக்கை. | பகல் 12 மணி |
| புதன்- கடன்தொல்லை நீங்கும், தேகசுகம் பாதிப்பு. | காலை 8 மணி |
| வியாழன்- உறவினரால் நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, வெளியிடப் பயணம். | பகல் 11 மணி |
| சனி- பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9 | |

| மகரம்: | சுப நேரம் |
|---|---|
| (உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) | |
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| திங்கள்- தெய்வானுகூலம், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், குடும்ப சுகம். | பி.ப 1 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மறைமுக தொல்லை. | காலை 8 மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், மனக்கலக்கம். | பகல் 11 மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், தொழில் மந்தம். | பகல் 12 மணி |
| அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -5 | |

| சிம்மம்: | சுப நேரம் |
|---|---|
| (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) | |
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, பெரியோர் உதவி. | பகல் 11 மணி |
| புதன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| வியாழன்- வீண் அலைச்சல், பொருள் விரயம். | காலை 9 மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், காரியசித்தி. | பி.ப 1 மணி |
| சனி- தெய்வ நம்பிக்கை, முயற்சிகளில் வெற்றி. | காலை 8 மணி |
| அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 5 | |

| தனு: | சுப நேரம் |
|---|---|
| (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) | |
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| திங்கள்- வீண் பிரயாசம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- குடும்ப சுகம், காரியசித்தி. | பகல் 12 மணி |
| புதன்- எடுத்த கருமம் வெற்றி, பணவரவு. | காலை 9 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| வெள்ளி- அந்நியர் தொல்லை, அகால போசனம். | காலை 6 மணி |
| சனி- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப 1 மணி |
| அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -8 | |

| விருட்சிகம்: | சுப நேரம் |
|---|---|
| (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) | |
| ஞாயிறு- பொருளாதார முன்னேற்றம், மனமகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| திங்கள்- கடன்பயம் நீங்கும், காரியானுகூலம். | காலை 6 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | காலை 8 மணி |
| வியாழன்- உறவினர் தொல்லை, மனக் குழப்பம். | பகல் 12 மணி |
| வெள்ளி- கடன் சுமை, காரியக்கேடு. | காலை 9 மணி |
| சனி- அந்நியர் உதவி, வெளியிட பயணம். | பகல் 11 மணி |
| அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2 | |

| துலாம்: | சுப நேரம் |
|---|---|
| (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) | |
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, குடும்பசுகம். | பி.ப 2 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, வீண் தொல்லை நீங்கும். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- கௌரவக் குறைவு, தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| புதன்- துயர் நீங்கும், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- பயனற்ற செயல், வீண் குறை கேட்டல். | காலை 8 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், வீண் சந்தேகம். | காலை 6 மணி |
| சனி- கடன் படல், செலவு மிகுதி | பி.ப 2 மணி |
| அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 7 | |

| கன்னி: | சுப நேரம் |
|---|---|
| (உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) | |
| ஞாயிறு- பணவரவு, முயற்சிகளில் மேன்மை. | காலை 8 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- தெய்வ நம்பிக்கை, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- அந்நியர் நட்பு, மன அமைதியின்மை. | காலை 8 மணி |
| வெள்ளி- குடும்ப சுகம், ஆடம்பரச் செலவு. | பி.ப 2 மணி |
| சனி- துயர் நீங்கும், பணத்தடை. | காலை 9 மணி |
| அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 3 | |

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ விந்தைகள்




## அபூர்வமான பிரசவ சாதனை!

## 9 நாள் இடைவெளியில் 4வது குழந்தை

ஒரே சூலில் பல குழந்தைகள் பிறப்பது இன்று ஒன்றும் பெரிய அதிசயமில்லை. ஆனால் முதல் குழந்தை பிறந்து ஒன்பது நாட்களின் பின்னர்தான்-கடைசி நாலாவது குழந்தை பிறந்தது. இது மருத்துவ உலகில் இதுவரை நிகழ்ந்திராத அபூர்வ சம்பவம் என்று உலக மருத்துவர்கள் பலர் கருத்துக்கூறியுள்ளனர்.

கனடா-சாஸ்கற்றூன் எனும் இடத்தைச் சேர்ந்த ஜாக்கி என்ற தபால் நிலைய ஊழியர், பென் ஜவர்சன் என்பவரை மணம் முடித்து பல ஆண்டுகளாகியும் இவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. ஜாக்கியைப் பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவளுக்கு கரு முட்டைகளை உற்பத்தி செய்யும் ஆற்றல் இல்லை எனக் கண்டுபிடித்தனர்.

அவளை எப்படியாவது தாய்மை எய்த வாய்ப்பளிக்க வேண்டும் என்று கனடாவிலுள்ள ரோயல் கனடியன் மருத்துவமனையில் மகப்பேறுத்துறையைச் சேர்ந்த டாக்டர் ஓ.ஏ.ஓலாரன் போசன் தலைமையில் ஒரு குழுவினர் தீர்மானித்தனர். அவர்கள் பரிசோதனைகள் பலவற்றை நடத்தி ஜாக்கி கருமுட்டைகளை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வெற்றிகண்டனர். ஒரே தடவையில் அவள் 4 முட்டைகளை உற்பத்தி செய்ததும் கணவன் பென்னுடைய ஆண் கருவுயிர் நீர்மத்தை மருத்துவர்கள் ஜாக்கியின் உடலினுட் செலுத்தினர். ஜாக்கியும் கருவுற்றாள்.

'ஸ்கானிங்' பரிசோதனைகளின்போது இரு ஆண், இரு பெண் குழந்தைகள் உருவாகுவது பெற்றாருக்கு மட்டுமல்லாமல் மருத்துவர்களுக்கும் பேரானந்தத்தைத் தந்தது.

கடந்த வருடம் நவம்பர் 21ல்-கருவுற்று ஏழாவது மாதம் முடிந்தபோது-ஜாக்கி பிரசவ வேதனைக்குள்ளானாள். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இரண்டு மணிநேர பிரசவ வேதனையின் பின்னர் கிறிஸ்டபர் லைல் என்னும் குழந்தை பிறந்தது. ஆக 2 இறாத்தல் 3 அவுன்ஸ் எடைதான் இருந்தது அக்குழந்தை.

அடுத்தடுத்து ஏனைய மூன்று குழந்தைகளும் பிறக்கும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் பிரசவ வேதனை நின்றுவிட்டமையினால் பிரசவத்திற்கான சாலையிலிருந்து மற்றப்பிரிவுக்கு ஜாக்கி எடுத்துச் செல்லப்பட்டாள்.

மூன்று நாட்களின் பின்னர்-நவம்பர் 23ம் திகதி மறுபடியும் பிரசவ வேதனைகண்டது. அலெக்ஸாண்டிரா றோஸ் என்ற குழந்தை பிறந்தது. இதன் எடை ஆக 2 இறா. 4 அவுன்ஸ். மூன்றாவது நாலாவது குழந்தைகள் வெளி வருவதற்கான அறிகுறிகள் தென்படாமையினால் மீண்டும் மறுபிரிவுக்கு ஜாக்கி அனுப்பப்பட்டாள்.

நவம்பர் 30ம் திகதிவரை பொறுத்திருந்தனர். இனித் தாமதித்தால் தாயும் சேய்களும் பிழைப்பதே கடினம் என்று கண்ட மருத்துவர்கள் 'சிசேரியன்' அறுவை சிகிச்சை மூலம்-முதற் குழந்தை பிறந்து 9வது நாளன்று- சாரா ஜின்னெற் (2 இறா.1அவுன்ஸ்) மத்தியூ ஸ்கொட் (2 இறா.7 அவுன்ஸ்) ஆகிய இரு குழந்தைகளையும் வெளியே எடுத்தனர். குறை மாதத்தில்-எடையும் குறைவாகப் பிறந்த 4 குழந்தைகளும் சில மாதங்கள் மருத்துவமனையில் வைக்கப்பட்டு இப்பொழுது பெற்றாரின் கைகளுக்கு வந்து சேர்ந்துவிட்டன.

"இத்தனை நாட்கள் இடைவெளியின் பின் குழந்தைகள் பிறந்தது உலக வரலாற்றில் இதுவே முதற்தடவை" என்று சாஸ்கச்சேவன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மகப்பேறு மருத்துவத்துறையின் தலைவர் டாக்டர் றோகர் டேர்னெல் கூறுகிறார்.

## கல்கத்தா நகரில் களைகட்டும் தொழில்

## உடல் உறுப்புக்கள் விற்பனை!





இங்கு உங்களுக்குத் தேவையான சகல உடல் உறுப்புகளும் (அ)நியாய விலையில் தாராளமாகக் கிடைக்கும்!

பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்.

பணம் இருந்தால் நோய் வரினும் பிணமாகாமல் குணமாகலாம்.

சிறுநீரகக் கோளாறா கண் பழுதா: காதுபறையிலே பழுதா: எங்காவது விழுந்து எலும்பு முறிந்து இனி சரிபண்ணவே முடியாது என்று தெரிகிறதா?

யோசிக்கத் தேவையில்லை. ஆனால் ஒரு நிபந்தனை. உங்கள் பையில் பணம் இருக்கவேண்டும்.

வாகனங்களுக்கு ஏதாவது பழுது வந்தால் உதரிப்பாகங்களை மாற்றுவது போல மனித வாகனத்திலும் உதிரிப் பாகங்களை மாற்ற முடியும்.

கண், காது, எலும்பு-மச்சை, சிறுநீரகம், தோல் ஆகிய உறுப்புக்களை விற்பதற்கென்றே இப்போது இடங்கள் இருக்கின்றன.

பகிரங்கமாக கடைப்பெயர் போட்டு, விலைப்பட்டியல் வைத்து கூவி விற்கும் நிலை இல்லையே தவிர உடல் உறுப்புக்கள் விற்பனை படுவேகமாக நடந்துதான் வருகிறது.

இந்தியா, துருக்கி, ஜப்பான், கிறீஸ் போன்ற நாடுகளில் மனித உடல் உறுப்பு விற்பனை இலாபகரமான தொழிலாகி விட்டது. பணம் இல்லையென்று மனம் உடைந்தவர்கள் தம்மிடம் உள்ள இரு கண்ணில் ஒரு கண்ணை விற்றுவிட முன்வருகிறார்கள்.

உடனே அதனை பணம் படைத்தவர்கள் கப்பென்று அமுக்கி உறுப்பு மாற்றுச் சிகிச்சை செய்துகொள்கிறார்கள்.

விற்பனை செய்வோரையும்-தரகரையும் உறுப்புக்கள் வாங்குவோர் நன்கு கவனிக்கின்றனர். உல்லாச விடுதிகளில் தங்கியிருக்க வைத்து ஒருமாதமோ இரு மாதமோ கரன்சிகளால் குளிப்பாட்டுகிறார்கள்.

அநேகமாக பணம் படைத்த அமெரிக்கர்கள்தான் மாற்று உறுப்பு சிகிச்சைக்காக பின்தங்கிய நாட்டவரை விலைபேசி பிடிக்கிறார்கள்.

கண்பழுதானாலோ, சிறுநீரகம் சேதமானாலோ பணம்படைத்த அமெரிக்கர் பயப்படத் தேவையில்லை.

விமானம் ஏறி இந்தியா போன்ற நாடுகளுக்குள் புகுந்து விட்டால்போதும் சுண்டிப்பார்த்து, பிடித்துப் பார்த்து நல்ல உறுப்புகளாக கொள்வனவு செய்து கொள்ளலாம்.

லேட்டஸ்ட் நிலவரப்படி இந்தியாவில் கல்கத்தாவில் உள்ள நியூ ஈராட் ரான்ஸ்பிளான்ட் மருத்துவமனை உடல் உறுப்பு விற்பனைத் துறையில் வெளுத்து வாங்கிவருகிறது.

இந்த மருத்துவமனைக்கு உதவும் தரகர்கள் எப்போதும் ஒரு பட்டியலை தம் சட்டைப்பையில் தயாராகவே வைத்திருக்கிறார்கள்.


ஆரோக்கியமான 18 வயதுக்கு மேற்பட்ட கஷ்டப்படும் நபர்களை ஏற்கனவே பிடித்து ஆசைகாட்டி தேவையான உறுப்புக்கு அட்வான்ஸ் கொடுத்து பதிவு செய்து வைத்திருப்பார்கள். தேவைப்படும்போது ஆளைப்பிடித்துவந்து உறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

கண்டுகொள்ள வேண்டியவர்கள் கண்ணை மூடிக்கொள்ள இலாபத்தில் ஒரு பகுதியை அவர்களுக்கு வெட்டிவிடுவார்கள் தரகர்கள்.

'இருப்பவன் கொடுக்கிறான். பணம் படைத்தவன் பெறுகிறான் எனக்கென்ன? உனக்கென்ன' என்று சட்டம் கண்மூட, உறுப்பு வியாபாரம் களைகட்டுகிறது.

## பருத்த வயிறும்-குறட்டையும்

## அண்ணன்-தம்பிகள்!




தூங்கும்போது குறட்டைவிடும் ஆண்கள் அவர்களின் மனைவிக்கு தூக்கமின்மையை ஏற்படுத்துவதுடன் மட்டுமல்ல, தங்களுக்குத் தாங்களே தீமையினைத் தேடிக்கொள்கிறார்கள். இலண்டன் லிஸ்டர் மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் கிறிஸ்டீன் வெசிலினோவா—ஜென்கின்ஸ் என்பவர் நடத்திய ஆய்வின் முடிவுகள் இக்கருத்தினை வலியுறுத்துகின்றன.

குறட்டை விடுகின்றவர்களில் பெரும்பாலான ஆண்களின் உடம்பு அளவுக்கு அதிகமாகப் பருப்பதுடன் வயிறும் ஏனைய உறுப்புகளும் ஊதிப் பருத்து அவலட்சணமாகிவிடுகின்றன என்று கூறுகிறார் டாக்டர் வெசிலினோவா.

இத்தாலியில்-மிலான் பல்கலைக்கழக மருத்துவபீடத்தைச் சேர்ந்த டாக்டர் ஆர்மண்டோ கிறெஸ்பெசி என்பவரும், டாக்டர் வெசிலினோவாவின் கருத்தினை ஒப்புக்கொள்வதுடன் மற்றுமொரு கருத்தினையும் வெளியிடுகிறார்.

"சிலீப் அப்னியா" என்ற வகையான குறட்டை ஒருவரின் சுவாச முறைகளில் கோளாறுகளை ஏற்படுத்துகிறது. இவருடைய சுவாசம் சீராக அமைவதில்லை. அடிக்கடி மூச்சுத் திணறல் ஏற்படுவதை சுலபமாக அவதானிக்கலாம். சிலருடைய சுவாசம் வழக்கமான இடைவெளியைவிட அதிக நேரம் நீடித்து விடுவதுமுண்டு. இத்தகையோரின் நிலை மோசமடைவதற்கு முன்னர் தகுந்த சிகிச்சை முறை அவசியம்" என்று கூறுகிறார்.

டாக்டர் வெசிலினோவா—ஜென்கின்ஸ் தனது ஆராய்ச்சியின் முடிவுகளை இலண்டன் மருத்துவ போதனை நிலையங்களின் மாநாட்டில் அண்மையில் வெளியிட்டார். தன்னுடைய ஆய்வுகளில் பங்கெடுத்தோரின் ஹோர்மோன் அளவுகளைக் கணக்கிடுவதன் மூலம் தனது முடிவுகளுக்கான தரவுகளைப் பெற்றதாக அவர் கூறினார்.

## அழகியின் இரகசியம்

## ஒரு சுவாரசிய சமாச்சாரம்



படத்தில் இருக்கும் அழகியின் பெயர் ரூபால் ஆண்டர் சார்லஸ். பெயர் சற்றுப் பெரிதாக இருப்பதால் இவரது இரசிகர்கள் ரூபால் என்று சுருக்கமாக மற்றும் செல்லமாக அழைக்கிறார்கள்.

வயது 27. அமெரிக்கா இவரின் சொந்தநாடு. 'செக்ஸ் உலக ராணி' என்பதுதான் இவரது பட்டப்பேரு.

பொன்னிற முடி. உயரமான குதிக்கால் உள்ள செருப்பு. இவர் ஆடிக்கொண்டே பாட இளைய இரசிகர்களின் இதயங்கள் நழுவும்.

பொப் மியூசிக் உலகில் கொடி கட்டிப்பறக்கும் இவர் ஒரு புகைப்பட ஆல்பம் வெளியிட்டார். அது விற்பனையில் மகா சாதனை படைத்துவிட்டது.

அடுத்து விளம்பர படங்களுக்கு கவர்ச்சியால் அசத்தி போஸ் கொடுத்து உலகின் சிறந்த 'மொடல்' என்ற சாதனையும் புரிந்துவிட்டார்.

இவர் அணியும் ஆடைகளோ தனிரகம். அவை தருவதோ கவர்ச்சி ரசம்.

எல்லாம் சரி இவரைப்பற்றி ஒரு முக்கிய இரகசியம் இருக்கிறது. காதைக்கொடுங்கள் சொல்கிறோம்.

இவர் ஒரு ஆண்! பெண்ணேயல்ல. அதனால்தான் இவரை அமெரிக்காவில் 'டிராக்குயின்' என்று கூறுகிறார்கள்.

'டிராக்' என்பது ஆண் பெண் போலவும், பெண் ஆண் போலவும் உடையணிதல், ஒப்பனை செய்தல் என்பதை குறிக்கும்.

ரூபாலின் தலையில் இருப்பது பிளாட்டின ஒட்டு முடி. அவரது ஏனைய சமாச்சாரங்களும் போலிதான்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



"அச்சம் ஒரு கன்னியாம்-ஆசை
அழகு மங்கையாம்
வெட்கமும் ஓர் கன்னியாம்-உன்னிடம்
முக்கனி காணுகின்றேன்!"
-கவியரசு கண்ணதாசன்-

# கொலை விழும் நேரம்

## 25

## எழுதுவது - ரசிகன்

இப்போது நினைத்தாலும் நிர்மலாவுக்கு அச்சமாக இருந்தது.

ஹரிகரனை குறிவைத்து பிரசாத் கைத்துப்பாக்கியில் விசையைத் தட்டிய அந்த நொடி,

அய்யோ அப்பாவின் உயிர் போகப் போகிறதே என்று இதயம் துடிப்பதை நிறுத்தியதுபோல் அதிர்ந்துபோன அந்த நினைவு கல்லிலே செதுக்கிய சிற்பம் மாதிரி இப்போதும் மனதில் இருக்கிறது.

பிரசாத் நிறைபோதையில் நிலை தடுமாறியதால்-

அவரது குறி தவறியது. துப்பாக்கி வெடித்ததால் ஏற்பட்ட சத்தத்தால் ஹரிகரன் பயந்துபோய் சோபாவில் விழுந்தார்.

தனது உடலில் குண்டுபாயவில்லை, தப்பிவிட்டேன் என்று அவர் உணர சில நிமிடங்கள் தேவையாக இருந்தன.

வெடிச்சத்தமும்- நிர்மலாவின் அலறலும் வெளியே நின்ற வேலையாட்களுக்கு கேட்டுவிட ஓடிவந்து பிரசாத்தை அமுக்கிப் பிடித்துக் கொண்டார்கள்.

ஹரிகரன் இப்போது எழுந்துகொண்டு பிரசாத்தை பார்க்க, பிரசாத் கண்களை மூடித்திறந்து பார்த்து ஒரு தெளிவுக்கு வர முயன்றுகொண்டிருந்தார்.

பிரசாத்தின் இருபுறமும் அவரை அசையவிடாது பிடித்துக்கொண்டிருந்த வேலையாட்களில் ஒருவன் கைத்துப்பாக்கியைப் பறித்துவைத்துக் கொண்டிருந்தான்.

நிர்மலாவுக்கு பிரசாத்மீது கோபமாக இருந்தது. அம்மா வெளியே சென்றிருந்தாள். இருந்திருந்தால் அம்மாவும் பதறியிருப்பாள்.

'வரட்டும். அம்மா வரட்டும். இந்த சித்தப்பாவின் உறவே வேண்டாம் என்று அம்மாவிடம் சொல்லவைக்க வேண்டும்.'

நிர்மலா மனதில் குறிவைத்துக் கொண்டாள். ஹரிகரன் பதட்டம் விலகி, நிதானமாக யோசித்து, பணியாளர்களிடம்,

"அவரை காரில் கொண்டுபோய் இருத்துங்கள்."

பிரசாத் எதிர்ப்பே காட்டாமல் அவர்கள் கூடச் செல்ல,

பிரசாத்தின் கைத்துப்பாக்கியை வேலையாளிடம் இருந்து வாங்கிவைத்துக் கொண்டார் ஹரிகரன்.

பிரசாத் காரை செலுத்திச் செல்லும் நிலையில் இல்லை.

ஹரிகரன் தன் சாரதியை அழைத்து, பிரசாத்தை காரோடு வீட்டில் கொண்டு போய்விட்டு, திரும்பி பஸ்பிடித்து வரச் சொல்லிவிட்டு, இன்னமும் பயம்மாறாமல் நின்றுகொண்டிருந்த நிர்மலாவைப் பார்த்து,

"பயப்படாதே டியர். அவர் குடித்தால் அப்படித்தான். இன்று வழக்கத்தைவிட கொஞ்சம் ஓவர். தட்ஸ் ஓ.கே. அம்மா எங்கே?"

நிர்மலா தந்தையை ஆச்சரியமாய்ப் பார்த்தாள். உயிர்போகும் நிலையில் இருந்து விட்டு, அதற்கு காரணமான சம்பவத்தை சட்டையில் படிந்த தூசைத் தட்டுவதுபோல அலட்சியமாய் பேச இவரால் எப்படி முடிகிறது?

ஹரிகரன் அவள் அருகே வந்து ஆதரவாய் முதுகை வருடிக்கொடுத்தார்.

"அதிகமாகப் பயந்துவிட்டாயா நிர்மலா? வாழ்க்கை என்றால் ஆபத்துகளும் சகஜம். ஒரு விளையாட்டு மாதிரி இதையெல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டும். அம்மா எங்கே என்று கேட்டேனே?"

"எங்கே என்று சொல்லவில்லை. வர மாலையாகும். நீ சாப்பிட்டுக்கொள் என்று சொல்லிவிட்டுப் போனார்."

ஹரிகரன் யோசிப்பது போலத் தெரிந்தது.

"ஓ.கே. நிர்மலா. நீ போய் சாப்பிட்டுவிட்டு 'ரெஸ்ட்' எடு.

நிர்மலா செல்ல ஹரிகரன் ஃபோன் அருகே போய், டயல் செய்து, ஹலோ என்று விட்டு சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டார்.

உள்ளே போன நிர்மலா தான் வெளியே போகவேண்டுமே. அதை சொல்ல மறந்துவிட்டேனே என்று நினைத்து அறைக்கு வெளியேவர,

ஹரிகரன் நிர்மலா உள்ள போய்விட்ட நினைப்பில்,

"அவள் போக்கு புதிராக இருக்கிறது. கவனிக்க வேண்டும். நான் தனக்கு துரோகம் செய்வதாக நினைத்து அவளும்...."

மறுமுனை ஏதோ குறுக்கிட்டுச் சொல்லியிருக்க வேண்டும். ஹரிகரன் குரலைச் சற்று உயத்தி,

"நோ-சித்-நோ. நீதான் முதல். நீ உயிர். ஆனால் இது என் கௌரவப் பிரச்சனை. வரமாட்டேன் சித்."

நிர்மலா பூனைபோல் தன் அறைநோக்கி பின்வாங்கிச் சென்றாள். காதை மட்டும் தீட்டிக்கொண்டு, அறைக்கதவின் பின்னால் மறைந்து கொண்டாள்.

"சிரிக்காதே சித். இந்தச் சிரிப்புத்தான் என்னைத் தினமும் புரட்டிப்போடுகிறது."

ஒரு வாலிபன் போல் குழைந்து பேசினார்.

நிர்மலாவுக்கு புரிந்துபோனது. அப்பா அம்மாவுக்குத் துரோகம் செய்கிறார். யாரது 'சித்? விசாரிக்க வேண்டும். அப்பாவின் அலுவலகத்தில் விசாரிக்க வேண்டும்.'

நிர்மலா வெறுப்பாய் போய் கட்டிலில் விழுந்தாள். அப்படியே தூங்கிப் போனாள்.

நிர்மலா கண்விழித்தபோது வெளியே சூரியன் காணமல் போயிருந்தது ஜன்னல் வழியே தெரிந்தது.

எழுந்து சோம்பல் முறித்துக் கொண்டு அறையைவிட்டு வெளியே வந்தவள் திகைத்துப் போனாள்.

அங்கே கீழே ஜீன்ஸ் மட்டும் இருக்க, மேலே வெற்றுடம்போடு ஒரு ஆண். நிச்சயமாக அது அப்பா ஹரிகரன் அல்ல.

உற்றுப் பார்த்தாள்.

அது சித்தப்பா பிரசாத். எதிரே அவர் பிடியில் அம்மா.

அம்மாவை அலாக்காகத் தன் கரங்களில் ஏந்தியபடி,

அம்மா ஏதோ சொல்லிச் சிரிக்க, பதிலுக்கு சிரித்தபடி நடந்து பிரசாத் பெட்ரூம் கதவை காலால் எட்டி உதைத்து, அது திறந்துகொள்ள,

நிர்மலாவுக்குள் பூகம்பம் உற்பத்தியானது.

▫▫

சூர்யாவைக் காணவில்லை. தினசரிகளின் நெற்றியில் அந்தச் செய்தியிருந்தது.

பெண்கள் அமைப்புகள் இரண்டு பொலிஸ் எதற்கு இருக்கிறது? கடலை சாப்பிடவா? கடமையைச் செய்யவா? என்று தாறுமாறாகக் கிழித்திருந்தன.

இன்னொரு பெண்கள் அமைப்பு ஆண் ஆதிக்கம் வாலாட்டிவிட்டது. ஆண் ஆதிக்கம் ஒழிக. சூர்யா வாழ்க என்று போஸ்டர் அடிக்காத குறையாக ஒரு அறிக்கை விட்டிருந்தது.

சூர்யா வீடு பொலிசால் சுத்தமாக அலசப்பட்டது.

ஒரு அறையில் மாத்திரம் நைலான் கயிறு, ஒரு சாப்பாட்டு கோப்பை, புகைத்து விட்டு நசிக்கப்பட்ட இரண்டு சிகரெட் துண்டுகள் கிடந்து பொலிசை யோசிக்க வைத்தன. அவை பத்திரப்படுத்தப்பட்டன.

சூர்யா தனியாகவா இருந்தாள்? பொலிஸ் துருவியது.

ஒரு வருடத்தின் முன் ஒரு பெண் கூட இருந்தாள். தன் தங்கை என்று சூர்யா சொன்னாள்.

அயல் வீடுகள் அறிந்ததைச் சொல்லி விட்டு பயத்தோடு பார்த்தன. "இப்போது அந்தப் பெண் எங்கே?"

பொலிஸ் விடாமல் விசாரித்தது.

"ஊருக்குப் போயிருப்பதாக சூர்யா சொன்னதாக ஞாபகம்."

"எந்த ஊருக்கு?"

அயல் திணறியது.

"அது தெரியாது. சொல்லவில்லை."

"கேட்கவில்லையா?"

"இல்லை."

"எத்தனை வயதிருக்கும்?"

"யாருக்கு?"

கேள்வி கேட்டவன் இளைஞன். பொலிஸ் முறைத்தது. யாரிடம் கேட்கிறாய் கேள்வி என்பது மாதிரியான முறைப்பு. அவன் பயந்து தன் கேள்விக்குக் காரணம் சொன்னான்.

"சூரியாவுக்கா, அல்லது அவர் தங்கைக்கா என்று...."

உதவத்தான் ஆர்வப்பட்டான் என்று பொலிஸ் சிநேகிதமாய் அவனைப் பார்த்து,

"தங்கைக்குத்தான். உன் பெயர் என்ன தம்பி?"

"18 வயதிருக்கலாம் அவளுக்கு! என் பெயர் ஆனந்த்."

"ஐ.சீ. உள்ளே வா ஆனந்த்."

அழைத்துப்போய் சூர்யா வீட்டின் முன்ஹோல் சுவரில் மாட்டப்பட்டிருந்த படங்கள் காட்டி, சூர்யாவின் தங்கையை அடையாளம் சொல், காட்டு என்றது பொலிஸ்.

படம் பார்த்து, சூர்யாவின் அணைப்பில் பற்பசை விளம்பரத்திற்கு சிரிப்பது போல் பளிச்சென்று சிரித்துக்கொண்டிருந்த சூர்யாவின் தங்கையை அவன் அடையாளம் காட்டினான்.

அவன் சுட்டுவிரல் நீட்டிக்காட்டிய படம் பார்த்து இஸ்பெக்டர் சிறீதரன் நெற்றியடிபட்டதுபோல் அதிர்ந்து போனார்.

▫▫

காயத்திரி வினோவை சந்தேகமாய் பார்த்தாள்.

"என்ன சொல்கிறாய் வினோ?

உன் சகோதரியா? நீ இதுவரை உனக்கொரு தங்கை இருப்பதாக எனக்கு...."

அவளை இடைமறித்து வினோ,

"நீ கேட்டாயா? இல்லையே. நீ கேட்கவும் இல்லை. நான் சொல்லவும் இல்லை. சந்தேகமே வேண்டாம். என் அம்மா பத்து மாதம் பத்திரமாக சுமந்து பெற்றவள்தான் அவள். என்னைவிட இரண்டுவயது சின்னவள்."

காயத்திரி இப்போது நம்பினாள்.

"அப்படியானால் முகத்தில்...... அந்த..... அந்த.... காயம்?"

"இடையே ஏற்பட்ட கொடூரம். அவளுக்கு செய்யப்பட்ட துரோகம்!"

காயத்திரி அவன் குரலில் சூடேறியதை உணர்ந்தாள். அவன் கண்கள் சிவந்து போயிருப்பதைக் கண்டாள். அவன் உடல் நடுங்குவதைப் போல் தெரிந்தது. அவன் தன்னைக் கட்டுப்படுத்த முயல்கிறான் என்று உணர்ந்தாள்.

▫▫

கசட் வழியே அவன் சொல்லும் தகவல் அறிய இருக்கையின் நுனிக்கு வந்த டி.ஐ.ஜி. டென்சிலை ஃபோன் அலறி அழைத்தது.

பிளேயரை நிறுத்திவிட்டு சென்று ரிசீவர் தூக்கி, ஹலோ சொல்லும் முன்னரே மறுமுனையில் அதே பெண்குரல் சிரித்தது.

"நீயா?"

என்றார் சிரிப்பை வைத்தே அடையாளம் கண்டு கொண்டு.

"யா! நானேதான். ஏமாற்றிவிட்டேன் என்று கோபமா? சொறி டி.ஐ.ஜி. சூழ்நிலை அப்படி!"

"என்ன சூழ்நிலை?"

"நான் தொடரப்படுகிறேன். துரத்தப் படுகிறேன்."

"யாரால்?"

"மரணத்தால்!"

இவளை யார் துரத்துகிறார்கள்? அவள் யார் என்றே தெரியாமல் இவளை ஏன் துரத்துகிறார்கள்? என்று எப்படி அறிவது? டென்சில் யோசிக்க, அவள் மறுமுனையில் இருந்து,

"நம்பவில்லையா டி.ஐ.ஜி.?"

"எப்படி நம்புவது?"

மறுமுனை மௌனித்தது? பதில்சொல்ல யோசிக்கிறாளோ? புத்தியான பதில் சொல்லி ஏமாற்ற அவகாசம் சேகரிக்கிறாளோ?

மறுமுனை வாய் திறந்தது.

"என்னை-நான் சொல்வதை நீங்கள் நம்பவேண்டுமானால் நான் யார் என்று தெரியவேண்டும். இல்லையா டி.ஐ.ஜி?"

டி.ஐ.ஜி. டென்சில் அவசரமாய்-ஆர்வமாய்,

"யெஸ். முதலில் உன் முகமூடியை அகற்று. போர்வையைத் தூக்கிப் போடு. நீ யார் என்று காட்டு. உன் பெயர் என்ன? உன் நோக்கம் என்ன? எங்கே இருக்கிறாய்? ஏன் ஒளிக்கிறாய்? சொல்லு. பதில் சொல்லு. அதன்பின் உன் பேச்சை நம்பலாமா விடலாமா? என்று நான் முடிவு செய்கிறேன்."

"நம்பினால் என்ன செய்வீர்கள்?"

"என்ன செய்யவேண்டும் என்று நீ எதிர்பார்க்கிறாயோ அதையெல்லாம்."

அவள் சிரித்தாள்.

"யோசிக்க வேண்டும்."

"எதைப்பற்றி? உண்மையைப் பேசலாமா என்பதைப் பற்றியா?"

"யா! உண்மைகள் சில சமயத்தில் ஆபத்தாகவும் முடிவதுண்டு டி.ஐ.ஜி. அரிச்சந்திரன் உண்மையைப் பேசினான். சுடுகாட்டுக்குத்தானே போகவேண்டியிருந்தது. காந்தித் தாத்தாவுக்கு என்ன நடந்தது? கோட்சேயின் குண்டுதானே கிடைத்தது. ஏன் அமெரிக்காவில் ஜோன் கென்னடிக்கு...."

டென்சில் பொறுமையிழந்து,

"போதும் நிறுத்து."

என்று சினந்தார்.

மனதுக்குள் அவளை அறைந்தார்.

"ரைட். நாளை மறுபடி பேசுகிறேன். யோசித்து முடிவு செய்துவிட்டுப் பேசுகிறேன்."

"ஆபத்து என்கிறாய். தாமதித்தால் உனக்குத்தான் கெடுதி."

அவள் மீண்டும் சிரித்து,

"தாங் யூ டி.ஐ.ஜி.!"

"எதற்கு?"

"என்மேல் அக்கறை காட்டுதலுக்கு. என் பேச்சை நம்பாமல் நம்புவதற்கு."

"நீ ஒரு புதிர்!"

"யா! அதுதான் உதிர்-உதிர் என்று என் உயிரைக் குறிவைத்து மரணம் துரத்துகிறது. ஓ.கே. பாய்."

தொடர்பு அறுந்தது. எங்கிருந்து பேசுகிறாள்? அடுத்தமுறை போன் எடுக்கும் போது அலசலாம். நாளை எடுப்பதாகச் சொன்னாள். நேரம் சொல்லவில்லை. புத்திசாலி! பார்க்கலாம்.

நினைத்து-எழுந்து- பிளேயர் அருகே சென்று பட்டன் அழுத்தினார்.

கசட் ஓடத்தொடங்கியது.

அவன் குரல் உயிர்த்தது.

"நான் சொல்லும் செய்திகளை நம்புவதும், நம்பாமலிருப்பதும் உங்கள் புத்திசாலித்தனத்தைப் பொறுத்தது.

"டி.ஐ.ஜி. உங்களுக்குச் சித்ராவைத் தெரியுமா?

"பூபால் அன்ட் பிரதர்ஸில் வேலை செய்த ஒருநாள் தன் வீட்டில் பிணமாகக் கிடந்த அழகான இளம்பெண் சிதராவை சாகமுன்னரே உங்களுக்குத் தெரியும். ஹரிகரன் கொலையை துருவிப்பார்க்க போன போது அவளையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

"நீங்கள் மட்டுமல்ல. எந்தவொரு ஆண் மகனும் அவளை ஒரு தரம் பார்த்தால் மறுதரம் பார்க்காமல் விடமாட்டார்கள். மறக்கவும் மாட்டார்கள்.

"நானும் ஒரு ஆண் மகன். அதுவும் இளமையானவன். இளமையை விரயமாக்காமல் அனுபவித்து வாழ ஆர்வமுள்ளவன்.

"சித்ராவை ஒருநாள் தற்செயலாய்ப் பார்க்க நேர்ந்தது. பருவ எழிலை விழிகளால் பருக நேர்ந்தது.

"பூ தேடி மிஸ்டர் டென்சில், தேன் உண்ட வண்டு திரும்பிவருமல்லவா? நானும் அப்படித்தான்.

"யார் அவள்? விசாரிக்கத் தொடங்கினேன். விடை கிடைத்தது.

"அந்தச் சொர்க்கம் சுழலும் இடம் பூபால் அன்ட் பிரதர்ஸ்.

"எப்படி உள்ளே செல்வது? என்ன காரணம் சொல்லி நுழைவது? ஐந்து பாக்கெட் சிகரெட் காலியாகியதுதான் கண்டபலன்.

"இரவில் அவள் அலுவலகம் முடிந்து வெளியே வரும்போது சந்திக்கலாம் என்று யோசித்தேன்.

"காத்திருக்கத் தொடங்கினேன். அவள் வரவில்லை. ஐந்துமணி ஆறுமணி, ஏழுமணி.

"இன்னுமுமா வேலை முடியவில்லை? இப்போதும் மூன்று பக்கெட் சிகரெட் எரிந்து போயிருந்தது. நாலாவது சிகரெட் பாக்கெட் வாங்கப் போனதும் கடைக்காரன் விநோதமாகப் பார்த்தான். வெட்கமாய் இருந்தது. அக்கம் பக்கம் பார்த்து குடும்பக் கட்டுப்பாட்டுச் சமாச்சாரம் வாங்குவது மாதிரி வெட்கப்பட்டேன்.

"ஒரு சிகரெட் எடுத்து தலையில் கொள்ளிவைத்தபடி வாச்மேனின் அருகில் போனேன்.

"அவன் பல்லைக் காட்டினான். ஒரு நூறுரூபாய் தாளை எடுத்து கையில் வைத்து விட்டு, சித்ரா பற்றி விசாரிக்க நினைத்தபோதுதான் உள்ளேயிருந்து அந்த சத்தம் வந்தது.

"அது என் கனவில் வந்து என் தூக்கத்தைக் குத்திக் கிழிக்கும் சித்ராவின் குரல்.

"வாச்மேனை தள்ளிவிட்டு உள்ளே ஓடினேன்."

கசட் நின்றது. தன்னியக்க பட்டன் டக் என்று உயர்ந்து கசட்டின் ஒருபுறம் முடிந்துவிட்டது சொல்ல, பட்டன் தட்டி கசட் எடுத்து மறுபக்கம் திருப்பிப் போட்டார் டி.ஐ.ஜி. டென்சில்.

கசட் மீண்டும் ஓடத் தொடங்கியது.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: அ.அருள்
வயது: 18
முகவரி: 43/A1, வட்ட வீதி, களுதாவளை, மாத்தளை.
பொழுதுபோக்கு: வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை.



பெயர்: மொஹமட் அமீர்
முகவரி: 86, குருகொடை, அக்குறணை.
பொழுதுபோக்கு: பாடல்கள் கேட்டல், திரைப்படம் பார்த்தல், கவிதைகள் படித்தல்.



பெயர்: யே. கிறிஸ்டினா
வயது: 22
முகவரி: 394/79, திருமலை வீதி, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, கதைப்புத்தகம்.



பெயர்: எம்.எஸ். ஹில்மியா
வயது: 19
முகவரி: 374/7, ஹிஜ்ரா வீதி, முள்ளிப்பொத்தானை.
பொழுதுபோக்கு: பூந்தோட்டம் அமைத்தல்.



பெயர்: என். ஹரிதாஸ்
வயது: 22
முகவரி: P.O.BOX-25809 SAFAT- 25809, KUWAIT.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, சினிமா.



பெயர்: எம். மஹுன் அஷ்ரப்
வயது: 28
முகவரி: AL-ZAMIL FOOD IND. P.O.BOX-240, AL JUBAIL-31951 SAUDI ARABIA.
பொ.போக்கு: கிரிக்கெட் விளையாடுதல், பேனா நட்பு, தொலைக்காட்சி, நாவல்கள்.

பெயர்: பி.தரன்
வயது: 22
முகவரி: C/O MUHLEHALDEN, BUTCHER STR-11 8155-NASSENWIL SWITZERLAND.
பொ.போக்கு: புத்தகம் வாசித்தல், இயற்கைக் காட்சிகளை இரசித்தல்.

பெயர்: ஜே. அப்துல் ஹமீத்
வயது: 23
முகவரி: இல.62, கலதெனிய, மடிகே, உடதலவின்ன.
பொ.போக்கு: வழமையான பொழுதுபோக்குகளுடன் பூந்தோட்டம் வளர்த்தல்.

பெயர்: சி.சிவகுமார்
வயது: 22
முகவரி: 155C/5, கெய்ஸர் வீதி, கொழும்பு-11.
பொ.போ: பத்திரிகை, தொலைக்காட்சி, கிரிக்கெட் விளையாடுதல்.

பெயர்: எம்.ஐ. றிஸ்வான்
வயது: 18
முகவரி: 278, ஜின்னா வீதி, அக்கரைப்பற்று-4.
பொ.போ: பத்திரிகை, வானொலி.

பெயர்: எஸ். சண்முகநாதன்
வயது: 20
முகவரி: தலவாக்கல்லை மேற்பிரிவு, தலவாக்கொல்லை.
பொ.போ: வானொலி. கதைப்புத்தகங்கள், நண்பர்களுடன் அரட்டை.

பெயர்: எம். மௌஜுத்
வயது: 20
முகவரி: கெக்கிராவ வீதி, கனேவல்பொல.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், பத்திரிகை.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# விடிவிளக்கு

ஹரீரா அனஸ்

சிறுகதை

**"தூய்மையன்பு–மறக்கமுடியாத–பிரிக்கமுடியாத பாசமென்றெல்லாம் நீயும்–நானும் பழகிய நாட்கள்..."**

அவளைப்பற்றிச் சொல்வதற்கு நிறைய இருக்கிறது. அவள் ஒரு தேவதை. அவள் ஒரு தியாகி. அவள் ஒரு புனிதமானவள். அவள் ஒரு செல்வி. வாழ்க்கையிலும் பெயரிலுமாக... திருமதி ஆனாலும்...

"செல்வி...! அடியேய்...! உன்னை எத்தினை தரம்தான் கூப்பிடுறது. உனக்கென்ன காது செவிடே..?" அதிகாலை நேரம் ஆக்ரோஷமாய்க் கத்தினான் நேசன். தினமும் அவன் அவளை ஆராதனை செய்வது இந்த வார்த்தைகளைக் கொண்டுதான். கைக்குழந்தை ஷர்மிக்கு பால் கொடுத்துக்கொண்டிருந்தவள் கணவனண்டையில் ஓடிவந்தாள். "செல்வி உனக்கு எத்தினைதரம் சொல்லியிருக்கிறன் இந்த சப்பாத்தையும் சொக்சையும் இந்த இடத்திலை வைக்கச் சொல்லி."

'வீடு கூட்டும்போது கொஞ்சம் இடம் மாறி இருந்ததற்கு இப்படியா கத்த வேண்டும்? அதுவும் பொழுது புலரும் வேளை. பூபாளம் கேட்கும் நேரம். இப்படி அபஸ்வரமாய் அபசகுனமாய்...' மறுபேச்சுப் பேசுவதற்கு அவளுக்கும் தெரியும். அவள் அவனைப் போலல்லாமல் பல்கலைக்கழகம் வரை சென்று படித்தவள். அவசர முடிவுக்காரியும், ஆத்திரப்படக் கூடியவளும்தான். ஆனால் கணவன் விடயத்தில் விட்டுக்கொடுத்தே பழக்கப் பட்டுப் போனவள். காரணமும் இருக்கிறது.

□□□

"நெருப்பென்று சொல்லிச் சொல்லி நாக்கே வெந்ததடா வருகின்றதென்று சொல்லி புலியே வந்ததடா" வானொலியில் கண்ணதாசன் தத்துவமுத்துக்களைச் சொரிந்து கொண்டிருந்தார். கள்ளம் கபடமற்ற அந்தக் காலம் மின்னலாய் தோன்றி செல்வியின் உள்ளத்தில் விழுந்தது. நிம்மதியே இழந்து உறவுகள் எல்லாமே கசந்துபோன அந்த இரண்டாம் நம்பர் காரிக்கு துணையாய் அவன். அவன் ஒரு சகோதரனாகி....

காலங்கள் கடிதங்களாய் நிறைந்தன. கடிதங்கள் இதயங்களை அந்தப்பக்கமும் இந்தப்பக்கமும் காவிச் சென்றன. புனிதமாய் பேரன்பு இழையோடியது. ஒருநாள் அவன் அவளை விட்டுவிட்டுச் சென்றுவிட்டான். அவள் அழுதாள். நினைவுகளைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு வேதனைப்பட்டாள். மறக்கப்பார்த்தாள். பின்னர் அவன் கடிதங்களை– அவன் எழுதியவைகளை எல்லாம் எரித்துப்பார்த்தாள். உள்ள இரத்தச் சுற்றுலாவில் கைகோர்த்துக் கொண்ட தூய்மைப் பாசம் விலகமுடியாமல் அவிந்தது. அவள் எதேச்சையாக விட்ட அந்தக் கடிதம்தான் சில விளைவுகளை அள்ளிக் கொண்டுவந்திருக்கிறது.

**உயிரினும் இனிய என் தங்கைக்கு,**

வந்தனம்.

தூய்மையன்பு, மறக்கமுடியாத பிரிக்கவே முடியாத பாசமென்றெல்லாம் நீயும் நானும் பழகியிருக்கின்ற அந்த நினைவலைகள்-எமது நினைவுகள் இருக்கும் வரை நீடித்துக்கொண்டே இருக்கும்.

"அணை உடைஞ்சிரிச்சு..." என்ன செய்வது? சில நிர்ப்பந்தங்களினால் நீடிக்க முடியாத அன்பிற்காய் வருத்தம் கொள்கிறேன். உனக்காகவே, உனது நல்வாழ்விற்காகவே, உனது எதிர்காலத்திற்காகவே நான் விலகியிருப்பதாக முடிவெடுத்திருக்கிறேன். மன்னித்துவிடு. நீ அழுவாய். மானசீகமாக இந்த அண்ணாவின் அன்பு எனும் கைகள் உன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருக்கும். இது சத்தியம்.

என்றென்றும்
உன்னுயிர்,
அண்ணா.

□□□

குப்பை மேட்டிலிருந்து வேதாளம் கிளம்பி வந்திருப்பதாயும் பட்ட மரம் முறிந்தபோது அதன் பழைய பொந்திலிருந்து புடையன் பாம்பு வெளிப்பட்டதாயும்... நேசனின் கையில் இந்தக்கடிதம். கேள்விகளுக்கு விடை சொல்வதையும், ஏச்சுக்களை பொருட்படுத்துதலையும், திட்டுதலுக்கு நேர்படுத்தலையும் தவிர்த்துக்கொண்டாள் செல்வி. ஆனால் நேசன் எடுத்ததற்கெல்லாம் ஆக்ரோஷப்படுவதும் அடாவடி காட்டுவதும்தான். செல்விக்கு நேசனின் குத்துதல் வேளையிலெல்லாம் ஷர்மிதான் துணை. தன் ஆராவமுதை நெஞ்சிலணைத்து அவளுக்காக அழுவாள். "பாரம்மா அப்பா எடுத்ததற்கெல்லாம் சண்டைபிடிக்கிறார்" என்று அந்த மழலைக்குச் சொல்வாள். நினைவுகளின் பழமையில் தன்னுயிர் அண்ணன் அடிக்கடி தோன்றி வருவதை அவள் தவிர்க்கப்பார்க்கவுமில்லை. நினைவுகள் அழியவுமில்லை.



சிலவேளைகளில் 'அண்ணா உங்கள் மருமகள் ஷர்மியை ஒருமுறையாவது பார்க்க வரவில்லையே' என்று குழந்தையாய் ஏங்குவாள். காற்றோடு கலந்து போகும் ஏக்கங்களும் அதன் அலைகளுமாய் அவள்.

□□□

அன்று அவளின் விலாசத்தைச் சுமந்து கொண்டு ஒரு கடிதம். எத்தனையோ நாட்களுக்குப் பிறகு இன்று, மனம் பதறியதும், பரபரத்ததுமாக.... ஒருகணம் இறைவனை நினைத்துக்கொண்டாள்.

மறுகணம் அண்ணாவை.....

கடிதத்தை பேனா கொடுத்து உடைத்தாள். உடைக்கும்போது ஒரு நினைவு வந்தது. "மக்கு உனக்கு அடிப்பேன் பார். இப்பிடியா 'கம்' போட்டு ஒட்டுறது" அவன் எழுதிய வார்த்தைகள் ஆத்திரமாய் அன்று. இன்று உடைக்கவே முடியாமல் 'கம்' நிறைந்திருந்தது. கிழித்தெடுத்தாள். பலமான பாசம்போல கடிதமும்,

**அன்புள்ள தங்கச்சி...**

இந்த இரண்டு வருடங்கள்கூட இரண்டு மாதங்களாக... அல்லது இரண்டு நாட்களாகவே எனக்கு. ஏனெனில் உனக்கே தெரியும். உன் நினைவுகளின் பூப்புதலில் தானே நான் கண்ணயர்வதும் விழிப்பதுவும் என்று. எழுதுவதற்கு எதுவுமே இல்லை. பாசம்...பாசம்...என்று என்றோ எழுதியது போல தாளை நிரப்பிவிடலாம். ஆனால் ஒன்றம்மா. என் செல்வமே உன் அண்ணாவுக்கு...உன் அண்ணாவுக்கு...'இரத்தப் புற்று...' ஆமம்மா....'ப்ளெட் கான்சர்' இறப்பதற்காய் வைத்தியரின் காலக் கெடு கொஞ்சம் இருக்கிறது தாயே. அதற்கிடையில் இந்த ஜீவனின் விருப்பமெல்லாம்-என் அன்புத்தங்கச்சியை ஒருமுறை- ஒரேமுறையேனும் கண்ணால் கண்டு...உன்னோடு பேசி.... அப்படியே உன் அண்மித்தலிலேயே உயிர் பிரிந்து... நிறைவேற்றுவாயா....? தங்கச்சி... மறுக்காதே என்று கேட்டால் அதுகூட ஒரு வகை இரத்தல்தான்- இரப்பவனுக்கு என்ன செய்வாய் என் தங்கச்சி...?

இப்படிக்கு,
அண்ணா!

**"நிலவே வந்ததென்று நெய் விளக்கை அணைப்பேனா?**

**நெய் விளக்குப் போதுமென்று நிலவைத்தான் வெறுப்பேனா?**

**இருகரை நடுவினிலே நதிபோல் ஓடுகிறேன். விடுகதை நானாகி விடையைத் தான் தேடுகிறேன்"** தன் வாழ்க்கைக்காய் எழுதப்பட்டது போன்ற அந்த கவிவரிகளை நினைவிருத்தி மீட்டினாள் செல்வி.

பொழுது மங்கிப்போனது. அலுவலகத்தில் இருந்து வீட்டுக்கு வந்தவளுக்கு பேரதிர்ச்சி.

"செல்வி.....ஏனம்மா இண்டைக்கு லேட்? ஷர்மி உன்னைக் காணாம இண்டைக்கெண்டு ஒரே அழுது வடிக்கிறாளே! அம்மாவும் பெரியமாமா வீட்டுக்குப் போயிட்டா. வா...களைச்சுப் போனியே...? உனக்குத்தான் எத்தனை கரைச்சல். செல்வி... சில புரிந்துணர்வுகள் கட்டாயம் மனிசனுக்குத் தேவைதானம்மா... ஆனா... நான்தான் உன்னைப் போட்டு சித்திரவதை செய்திட்டேன். தயவு பண்ணி செல்வி என்னை மன்னிச்சிடம்மா..." என்ன இது ஓஃபிஸிலிருந்து வந்ததும் வராததுமா.. நேசன் இப்பிடி இன்ப அதிர்ச்சியில் விழுத்துகிறாரே....என்று எண்ணும்போதே மனம் புளகாங்கிதமாகிப் போனது. 'நேசன்' என்று தன் அன்புக் கணவனின் மார்பில் ஆதரவாக முகம் புதைத்தாள். அதில் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்திருந்தன. திடீரென ஷர்மியின் ஞாபகம் வர ஓடிச் சென்று விழிக்க விழிக்க படுத்திருந்தவளைத் தூக்கி ஏணைச் சீலையை விலக்கிவிட்டு ஷர்மியைக் கொஞ்சியபடியே கணவனுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்தாள். ஷர்மி தாயையும் தந்தையையும் மாறி மாறிப் பார்த்துச் சிரித்தாள்.

□□□

அன்பான கணவனாக நேசன்.

பாசமுள்ள அண்ணனாக அவர்.

நேசன் தன்னைப் புரிந்துவிட்டார் என்று எண்ணும்போதே செல்விக்கு பெரு மகிழ்ச்சியாக இருந்தது. மறுபுறம் அண்ணாவின் நோய் ஒரு பேரிடியாக வந்து விழுந்தது. அவள் ஆடிப்போனாள். என்னதானிருந்தாலும் அவர் என் அண்ணா. என்உயிரினும் மேலான அண்ணா. தெளிந்திருக்கும் நேசனிடம் விவரம் கூறாமலேயே அவள் தன் ஆருயிர் அண்ணாவைப் பார்க்கப் புறப்படுகிறாள்...

'செல்வியே! கொஞ்சம் நில். சில விட்டுக்கொடுப்புகளால் வாழ்க்கையில் வேதனைப்பட வேண்டியும் இருக்கிறதம்மா. கழிந்துபோன தடயங்களை ஸ்பரிஸித்து.... ஸ்பரிஸித்துத் தான் வாழ வேண்டுமென்பதில்லை. நீ இப்போதுதான் தவறு செய்கிறாய். மனம் திருந்தி உன்னோடு மகிழ்வாக இருக்கவென்று தன்னைச் சுதாகரித்துக்கொண்டிருக்கும் நேசன், நீ உன் அண்ணாவிடம் போவதை விரும்பாவிட்டால்.... மீண்டும் ஒரு விரிசலை ஏற்படுத்தவா பார்க்கிறாய்? ஒரு நோயாளி இறக்க வேண்டுமானால் இறக்கட்டுமேன். உனது வாழ்க்கை முழுவதுமே அமைதி இல்லாமல் நீ உழல வேண்டாமே! உறவுகள் வரும் போகும் என்பதற்காய் அதனையே வேதனையாக்கி அழ வேண்டுமா? உனக்கு இப்பொழுதான கடமை- கணவனும்- குழந்தையும். மற்றவை....?

மூன்றாமிடமும் அதற்கு அப்பாலும் தான்.

செல்வியே! நீ ஒரு விடிவெள்ளி. அல்லது விடிவிளக்கு.'

# காதல் உதயம்

-எம். உதயகுமார்-

பிரவீனுக்கு தன்னுடைய இந்த முடிவு நியாயமானதாகவே தோன்றியது. மனசுக்குள் எத்தனை தரம் கூட்டிக்கழித்துப் பார்த்தாலும் அவன் எடுத்த முடிவில் அவனுக்கு திருப்தியாகவே இருந்தது.

"ப்ரீதி.... ப்ரீதி..... இதை ஏற்றுக் கொள்வாளா...?

உனக்காக என்ன வேண்டுமானாலும் செய்ய நான் தயாராகவிருக்கிறேன் ப்ரீதி... வானவில்லை வளைத்து மாலையாய் உன் கழுத்தில் போடவேண்டுமா? அல்லது வானத்தில் தோன்றும் அந்த பிறையைத்தான் பிடித்து வந்து உன் தலையில் சூட்டவேண்டுமா....? இவை அனைத்தும் ஆரம்பத்தில் அவன் ப்ரீதியை விரும்பிய போது கூறிய வார்த்தைகள். பிரவீனுக்கு இப்போது அவற்றை நினைக்க மனசு கைகொட்டிச் சிரித்துக்காட்டியது.



இளமைத் துடிப்பில் காதல் வேகத்தில் கூறிய சினிமாத்தனமான வசனங்கள்தான் அவை என்று இப்போது நன்றாய் விளங்கியது.

"ப்ரீதி... நீ மட்டும் எனக்கு மனைவியாய்க் கிடைத்துவிட்டால்....

என் வாழ்க்கையில் அதைவிடப் பெரிய பாக்கியம் எனக்கெதுவுமில்லை" என்று கூறியதெல்லாம் கூட வெறும் பசப்பு வார்த்தைகள் தனா....?

அப்படியானால் நான் இத்தனை நாள் ப்ரீதியை 'காதலி'க்கிறேன் என்று சொல்லிக்கொண்டு அவளையே சுற்றிச் சுற்றி வந்தெல்லாம் நடிப்புத்தானா....? உண்மையில்லையா.....?' பிரவீனின் மனதில் மீண்டும் அந்தக் கேள்வி எழும்பியது.

அவன் மீண்டும் தன் மனதை குழப்ப நிலையிலிருந்து தெளிவுபடுத்த முயன்றான்...

இல்லை இந்த நிமிடம் வரை நான் அவளைக் காதலித்தது உண்மை. அவள் மீது கொண்ட அன்பு நிஜமானது. அதனால்தானே நான் இந்த முடிவுக்கு வரக்கூட காரணமாயிற்று... என்னுடைய நிலை என்ன....?'

அப்பா இல்லாத குடும்பம். குடும்பத்தின் மூத்த ஆண் பிள்ளை என்ற பதவியிலிருப்பவன். கரைசேர்க்கவேண்டிய வயதிலிருக்கும் இரண்டு அக்காமார், கூடவே படித்துக்கொண்டிருக்கும் தம்பி, தங்கைமார்கள். இவர்கள் அனைவரையும் தாங்கவேண்டிய சுமைதாங்கியாய் நான் இருக்கிறேன்.

ஆனால் ப்ரீதியோ.......

செல்வச் செழிப்பில் வளர்ந்த ஒரு செல்வந்தரின் ஒரேமகள். 'பட்டினி' என்றால் என்ன என்றே அறியாதவள். 'வறுமை' என்ற சொல்லுக்கே அர்த்தம் தெரியாதவள். இப்படிப்பட்ட இருதுருவங்களாயிருக்கும் நாங்களிருவரும் இணைந்தால்.......? ஏன் எனக்கு இவையொன்றும் ஆரம்பத்திலேயே தோன்றவில்லை' என்று பிரவீன் நினைத்துப் பார்த்தான்.

அவனுக்கு மட்டுமில்லை. காதலில் வீழ்ந்துவிட்ட எந்த ஒரு காதலர்களுக்கும் அதன் பின் விளைவுகளை நினைத்துப் பார்க்கத் தோன்றுவதேயில்லை. பிரவீனும் அதற்கு விதிவிலக்கு அல்ல. அவனும் அந்த நிலையில் தான் இருந்தான்.

அவனுடைய 'இளமை'யின் வேகத்தில் 'வறுமை' அவன் கண்ணுக்குத் தெரியாமலிருந்ததை பிரவீனால் இப்போது புரிந்து கொள்ள முடிகின்றது.

ஆனால் அவனும் நாலு காசு சம்பாதிக்கத் துவங்கியதும் பணத்தின் பெறுமதியை அவனால் தெரிந்து கொள்ள முடிந்தது.

கஷ்டப்பட்டு உழைத்து, கை நீட்டி சம்பளம் வாங்கியபோது அவனுக்கு காதல் பசியைவிட வயிற்றுப்பசி பெரிதாய்த் தோன்றியது.

'காதல்' என்ற மாயத்திரை விலகி அவன் குடும்பத்தின் 'வறுமை' அவன் கண்களுக்கு தெரிய ஆரம்பிக்கின்றது.

என்னால் அரை வயிற்று கூழோ கஞ்சியோ என்று குடித்து காலம் தள்ள முடியும். ஆனால் ப்ரீதியால் இதையெல்லாம் தாங்கிக்கொள்ள முடியுமா...?

எப்போதுமே இலவசமாய்க் கிடைக்கும் கனவுகளை மட்டுமே நெஞ்சில் சுமந்து வாழ்ந்து கொண்டிருக்கும் அக்காமாரை விட்டு விட்டு எப்படி என்னால் ப்ரீதியை கைப்பிடிக்க முடியும்...? அதுமட்டும் அவளால் தான் காத்திருக்க முடியுமா?

அவள் சம்மதித்தாலும் அவள் பெற்றோர் அதற்கு இணங்குவார்களா? தங்களுடைய ஒரே மகளை திருமணக் கோலத்தில் பார்ப்பதற்கு அவர்களுக்கு மட்டும் ஆசையிருக்காதா? அவர்களுடைய ஆசையும் நியாயமானது தானே!

எந்தப் பெற்றோர்தான் அவர்கள் மகளை பாழுங் கிணற்றில் தள்ளிவிட ஆசைப்படுவார்கள்? ப்ரீதியைப் பொறுத்த வரை என்னைக் கைப்பிடிப்பதுதான் சொர்க்கமாயிருந்தாலும் அவளது பெற்றோருக்கு என்னுடைய வறுமை பாழுங்கிணறாய்த்தானே தோன்றும்.....? ஏன் ஒருவேளை ப்ரீதியே கூட என்னுடன் வந்து அரை வயித்துப் பசியோடு கிடக்கும்போது, அவசரப்பட்டு இவனைக் காதலித்துவிட்டோம் என்று நினைத்து விட்டால்.....

பசியின் கொடுமை பொறுக்காது என் மீது கொண்ட காதலே அவளுக்கு வெறுப்பாகத் தோன்ற ஆரம்பித்தால்.....

என்னைப் பார்க்கின்ற போதெல்லாம் 'நீ தானே.... நீ தானே... உன்னைக் காதலித்ததால் தானே இன்று எனக்கு இந்த நிலைமை' என்று அவள் மனம் கேள்வி கேட்கத் துவங்கினால்... அதைவிடப் பெரிய பெரிய பழி எனக்கு எதுவுமே இருக்காது. புனிதமான 'காதல்' என்ற வார்த்தைக்கே மாசு கற்பிக்க நான் காரணமாகிவிடுவேன்.

என் வாழ்நாள் முழுவதும் இந்த ஒரு நினைப்பே என்னை வேதனைப்படுத்த போதுமானது. வேண்டாம், நான் ப்ரீதியை ஏமாற்றினாலும் 'காதலை' ஏமாற்ற விரும்பவில்லை. காதலர்கள் அழிந்து போகலாம். ஆனால் காதல் அழிந்து விடக்கூடாது ப்ரீதி. அதனால்தான் நானும் நீயும் பிரிந்துவிடுவோம் என்று உனக்கு கடிதம் எழுதினேன்.

எனக்குத் தெரியும், எனது கடிதத்தால் உன் மனம் எவ்வளவு தூரத்துக்கு வேதனைப்படும் என்று. ஆனால் பின்னால் நம் இருவர் மனதும் பலநூறு மடங்கு வேதனைப்படாமலிருக்க வேண்டுமானால் நாம் இருவரும் பிரிவதுதான் நல்லது.

நாங்களிருவரும் காதலர்களாய் தான் பிரிந்தாலும், நல்ல நண்பர்களாய் மீண்டும் சந்திப்போம்...... பழகுவோம். ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேசிக் கொள்வோம். பிரச்சனைகளைப் பகிர்ந்து கொள்வோம். உதவி செய்வோம். அதற்கு நீ என் காதலியாய்த் தான் இருக்க வேண்டுமென்ற நியதியில்லையே....!

என்னை மன்னித்துவிடு ப்ரீதி, நம்முடைய பிரிவு கசப்பான அனுபவமாய் இருந்தால் உன்னுடைய எதிர்காலம் இனிப்பானதாய் அமைய எனக்கு வேறு வழி தெரியவில்லை.

நீ என்னைப் புரிந்துகொள்ளவாய் என்று நான் நம்புகிறேன். என்னுடைய காரணங்கள் உனக்கு நியாயமானதாய் தோன்றும் என்று நம்புகிறேன் ப்ரீதி......

ப்ரீதி தொலைவிலே வந்து கொண்டிருந்தாள்....

பிரவீன் அவளது வரவை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான்.....

## கூத்தரித்த கூடி ஜோக்ஸ்

**தகப்பன்:** இன்டர்வியூ நடந்தப்போ தூங்கிட்டு இருந்தியாமே?

**மகன்:** நீங்கதானே இன்டவியூவில முழிச்சிக்கிட்டு இருக்காதேன்னு சொன்னீங்க.

••

**ஒருவர்:** டாக்டர், நேற்று நீங்க வயித்து வலிக்குக் கொடுத்த மருந்தைச் சாப்பிட்டதும் வானத்தில் பறக்கிற மாதிரி இருந்தது.

**டாக்டர்:** நான் அப்பவே சொல்லலை, இந்த மருந்தைச் சாப்பிட்டதும் வயித்து வலி பறந்து போயிடும்னு.

••

**ஒருவர்:** பெரிய தலைவராச்சேன்னு அந்த ஆளை நூல் வெளியீட்டு விழாவுக்கு அழைச்சது தப்பாப் போச்சுது.

**மற்றவர்:** ஏன்?

**ஒருவர்:** கறுப்பு நூலா, வெள்ளை நூலான்னு கேக்கிறார்.

••

**ஆசிரியர்:** அர்ஜுனனின் அம்மை மார்பில் வாங்கி, தரையில் வீழ்ந்த கர்ணன், கண்ணனைப் பார்த்து 'புண்' சிரிப்பு சிரித்தான்னு எழுதியிருக்கிறியே!

**மாணவன்:** காயம்பட்டிருக்கே சேர்.

••

**அவர்:** எங்க ஒவ்வீஸ்ல லஞ்ச் ரைம்மில எல்லாரும் ஒரே அரட்டை தான்.

**இவர்:** மற்ற நேரத்தில்?

**அவர்:** ஒரே குறட்டை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

**இனிப்பைச் சுற்றி வட்டமிடும் எறும்புபோல அவன் எண்ணமெல்லாம் மீனாவைச் சுற்றியே......**

# அத்தைக்குப் பிறந்தவளே!

## கவிப்பிரியா நிஷா

அந்தகாரம் நீங்கிவிட்ட அதிகாலைப் பொழுதில் ஆதவன் எங்கும் தன் பொற்க் கதிர்களைப் பரப்பிக்கொண்டிருந்தான். நித்திராதேவியின் அரவணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட தினேஷ் கடும் குளிர் காரணமாக படுக்கையை விட்டு எழ மனமின்றி தலையணையை அணைத்துக்கொண்டு மறுபக்கம் புரண்டு படுத்தான்.

"தினேஷ் ஒரு சந்தோஷமான விஷயம்."

புன்னகை பூத்த முகத்தோடு அவன் அருகே வந்து நின்றாள் அம்மா.

"என்னம்மா?"

"கனடாவிலிருந்து உன் அத்தைப் பொண்ணு மீனா வர்றாளாம்."

"வாவ்."

கட்டிலை விட்டு கீழே குதித்தவன்,

"அம்மா நிஜமாத்தான் சொல்றீங்களா?"

சகிக்க முடியாத சந்தோஷத்தோடு கேள்விக்கணை தொடுத்தான்.

"ஆமா தினேஷ். இப்போதான் உன் அத்தை ஃபோன் பண்ணி இருந்தாங்க. அடுத்தவாரம் மீனா இங்கு வர்றாளாம்."

அம்மா சொன்னதைக் கேட்டதும் அவனது உள்ளமெனும் நந்தவனப் பூங்காவில் சந்தோஷப் பூக்கள் பூத்துக் குலுங்கின.

"அம்மா மீனா கூட யார் வர்றாங்களாம்?"

"என்னப்பா இப்படிக் கேக்கிறே... உன் அத்தை, மாமா, மீனா மூணு பேரும்தான் வர்றாங்களாம்."

"இதைக் கேட்கும்போது ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா."

"இருக்காதா பின்னே? மீனா வர்றாயில்ல?"

அம்மா கூறவும், அவன் இலேசாக நாக்கை கடித்துக்கொண்டான்.

"தினேஷ் நீ போய் குளிச்சிட்டுவா. நான் சாப்பாடு ரெடி பண்ணி வைக்கிறேன்."

அம்மா கூறிவிட்டுச் செல்லவும், டவலை எடுத்து தோள்மீது போட்டுக் கொண்டு எஸ்.பி.பியின் பாணியில் 'அஞ்சலி அஞ்சலி புஷ்பாஞ்சலி' பாடலை பாடியவாறு பாத்ரூமிற்குள் நுழைந்தான் தினேஷ்.

◻◻◻

மீனா கனடா செல்லும் முன் தினேஷின் வீட்டில்தான் தங்கி இருந்தாள். கனடாவில் வசித்து வந்த மீனாவின் பெற்றோர் அவளை தினேஷின் அம்மாவின் பொறுப்பிலேயே விட்டிருந்தனர். கனடாவில் பெற்றோர் இருந்தபோதிலும்அந்தக் குறையே தெரியாது அவள் வாழ்ந்து வந்தாளென்றாள் அதற்கு காரணம் தினேஷின் துய்மையான அன்புதான்! அவனது அன்பும், அவனது அம்மாவின் பாசமும் அவளை நெகிழ வைத்தது. மீனாவின் துடுக்குத்தனமும், கள்ளம் கபடமற்ற பேச்சும் தினேஷிற்கு ரொம்பவும் பிடித்திருந்தது. அவள்மீது அவன் உயிரையே வைத்திருந்தான். அவளும் அவன்மீது அளவுகடந்த அன்பு வைத்திருந்தாள். பெற்றோர் தன் அருகில் இல்லையே என்ற கவலை சிறிதுமின்றி துள்ளித் திரியும் புள்ளி மானாக அவள் வாழ்ந்து வந்ததைப் பார்த்து தினேஷ் உண்மையிலேயே மகிழ்ந்துதான் போனான்.

இப்படி இருக்கும்போதுதான் ஒருநாள் திடீரென்று கனடாவிலிருந்து அவளது பெற்றோர் இலங்கைக்கு வந்தார்கள். அவர்களது வருகையையிட்டு தினேஷ் மிகவும் சந்தோஷம் அடைந்தான். என்றாலும் அவர்கள் வந்திருப்பது மீனாவை அழைத்துச் செல்லத்தான் என்பதை அறிந்ததும் அவனது சந்தோஷம் காணாமல் போனது. அவளை அழைத்துச்செல்ல வேண்டாமென்று அவன் எவ்வளவோ கெஞ்சிப்பார்த்தான். அவர்கள் கேட்கவில்லை. அவளும் தன்னால் கனடா வரமுடியாதென்று அழுது வடித்தாள். ஆனால் அவளது பெற்றோர் பிடிவாதமாக அவளை கனடாவுக்கு அழைத்துச்சென்று விட்டனர்.

இதனையிட்டு தினேஷ் வேதனையின் விளிம்பிற்கு தள்ளப்பட்டான். மீனாவின் நினைவினால் ஊண் உறக்கமின்றி கண்ணீருடன் அவன் கழித்த நாட்கள்தான் எத்தனை எத்தனை! மீனாகூட சாப்பிடாமல் தூங்காமல் அழுதழுது இருப்பதாக அங்கிருந்து அத்தை ஃபோன் பண்ணும் வேளைகளில் அவன் துடித்துப் போவான்.

'உறவு என்றொரு சொல் இருந்தால் பிரிவு என்றொரு பொருளிருக்கும்' என்பதை உணர்ந்து கொண்ட தினேஷ் காலப்போக்கில் தன் மனதை தேற்றிக்கொண்டு வாழப் பழகிக்கொண்டான்.

◻◻◻

மீனா கனடா சென்று ஒரு வருடம் ஆகிவிட்டது. ஒரு வருடத்திற்குப் பிறகு அவள் இலங்கை வரப்போகிறாள். அவள் வரும் நாளை அவன் ஆவலோடு எதிர்பார்த்து காத்திருந்தான். அந்த நாள் இன்றே மலர்ந்துவிடக்கூடாதா என்று



அவன் மனதிற்குள் சின்னதாய் ஒரு ஏக்கம். மீனா இங்கு வரப்போகும் விஷயத்தை தன் நண்பர்களிடம் தெரிவித்து அகமகிழ்ந்தான் தினேஷ். அவனது மகிழ்ச்சியைக் கண்டு பூரித்துப்போன நண்பர்களில் ஒருவன்,

"டேய் மச்சான். மீனா வந்தபிறகு உன்னைக் காணவே கிடைக்காதில்ல?"

கேட்டுவிட்டு அவனது முகத்தை ஏறிட்டான்.

"ஏண்டா அப்படிச் சொல்றே?"

"உயிர் நாடியே மீனா தானே? அவ வந்திட்டான்னா அப்புறம் உனக்கு எங்ககூட கதைக்க டைம் எங்க கிடைக்கப் போகுது."

நண்பன் கூறியதைக் கேட்டு தினேஷ் சிரித்துக்கொண்டான். மீனாமீது தான் வைத்துள்ள பிரியத்தை நண்பனும் அறிந்து வைத்துள்ளான் என்பதை எண்ணும்போது அவனது உள்ளம் சந்தோஷித்துப்போயின.

◻◻◻

இன்று மீனா வருகிறாள். அவன் மனதில் ஏகப்பட்ட சந்தோஷம். இன்ப வானில் சிறகடித்துப் பறக்கும் மனதுடன் எயார்போர்ட் செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

"தினேஷ், நீ ஒஃபிஸுக்குப் போயிட்டு வாப்பா. நானும் அப்பாவும் எயார்போர்ட் போய் அவங்களை அழைச்சிட்டு வர்றோம்."

"இல்லம்மா நான் எயார்போர்ட் போறேன்."

"தினேஷ் மீனாவைப் பார்க்க நீ ரொம்பவும் அவசரப்படுறே. எப்படியும் இன்னைக்கு மீனா நம்ம வீட்டுக்கு வரத்தானே போறா. ஒஃபிஸுக்கு லீவு போட்டேன்னா உன் முதலாளிகிட்ட பேச்சு வாங்க வேண்டி வரும். முதலாளியோட குணம் உனக்கு தெரியும் தானே..? அதனாலதான் சொல்றேன். நீ ஒஃபிஸ் போயிட்ட வா. நாங்க எயார்போர்ட் போய் அவங்களை அழைச்சிட்டு வர்றோம்."

அரை மனதுடன் அவன் ஒஃபிஸ் கிளம்பினான்.

ஒஃபிஸில் அவனால் ஒழுங்காக வேலை செய்ய முடியவில்லை. அவன் எண்ணமெல்லாம் இனிப்பைச் சுற்றி வட்டமிடும் எறும்பைப்போல மீனாவையே சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தன. ஒஃபிஸ் விட்டதும், "ஆளை விட்டால் போதும்" என்று தனக்குள் கூறிக் கொண்டவன் வீட்டுக்கு விரைந்தான்.

◻◻◻

வெளிநாட்டு செண்ட் வாசனையோடு வீடு அமர்களமாக காட்சி அளித்தது. முன்ஹாலில் அம்மாவோடு அத்தையும், மாமாவும் ஏதோ சுவாரஸ்யமாக உரையாடிக் கொண்டிருந்தார்கள். அவனைக் கண்டதும் சுகம் விசாரித்தார்கள்.

பதிலுக்கு அவனும் சுகம் விசாரித்தான்.

"மீனா எங்கே?"

"இவ்வளவு நேரமும் இங்குதான் உட்கார்ந்துக் கிட்டிருந்தா. இப்போ உன்னைக் கண்டதும்தான் எழுந்திருச்சி உள்ள ஓடிப்போயிட்டா."

"அட என்னைக் கண்டு ஓடி ஒளியும் அளவுக்கு என் அத்தைப் பொண்ணுக்கு வெட்கம் வந்திடுச்சாக்கும்?"

"ஒரு வருஷத்திற்கு பிறகு மீட் பண்ணுறாயில்ல அதான்."

அத்தைதான் கூறினாள்.

"அத்தை நீங்க பேசிக்கிட்டு இருங்க. நான் போய் அவளை கவனிச்சிக்கிறேன்."

அவன் மெதுவாக நடந்து வந்து மீனா எங்கு இருக்கிறாள் என்று நோட்டமிட்டான். அவளைக் காணவில்லை.

"ஹூம் எங்கே போயிருப்பாள்?"

கேள்விக்குறியோடு கிச்சனுக்குள் வந்தவன் ஏகமாய் சந்தோஷித்துப்போனான்.

"அடிக்கள்ளி."

அவளது கையைப் பிடித்து இழுத்தவன்,

"ம்.பரவாயில்லையே! இந்த ஒரு வருஷத்தில கொஞ்சம் குண்டாகித்தான் வந்திருக்கே."

என்று கிண்டலாக கூறினான்.

"நீங்க மட்டும் என்ன? முன்பைவிட குண்டாத்தானே இருக்கிறீங்க?" என்று கொஞ்சம் மழலையில் கூறியவாறே தினேஷின் தோள்களைக் கட்டிக் கொண்டாள் நந்தே வயது நிரம்பிய அத்தைப் பொண்ணு மீனா. ■

---

**"முகம் நிமிசத்தில் எப்படி வாடிப் போயிற்று. என்னை உயிராய் நேசிக்கிறார். சீண்டிப் பார்க்க வேண்டும்."**

சிறுகதை

# அவனும் அவளும்

## ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி



அவனுக்கு அழவேண்டும் போலிருந்தது. ஜன்னலூடாகத் தெரிந்த வெளியுலகத்தைக் கருமை கடுமையாக்கிக் காட்டியது. நடுநிசி 12.00த் தாண்டிய முள் நரம்பைப் பிடித்துக்கொண்டிருந்தது. அவனைத் தவிர எல்லோரும் உறங்கிப் போனதால் உலகம் மௌனப்போர்வையுள் இருந்தது. தன்னைக் கட்டிலை விடுவித்து விளக்கை எடுத்து மீண்டும் கதிரையில் வந்து அமர்ந்து மேசையில் முகம் பதித்தான். மனம் 'ஓ'வென்று ஆரவாரித்து அலறியது. அவன் மௌனமாய் வெறித்தான்.

'ஷகி... என்ன மன்னிச்சிடு. என்ன மன்னிச்சிடு திரும்பவும் என்கிட்ட வந்துடு. மென்மையான உன் மனசை நோகடிச்ச வேடிக்கைப்பார்த்த இந்தப் பாவிய மன்னிச்சிடுவியா?' மானசீகமாய் மன்னிப்பு வேண்டிய அவன் குரலை இரவு மாத்திரமே கேட்டு விழித்தது.

நிமிஷங்கள் கழித்து தலையை உயர்த்தி, கரத்தை நீட்டி அதுவரை மேசையில் கிடந்த கவிதைப் புத்தகத்தை எடுத்தான். விரல்கள் நடுங்க பக்கங்களைப் புரட்டினான். ஒவ்வொரு பக்கத்திலும் வாடிப்போய் கண்ணீரை இமை மூடித் தாழ்போட முயற்சிக்கும் அவளது முகம், லேசாய்த் துடித்து துக்கத்தைப் பிரகடனப்படுத்தும் உதடுகள் எல்லாமே அச்சப் பதித்தது போல்...அவன் கண்களைக் கண்ணீரால் நிரம்ப வைத்தது.

அவன் மனங்கவர்ந்த மலரை லேசாய் கிள்ளிப் பார்த்து இரசிக்க நினைத்தவன் அதிலிருந்து கண்ணீர் வடிந்து மலரே மறைந்து போய்விட்ட சோகம் நினைத்து கலங்கினான்.

அது அவனது வசந்த காலம். அவளோடு அமர்ந்திருந்தான். மனதோடு மாத்திரமே நெருக்கம். உடலில் இல்லை. விரல்கூட படாத, பட விரும்பாத தூய நேசம் அவனதும் அவளதும் மனப் பிரதேசத்தில் விதைக்கப்பட்டிருந்ததுதான் காரணம். கையில் வைத்திருந்த கவிதைப் புத்தகம் விரித்து வரிகளை வாசித்தான் அவன்.

கண்மூடி இரசித்தான். "நல்லாருக்கு புது புத்தகமா? தர்றீங்களா வாசிச்சுட்டுத் தர்றேன்?" அவனுக்குள் ஒரு குறுகுறுப்பு. இன்று இவளை சீண்டிப் பார்க்க வேண்டும்.

"ம்ஹூம். ஸொரிம்மா. இன்னிக்கு தரவே முடியாது. என் மனசோட நெருங்கிய இன்னொருத்தருக்கு தர்றதா ஏற்கனவே ப்ரொமிஸ் பண்ணிட்டேன்."

கண்களை இடுக்கிப் பார்த்தாள். ஆயிரம் கேள்விகள். அவனுக்குப் புரிந்தது அவளது தவிப்பு. வேண்டுமென்றே சிரித்தான். அவன் மனதினுள் லேசாய் ஒரு விரிசல். மிக லேசாய். அவளது தடுமாற்றத்தை இரசித்தான். அவளை நிறைய பதைபதைக்க வைக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு. புத்தகத்தை எடுத்துக்கொண்டே விடைபெற்று போனான்.

'என்னைத் தவிர அவர் மனசுக்கு நெருக்கமா இன்னொருத்தியா? ஒருத்தனா?' மனசுக்குள் குழம்பினாள். விளையாட்டாச் சொல்லியிருந்தா போகிற நேரம் புத்தகத்தை தந்திருக்கலாமில்ல. ஏன் தரவில்லை?' யோசித்துக்கொண்டிருந்தாள். மனசுக்குள் வலித்தது. அழுதாள்.

அங்கே அவன் தனியே சிரித்துக் கொண்டிருந்தான். அவனது செயலால் அவள் எப்படி குழம்பிப்போனாள்? மலர்ந்த முகம் நிமிஷத்தில் எப்படி வாடிப் போயிற்று? 'என்னையே உயிராய் நேசிக்கிறாள். இன்னும் சீண்டிப் பார்க்க வேண்டும்.' நினைத்துக் கொண்டான். மாலையில் அவன் நண்பன் வலக்கையில் கட்டுடன் வந்தான்.

"என்னடா ஆச்சு உனக்கு?"

"இப்படி இருக்கவேண்டிய எலும்பு அப்படி விலகிப்போய்டிச்சு." என்றான் அவன்.

"லேசா தடுக்கி விழுந்தேன். அடிபட்டு டிச்சு." தொடர்ந்தான் நண்பன்.

"ஒரு ஹெல்ப் பண்ணுவியா? அதான் என் அன்புக்குரிய நிரோவை நாளைக்கு மீற் பண்ண வரச் சொல்லி ஒரு லெட்டர் எழுதிக் குடு."

"நான் எப்படிடா எழுதறது? கையெழுத்து தெரியாதோ வித்தியாசமாய்?"

இவன் கேட்டான்.

"பரவாயில்லை. நான் விழுந்த சங்கதி அவவுக்குத் தெரியும். வர்றபோது அன்னிக்கு கொடுத்த கவிதைப் புத்தகத்தையும் கொண்டு வரச் சொல்லி எழுது." நண்பனின் வேண்டுகோள் படி எழுதி முடித்தான் இவன்.

"இப்படிக்கு பிரியங்களுடன் நான்." அப்படின்னு மட்டும் போடு. அவவுக்குத் தெரியும் அது நான்தான்னு." அதையும் எழுதி முடித்தான்.

தடால் எனும் சப்தம் சமையலறையிலிருந்து கேட்கவே பதறி ஓடினர் இவனும் அவன் நண்பனும். இவனின் அம்மா மயக்கம் போட்டு விழுந்திருந்தாள். உயர் இரத்த அழுத்தம். பதறிப்போய் பக்கத்திலுள்ள வாகனச் சொந்தக்காரரை அழைத்து வைத்தியசாலைக்கு அம்மாவைக் கொண்டு சென்று... ஒரே குளறுபடியாகிவிட்ட அடுத்த மணித்தியாலயங்களில் இருவரும் குழம்பிப்போய்விட்டனர். காதலியைச் சந்திப்பதை ஒத்திப்போட்டுவிட்டு கடிதத்தையும் மறந்துவிட்டு இவனது நண்பன் போய்ச் சேர்ந்தான்.

இரண்டு கிழமைகளின் பின் அவளைச் சந்தித்தான். மௌனமாய் அமர்ந்திருந்தாள்.

"ஏன் இத்தனை நாள் தாமதம்?" அவள் வினவினாள்.

அம்மாவின் சுகவீனம் பற்றிச் சொல்ல வாயெடுத்த முடிவு மாற்றி கொஞ்சம் அவளைச் சீண்டிப் பார்க்க விரும்பியது அவன் மனம். "ம்...எனக்கு எத்தனையோ முக்கிய அலுவல்கள்." அவள் வெறித்துப் பார்த்தாள். தனக்குள் சிரித்துக்கொண்டான். எதனையோ கேட்க வாயெடுத்து மூடிக் கொண்டாள். பின் நிலவிய மௌனத்திரை கிழித்து அவன் அம்மாவைப் பற்றி சொன்ன நிமிஷங்களில் அவள் வேறெதுவோ யோசித்தவாறிருந்தாள்.

இறுதியாக புத்தகத்தை இவன் கொடுத்தபோது மௌனமாய் வாங்கிப் புரட்டினாள். இடையே சிறு கடிதம். விரித்துப்படித்தவள் விக்கித்துப் போனாள். "இது...இது?" நிமிடத்தில் புரிந்துகொண்டான்.

நண்பனின் காதலியின் பெயர் எழுதி இவன் எழுதிய அந்தக் கடிதம். சிரிப்பை அடக்கியவாறு, "இது? நான்தான் எழுதினேன்."

"என்ன விளையாடுறீங்களா?" அவள் கடுமையாய்க் கேட்டாள். "யாரிந்த நிரோ?"

"ம்....அதை நான் சொன்னா நீ கட்டாயம் என்னோடு கோபிக்கத்தான் போறே..." அவள் உடைந்துபோனாள்.

மனசு ஆயிரம் துகள்களாகியது. "உண்மையாத்தான் சொல்றீங்களா? ப்ளீஸ் என் மனசோட விளையாடாதீங்க. என்னால சின்ன வேதனையைக்கூட தாங்க முடியாது." அவள் அழுது விடுபவள்போல-அவன் மறுக்கவில்லை. விளையாட்டைத் தொடர விரும்பினான்.

திடீரென அவள் எழுந்துபோய்விட்டாள். இன்று வருவாள், நாளை வருவாள் உண்மை சொல்லி சிரிக்க வைக்கலாம் என இவன் காத்திருந்தான்.

கிழமை ஒன்று கடந்து அவனுக்குத் தகவல் வந்தது. அவளது குடும்பத்துடன் அவளும் எங்கோ தொலைதூர பிரதேசமொன்றுக்குப் போய்விட்டதாக. இப்போது இவன் அழுகிறான். ◻

### வாசகர்கள் கவனிக்க

முரசுக்கு ஆக்கங்கள் அனுப்புவோர் மற்றும் போட்டிகள், பேனா நண்பர் அரங்கம் போன்றவற்றில் பங்கு கொள்வோர் அனைவரும் கீழ்வரும் முகவரிக்கே அனுப்பவேண்டும். பதிவுத் தபால்கள் ஏற்கப்படமாட்டாது. ஆக்கங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா.

**முகவரி-** தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772,
கொழும்பு

நீங்கள் பங்குகொள்ளும் போட்டியின் பெயரையோ அல்லது ஆக்கங்கள் சேரவேண்டிய பிரிவையோ கடிதத் தலைப்பின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்படவும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# நின்பார்வை நீரூற்றும்

தருவது ரசிகன்





கன்னி மாடத்தின் மைய மண்டபம். சுவரெல்லாம் சித்திரங்கள். செந்தமிழ் கலையுள்ளத்திற்கு அவை சாட்சியங்கள். அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய மணிவிளக்குகள். அந்த விளக்குகளின் அதிகமில்லாத வெளிச்சத்திலே, கன்னி மாடத்தில்தானே இருக்கிறோம் என்ற துணிச்சலிலே மெல்லிய பட்டுத் துகில் கட்டுடல் மறைக்க, பருவ எழில் கொட்டும் உருவத்தாள், ஏறெடுத்துப் பார்ப்போர் இதயத்தை போர்களத்து வேல் போலும் விழிகளால் துளைத்தெடுக்கும் கோலத்தாள், நெஞ்சமது தாங்கி நிற்கும் வெஞ்சினத்து மதயானைகள் போல் இருக்கும் மார்பெழில்கள் கொண்ட பருவத்தாள் தமிழரசி மண்டபத்து பட்டுவிரிப்பிலே அமர்ந்திருந்தாள்.

அந்த மண்டபத்து அழகும், விரிந்த பரப்பும், அதன் மையத்திலே அவள் அமர்ந்திருந்த பாங்கும் தடாகத்திலே மலர்ந்திருக்கும் தாமரையை ஒத்திருந்தது.

மையிட்ட விழிக்காரி தமிழரசியின் முன்பாக மரகத வீணை இருந்தது. மருதாணி நீட்டிய விரல்கள் வீணையின் நரம்புகளை நளினமாய் தொட்டு வருட நாதம் எழுந்தது.

தமிழரசி விழிகளை மூடிக்கொண்டாள். விரல்கள் வருட நரம்புகள் நெகிழ்ந்து நாதக்கம் உயர்ந்து அவள் செவிகளைத் தொட்டது.

தமிழரசி தன்னை மறந்தாள். நாதம் அழைத்தது. இன்னும் மீட்டு, இதமாய் வருடு. வீணையின் நரம்புகள் அழைப்பு விடுக்க விரல்கள் ஊர்ந்து, நகர்ந்து, புதிரின் முடிச்சை அவிழ்க்கும் முயற்சி போல், இனிய நாதத் தேடல் நடத்தின.

கன்னிமாடத்து மைய மண்டபம் இசையால் நிரம்பிப்போக, உடைப் பெடுத்த வெள்ளமாய் உயர்ந்துவந்த இசை மண்டபம் தாண்டி வெளியேயும் போனது.

அப்படிப்போன இசை மன்னவன் குலோதுங்கன் செவியையும் நனைத்தது.

பாலில் விழுந்த பழம் போல, தேனில் தோய்ந்த பலாச்சுளை போல இசையின் மழையில் அவன் இதயம் சிலிர்த்தது.

மன்னவன் கால்கள் மைய மண்டபம் நோக்கி அவனை இழுத்துச் சென்றன.

குலோதுங்கன் மண்டபத்துக்குள் நுழைந்தது கண்ட தமிழரசியின் தோழிகள் மரியாதையாக எழுந்து கொண்டனர்.

தோழிகளில் ஒருத்தி மன்னவன் வந்த செய்தியை தமிழரசிக்கு சொல்ல அவள் செவியருகே குனிந்தாள்.

குலோதுங்கன் தன் கையசைவால் 'வேண்டாம் இடையூறு செய்யாதே' என்பது போல் தடுத்தான்.

தோழிகள் மெல்ல மண்டபத்தை விட்டு வெளியேறிச் சென்றனர்.



வெளியே அவர்கள் தமக்குள் குறும்பாய் ஏதோ கிசுகிசுத்துப் பேசுவது குலோதுங்கனின் பாம்புச் செவிகளுக்குள் விழாமல் போகுமா?

மன்னவன் உதடுகள் மெல்லிய புன்னகை சிந்தின.

மன்னவன் வந்ததுவோ, தோழிகள் விலகிச் செல்லும்போது அவர்கள் பாதச் சிலம்புகள் எழுப்பிய ஒலிகளோ எதுவுமே தமிழரசியை இசையுலகில் இருந்து மீட்கவில்லை.

ஆகா.... இந்த மெல்லிய நரம்புகளுக்குள் இத்தனை புதிரா?

சகல புலன்களையும் கட்டிப்போடும் வல்லமை இசைக்கன்றி வேறு எதற்குண்டு?

தமிழரசி அனுபவித்து இரசித்தாள். மன்னவனோ அவளையும், அவள் மீட்டும் இசையையும் ஒரு சேர இரசித்தான்.

மீட்டத்தெரிந்தவனுக்கு பெண்ணும் ஒரு வீணைதான்.

இவள் விரல்கள் தொட நாதம் எழுப்பும் இந்த வீணையைப் போலவே,

ஆண் விரல்கள் ஸ்பரிக்க பெண்ணுக்குள் மாயம் தோன்றும். இனிய பெண் இவள் அந்த வீணைக்கு சமமாய் கொள்ளப்படத் தக்கவள்தானே!

குலோதுங்கன் வீணையையும் அவளையும் மாறி மாறிப் பார்த்தான்.

மெல்லிய துகில் வெளிப்படுத்திய எழில்களுக்குள் விழிகளுக்கு விருந்தாக, அந்த எழிலரசி மீது கொண்ட நேசம் நெஞ்சத்தை இனிதாக்க, இசையின்பம் செவிக்கு தேனாக, தமிழரசி கூந்தலில் சூடியிருந்த மல்லிகை மலர்களின் வாசம் நாசிக்கு சுகமாக குலோதுங்கன் தன்னை இழந்துகொண்டிருந்தான்.

தமிழரசி இப்போது இசையின் உச்சம் தொட்டு அனுபவித்தாள்.

உச்சம்வரை சென்று, மெல்லத் தணிந்து இறங்கி விரல்கள் ஓய்ந்து, தமிழரசி மெல்லக் கண்திறந்தாள்.

கருவண்டு விழிகள் மன்னவன்மீது மொய்த்துக்கொள்ள, தமிழரசி வெட்கத்தில் செம்பருத்தி நிறம் முகத்தில் பரவ, பரபரத்து எழுந்துகொண்டாள்.

"எப்போது வந்தீர்கள்?"

என்று கேட்டாள். வெட்கம் குரலில் வியாபித்திருந்தது. பார்வையோ அவன் முகம் நேரே பார்க்காமல் சுவரில் இருந்த சித்திரங்கள் மீது அலைந்தது.

மன்னவன் குலோதுங்கன் அவள் கேள்விக்கு பதிலேதும் சொல்லாமல் நடந்து அருகில் போனான்.

தோள் தொட்டான். மெல்லிய துகில் சற்று விலக, இரு மலைகளின் நடுவே ஓடம் நதிபோல, மார்புகள் இடையே ஊடறுத்து சென்று தொங்கிக் கொண்டிருந்த முத்தாரம் பதித்த மாலையை இரசிப்பது போல எழில்களை இரசித்தான்.

தமிழரசி தன் தோள்மீது பதிந்த மன்னவன் கரம்மீது தன் இடக்கரம் வைத்து, விலக்க முயல்வதுபோல நடித்தபடி, ஓரவிழியால் அவனை நோக்கினாள்.

அவன் விழிகள் செல்லும் திசையறிந்து தன் வலக்கரத்தால் துகிலை சரிசெய்தாள்.

குலோதுங்கன் அவள் காதருகே கிசு-கிசுப்பாய்க் கேட்டான்,

"தமிழரசி உனக்கொரு விசயம் தெரியுமா?"

ஓரவிழிப்பார்வைக்குள் அவனை உள்வாங்கிக்கொண்டு அவள் பதிலுக்கு இதழ் திறந்து,

"என்ன?"

என்று கேட்டாள். விஷம குறுநகை குலோதுங்கனின் உதட்டில் கொலு வேறியது.

"இலைமறைக்காத கனியைவிட, இலைமறைத்தும் மறையாதது போல் தெரியும் கனிமீதுதான் தனி விருப்பம் அதிகம் வரும்."

தமிழரசிக்கு புரிந்தது. கோபம் வந்தது போல நடித்து அவன் கரம் விலக்கிவிட்டு தள்ளிப்போய் நின்று கொண்டாள்.

குலோதுங்கன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

சுவரிலே ஒரு சித்திரம். துள்ளி ஓடும் புள்ளிமானின் விழிகளில் தெரியும் மிரட்சி அற்புதமாக வரையப்பட்டிருந்தது.

குலோதுங்கன் ஓவியத்தை இரசித்த போது, தமிழரசி அவனை முழுமையாகப் பார்த்தாள்.

சட்டென்று குலோதுங்கன் அவளை நோக்கித் திரும்ப, ஒரு கணம் அவன் விழிகளை சந்தித்த தமிழரசி தரைநோக்கித் தலை கவிழ்ந்தாள். தன்னை அவள் நோக்கியதும் அந்த ஒரு கணத்தில் அவள் விழிகள் பட்டபாடும் குலோதுங்கன் உள்ளத்தில் நேசப்பயிர் வளர்க்கும் மழைபோல அமைந்துவிட, குளிர்ந்து போன குலோதுங்கன்,

'அடி பெண்ணே! நின் பார்வை என் காதல் பயிர் செழிக்க, அன்பெனும் பூ காயாகி கனியாகி கனிந்து சுவையூட்ட நீரூற்றும் உண்மையடி'.

என்று மனதிற்குள் கவி வடித்தான்.

குலோதுங்கனின் இந்த நிலைக்கு ஒரு குறள் தேடி பொருத்தம் காண்போம்.

## இலக்கிய நயம்

**"நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்**
**யாப்பினுள் அட்டிய நீர்."**

குறள்-1093-அதிகாரம்-110

## குறுக்கெழுத்துப் போட்டி இல-61

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | 4 |
| 5 | | | | 6 | ■ | |
| | ■ | | ■ | | ■ | |
| | 7 | ■ | 8 | | | ■ |
| 9 | | 10 | | ■ | 11 | 12 |
| 13 | | | | | | |
| ■ | | | ■ | 14 | | |

### இடமிருந்து வலம்

1. முரசும் இப்படி மாறினால் வாசகர்களுக்குச் சந்தோசம்தான்.
3. வெளிநாடுகளுக்குச் செல்வோர் இதற்காகவும் காத்திருக்கவேண்டும்.
5. தலைக்கு வந்தது இதோடு போனால் ஆபத்தில்லை.
8. இது சிறிதுதான். ஆனால் காரம் பெரிது.
9. இதன் ஏற்றுமதியால் நம் நாட்டுக்கு இலாபம்.
13. இது ஆதாரத்தோடு வெளியிடப்பட்டால் மதிப்பிருக்கும் (குழம்பியுள்ளது)
14. நாதஸ்வரத்தோடு கூட்டணி சேரும் போதுதான் சிறப்பாக இருக்கும்.

### மேலிருந்து கீழ்

1. திருவிழாக்காலத்தில் இதன் ஓசையும் கேட்கும்.
2. இது நடந்தால் திருத்திக்கொள்வதே நல்லது.
4. காயத்தையும் ஏற்படுத்தும்.
6. தினக்குறிப்புக்களையும் எழுதி வைத்துக் கொள்ளலாம்.
7. குறுநில மன்னர்கள் பெருமன்னர்களுக்கு இதைக் கொடுத்தார்கள்.
10. இதில் கிடக்கும் பொருட்களில் தூசியும் பிடிக்கும்.
11. நெய்யூற்றியும் வளர்க்கலாம்.
12. நடு இரவில் சுடுகாட்டில் போய் நின்றால் இதுவரும்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 13.08.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-61**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல. 1772**
**கொழும்பு.**

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-59க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வே | ட | ன் | ■ | 2 மே | தா | வி |
| ட் | ■ | 3 து | ■ | ற் | ■ | 4 அ |
| 5 பா | ர் | வை | ■ | 6 கு | 7 க | ன் |
| ள | ■ | ய | 8 பா | ■ | ர | ன |
| 9 ர் | 10 தே | ல் | த | ■ | டி | தா |
| ■ | னீ | ■ | 11 சா | து | ■ | ன |
| 12 சீ | ர் | வ | ரி | சை | ■ | ம் |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.59இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. ஸியாமா ஹுஸைன் கெக்குனகொல.
2. ஆர். நேசராஜா கொழும்பு-11.
3. எஸ்.எச்.எம். அக்ரம் உக்குவளை.
4. ஏ. தெய்வேந்திரன் மாத்தளை.
5. எஸ். யோகநாதன் கண்டி.
6. கே. சாரங்கன் மட்டக்களப்பு.
7. எவ். ஜோர்ஜ் வத்தளை.
8. செல்வி. சிவனு மின்னல்கொடி கொட்டகலை.
9. திரு. ஏ.எம். முனவ்வர் கொழும்பு-10.
10. செல்வி. கலைவாணி மயில்வாகனம் பதுளை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# ஸ்போர்ட்ஸ் ஆடவரும் புதிய வாரிசு


புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர்கள் தங்கள் பிள்ளைகளை அதே துறையில் ஈடுபடுத்தி அவர்களையும் புகழ்பெறச் செய்வது சர்வதேச கிரிக்கெட்டில் சகஜமாகிவிட்டது. இந்தப் பட்டியலில் தற்போது 'பேவரைட்'டாக இடம் பெற்றிருப்பவர் ரோகன் கவாஸ்கர்.

இவர் தலைசிறந்த கிரிக்கெட் வீரர்களில் ஒருவரும், இந்தியாவின் கிரிக்கெட் சகாப்தமுமான சுனில் கவாஸ்கரின் மகனாவார்.

பம்பாயின் ஸ்டார் கிரிக்கெட் கிளப்பிற்காக விளையாடி வருகிறார் ரோகன். பம்பாயின் இந்த ஸ்டார் கிரிக்கெட் கிளப் உண்மையில் பெயருக்கேற்றவாறு ஒரு ஸ்டார்தான். இது முக்கியமான தனது கிளப்பின் இளம் வீரர்கள் அடங்கிய ஒரு அணியை இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் சுற்றுப்பயணம் செய்யச் செய்து இளம் வீரர்களுக்குச் சர்வதேச அனுபவம் கிடைக்கச் செய்துவருவது உட்பட பல செயல்களைக் குறிப்பிடலாம்.


இந்த ஸ்டார் கிரிக்கெட் கிளப் இந்த ஆண்டும் 19 வயதிற்குட்பட்ட இளம் கிரிக்கெட் வீரர்கள் அணியை இங்கிலாந்திற்கு அனுப்பியுள்ளது. ஸ்டார் கிரிக்கெட் கிளப்பின் 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் அணிக்கு இது 8வது இங்கிலாந்து சுற்றுப்பயணம். என்றாலும் இந்தச் சுற்றுப்பயணத்தில் மிக முக்கிய விஷயம் யாதெனில், இதில் ரோகன் கவாஸ்கர் உட்பட 3 இந்திய கிரிக்கெட் பிரபலங்களின் மகன்கள் இடம்பெற்றிருப்பதுதான். மற்ற இரண்டு பிரபலங்களின் வாரிசுகள், சங்கராம் சிங், அப்பாஸ் அலி ஆகிய இருவரும் ஆவார்கள். இவர்களில் சங்கராம் சிங் இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹனுமந்த் சிங்கின் மகனாவார். அப்பாஸ் அலி புகழ்பெற்ற முன்னாள் கிரிக்கெட் வீரரான முஸ்டாக் அலியின் பேரனாவார்.

# சார்ஜாவில் ஆசியக் கோப்பை போட்டி



சார்ஜாவில் ஐந்தாவது ஆசியக் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டி டிசம்பர் 28ம் திகதி முதல் 1995ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ம் திகதி வரை நடைபெறும் என்று தற்காலிக முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆசியக் கோப்பைக்கான போட்டி நடைபெறும் நாளை ஆசிய கிரிக்கெட் கவுன்ஸில் இம்மாதம் அதிகாரபூர்வமாக அறிவிக்கும் என்று எமிரேட்ஸ் கிரிக்கெட் வாரியத்தின் பிரதான ஒருங்கிணைப்பாளரான விக்ரம் கௌல் தெரிவித்துள்ளார்.

தங்களையும் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி அளிக்கவேண்டுமென ஆசிய கிரிக்கெட் கவுன்ஸிலிடம் எமிரேட்ஸ் கிரிக்கெட் வாரியம் விருப்பம் தெரிவித்துள்ளது. மேலும் எமிரேட்ஸ் கிரிக்கெட் வாரியத்தின் கிரிக்கெட் அணி ஏற்கனவே நடைபெற்றுள்ள ஒஸ்ரலேசியா கோப்பைப் போட்டியிலும் விளையாடியுள்ளது. இந்த அணி உலகக் கோப்பைப் போட்டியிலும் கலந்து கொள்ளத் தகுதி பெற்றுள்ளது. இந்த அணியின் மேலாளராக விக்ரம் கௌல் இருந்திருக்கிறார். எமிரேட்ஸ் கிரிக்கெட் வாரியத்தின் ஒரு அங்கமான ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் ஸ்தல உறுப்பினராகவும் இருக்கிறது என்றும் கௌல் தெரிவித்தார்.



முதல் ஆசியக் கோப்பைக் கிரிக்கெட் போட்டி சார்ஜாவில் நடைபெற்றபோது அப்துல் ரஹ்மான் புக்காத்தியர் என்பவர் ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் தலைவராக இருந்தார். இவர், ஆசியக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் எமிரேட்ஸ் அணியையும் பங்கேற்கச் செய்தால் அது அணிக்கு நல்ல ஊக்கத்தை அளிக்க உதவும் என்று கூறினார் என்றும் கௌல் கூறினார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம்

அங்கம் 40

இவ்வாரம் (07.08.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரீ.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:** அரச வம்சத்தவர்கள் பல்வேறு தேச அரசகுமாரிகளை திருமணம் முடிப்பதன் மூலம் எதிரிகளைக் குறைத்து உறவுகளை வளர்த்துக் கொள்வதுண்டு. அர்ச்சுனனிடம் இக்கருத்தினை விளக்கியது குந்திக்கு உடன்பாடான போதிலும் திரௌபதியின் உள்ளத்தில் சந்தேக வடுக்கள் தோன்ற இடம் தந்தது. அர்ச்சுனன் பல நாட்டு உறவுகளைத் தேடிப் புறப்பட வேண்டும் என்பதே கண்ணனின் எண்ணம். ஆனால் இத்திட்டம் பற்றிய தகவல் அஸ்தினாபுரத்தை எட்டக்கூடாது. இதற்காகவே ஒரு வாய்ப்பும் ஏற்பட்டது.

சில அந்தணர்களின் கால் நடைகளை கள்வர்கள் கவர்ந்து சென்றுவிட்டனர். அர்ச்சுனனிடம் அவர்கள் முறையிட்டனர். அவனுடைய வில்லும் அம்புறாத் தூணியும் திரௌபதியின் மாளிகையிலிருந்தன. சத்திரிய தர்மத்தின்படி தன்னிடம் உதவி கோரிய அந்தணர்களுக்கு உதவ தன் ஆயுதங்களை எடுக்க அர்ச்சுனன் திரௌபதியின் அந்தப்புரம் செல்ல நேர்ந்தது. அவ்வேளை யுதிஷ்டிரன் திரௌபதியின் அந்தப்புரத்தில் இருந்தான். ஏற்கனவே உள்ள உடன்பாட்டின்படி அர்ச்சுனன் ஒரு வருடகாலம் தீர்த்த யாத்திரை புறப்பட நேர்ந்தது. ஆனால் அஸ்தினாபுரத்துக்கு ஓர் ஒற்றன் மூலம் இத் தகவல் எட்டிவிட்டது.

-காட்சி தொடக்கம்-

அஸ்தினாபுரம்–துரியோதனன் மாளிகை–சகுனி, கர்ணன், துச்சாதனனுடன் துரியோதனன்.

**சகுனி:** அர்ச்சுனனின் யாத்திரைத் திட்டம் எனக்கு புதிராக இருக்கிறது.

**கர்ண:** காரணம் என்ன மாமா?

**சகுனி:** பிராயச்சித்தம் செய்வதற்காக தீர்த்த யாத்திரை புறப்படும் எவனும் ஏன் புதுப்புது திருமண உறவுகளை மேற்கொள்ள வேண்டும்? நமது நண்பர் மகதநாட்டு மன்னரிடமும் திருமண உறவு பூண்டுவிட்டான் அர்ச்சுனன். எங்களைத் தாக்குவதற்கான திட்டம் ஒன்றினை பாண்டவர்கள் வகுக்குகின்றனர் என்றே தோன்றுகிறது.

**துரியோ:** மாமா! தாங்கள் பாண்டவர்கள் எம்மைத் தாக்குவார்கள் என்றே ஏன் கற்பனை செய்து கொண்டிருக்கிறீர்கள்?

**சகுனி:** முட்டாள்தனமாகப் பேசாதே துரியோதனா? யுதிஷ்டிரனும் திரௌபதியும் தனிமையிலிருக்கும் அறையில் அர்ச்சுனனின் வில்லும் அம்புறாத் தூணியும் ஏன் இருக்க வேண்டும்? இதெல்லாம் அந்த மாய கிருஷ்ணன் வகுத்த சதித்திட்டம் என்றே எனக்குத் தோன்றுகிறது.

**துச்சா:** மாமா கூறுவதிலும் நியாயம் இருக்கிறது.

**கர்ண:** நான் எப்போதும் கூறுவதையே மீண்டும் வலியுறுத்துகிறேன். சத்திரியர்கள் தங்கள் பிணக்குகளைத் தீர்க்க நேரடியாகவே போர்க்களம் நாடவேண்டும்.

**சகுனி:** அங்கதேச அதிபதியே! சத்திரியர்களுக்கு போர்க்களம் போவது மாமியார் வீடு போவதைப்போன்றது. அங்கு போவதானாலும் போதிய ஆயுதங்கள் அவசியம். அர்ச்சுனன் பாரத நாட்டின் மேற்குக்கரை சென்று விட்டான். அவனுடைய யாத்திரை துவாரகையில் தான் முடிவடையப் போகிறது.

**கர்ண:** துவாரகை எம்மை எவ்வாறு பகைக்க முடியும் மாமா!

**சகுனி:** மணிப்புரி ஒரு பக்கமும் துவாரகை மறுபக்கமும் எமது எல்லைகளாகவுள்ளன. துவாரகையை நமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வதானால் வாசுதேவன் மகள் சுபத்திரையை துரியோதனன் மணம் முடிக்கவேண்டும்.

**துச்சா:** திருமணமூலம் உறவா?

**சகுனி:** ஆமாம்! அரச தந்திர உறவில் இதுவும் பிரதானமானது. பெரும்பாலான அரண்மனைகளின் அந்தப்புரத்தில் பல நாட்டு அரசகுமாரிகளும் சக்கர வர்த்தித் திருமகள்களும் அநேகம் பேர் இருப்பார்கள். பெண் கொடுத்தவர்கள் பெண் எடுத்தவர்களுடன் எக்காலத்திலும் பகைமை பாராட்டமாட்டார்கள் அல்லவா? அரசர்கள், அரசகுமாரிகள் மீது கொண்ட ஆசைகளினாலல்ல; நட்புறவை வளர்க்க உதவும் முறை இது. பெண் கொள்ளும் முறை!

**துரியோ:** அப்போ நான் என்ன செய்ய வேண்டும் மாமா?

**சகுனி:** வாசுதேவனின் மகள் சுபத்திரையை மணம் முடித்துக்கொள்.

-காட்சி மாற்றம்-

பலராமன்– துரியோதனன், துச்சாதனனுக்கு கதாயுதப் பயிற்சி தருகிறார். துச்சாதனன் தோற்றுவிடுகிறான்.

**பலரா:** துரியோதனா! யுத்தத்தின்போது கோபம் கொள்ளலாகாது. கோபம் வந்தால் தன்னிலை தளம்ப வேண்டி வரும்!

**துரியோ:** எனது கதாயுத யுத்த முறை எவ்வாறுள்ளது குருவே?

**பலரா:** கதாயுத மோதலில் இன்று உன்னைவிட வீரன் எவனுமில்லை என் சீடனே! உனக்கு என்னவேண்டும் கேள்!

**துரி:** குருவே, தாங்கள் தங்கள் தங்கை சுபத்திரையின் கையை எனக்குத் தரவேண்டும்.

**பலரா:** எனது கரங்களைக் கேட்டிருந்தால் உடனே தந்திருப்பேன். அவளுடைய கைகள் அவளிடமல்லவா இருக்கின்றன! எதற்கும் என் தந்தையிடம் கேட்கிறேன். என் கோரிக்கையை அவர் தட்டமாட்டார். சுபத்திரை உனக்கே. நம்பிக்கை வை!

-காட்சி மாற்றம்-

சுபத்திரையும் தோழிகளும் பூங்காவில் விளையாடுகின்ற காட்சிகள்.

பின்னணிப்பாடல்:

*மழைத்துளிகளில் நான் நனைந்து விட்டேன்*
*மதன் விடும் பாணம் வதைக்கின்றதே-என்*
*மன்னவன் அருகே வந்துவிட்டாலவன்*
*மார்பினைத் தழுவி மகிழ்ந்திடுவேன்*

அர்ச்சுனன் அருகே வருகின்றான். சுபத்திரையும் அர்ச்சுனனும் சந்திக்கின்றனர்.

**சுபத்:** யார் நீ...?

**அர்ச்:** நான் ஒரு வழிப்போக்கன்! பல இடங்களையும் சுற்றி விட்டு இங்கு வந்தேன்.

**சுபத்:** பல இடங்கள் சென்ற நீர் அர்ச்சுனனைப் பார்த்ததுண்டா?

**அர்ச்:** அர்ச்சுனனா? யார்... அந்த குந்தி தேவியின் மைந்தனா? பார்த்திருக்கிறேன்... ஏன்..?

**சுபத்:** அவர் எப்படியிருப்பார்?

**அர்ச்:** சாதாரணமாகத்தான்! அவரிடம் விசேஷமாக எதனையும் காணவில்லையே!

**சுபத்:** என்ன! துரோணாச்சாரியாரின் மாணாக்கர்! வில்வித்தையில் தலைசிறந்தவர்! அப்பேற்பட்டவரிடம் சிறப்பு அம்சங்கள் எதுவுமே காணப்படவில்லையா? நீர் ஓர் அந்தணன் என்பதால் சும்மாவிடுகிறேன். இல்லையென்றால் உமது நாக்கினைத் துண்டாடியிருப்பேன்!

**கிருஷ்:** சுபத்ரா! அந்த பரதேசியான அந்தணனிடம் என்ன இத்தனை கோபம் கொள்கிறாய்?

**சுபத்:** பாண்டவர்களில் ஒருவரான அர்ச்சுனரிடம் சிறப்பாகக் கூறுவதற்கு எதுவுமே இல்லையாம் என்கிறார் இவர்!

**கிருஷ்:** அது அவருடைய கண்களின் குறையாக இருக்கலாம். விட்டுவிடு. அதுசரி கண்ணால் பார்க்காமலே அந்த அர்ச்சுனன் மீது இத்தனை அபிமானம் என்றால்... ஒருவேளை அவன்மீது காதல் கொண்டுவிட்டாயோ?

**சுபத்:** இவ்வாறெல்லாம் என்னிடம் பேசினால் நான் உங்களுடன் பேசவே மாட்டேன்!

**கிருஷ்:** பார்த்தாயா அந்தணரே! உம்மால் என் தங்கை என்னுடன் கோபித்துக் கொண்டுவிட்டாள். பாபம்! சுபத்திரா! என்னிடம் கேள். அவன் நல்ல உயரம், நல்ல அழகன். கவர்ச்சியான கண்கள், அவன் வில்லேந்தினால் எல்லோருடைய கண்களும் அவனையே மொய்த்திருக்கும்.

**சுபத்:** கவிபாட ஆரம்பித்து விட்டீர்களே!

**கிருஷ்:** என்ன செய்வது? அவனுடைய அழகு அவ்வாறுள்ளது. நான் கூறுவது பொய்யானால் நீயே பார்த்து தெரிந்துகொள்!

**சுபத்:** எப்படிப் பார்ப்பது? அவர்தான் இங்கில்லையே!

**கிருஷ்:** என்னருகே வா! அவனை உனக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். இதோ இவன்தான். இது என் அன்புத் தங்கை சுபத்திரை பார்த்தா!

நாணமுற்ற சுபத்திரை ஓடிவிடுகிறாள்.

**கிருஷ்:** நண்பனே! இப்பொழுது என் தந்தையிடம் உங்கள் இருவரைப்பற்றியும் கூறட்டுமா?

**அர்ச்:** சுபத்திரையின் கருத்தினை அறியாமலா?

**கிருஷ்:** அப்போ அரண்மனை செல்வோம் வா...!

-காட்சி மாற்றம்-

சுபத்திரை பூங்காவில் உலவுகிறாள்.

**அர்ச்:** எனது வந்தனங்களை ஏற்றுக் கொள்ளுங்கள் இளவரசி!

**சுபத்:** எனக்கு எதுவுமே வேண்டாம். போய்விடுங்கள்.

**அர்ச்:** நான் என்ன குற்றம் செய்தேன்?

**சுபத்:** நீங்கள்தான் அவர் என்ற உண்மையை ஏன் என்னிடம் சொல்லவில்லை?

**அர்ச்:** அர்ச்சுனனை கண்டதுண்டா என்று தானே கேட்டீர்கள்?

**சுபத்:** பார்த்ததாகச் சொன்னீர்கள். ஆனால் சிறப்பு அம்சங்கள் எதையும் காணவில்லை என்றீர்களே?

**அர்ச்:** எனக்கு அவ்வாறு எதுவும் தோன்றவில்லையே! உங்களுக்குத் தெரிந்தால் கூறுங்கள்!

சுபத்திரை ஓடுகிறாள். ஆனால் அங்கு வந்த கிருஷ்ணனுடன் மோதிவிடுகிறாள்.

**கிருஷ்:** என் அன்புச் சகோதரியே! யாரைக் கண்டு மருண்டு ஓடுகிறாய்? ஓஹோ.... புரிந்துவிட்டது...!

**சுபத்:** என்ன புரிந்து விட்டதாம்...?

**கிருஷ்:** நீ ஏன் ஓடினாய் என்பதை! ஒரு பெண் பெருமையுடனும் நாணத்துடனும் ஓடுகிறாள் என்றால் காரணம் இருக்கத்தானே செய்யும்! முதலில் அப்பாவிடம் நிலமையைக் கூறுகிறேன். சரிதானே?

-காட்சி மாற்றம்-

துவாரகை அரண்மனை– தேவகியும் வாசுதேவரும்.

**தேவகி:** கிருஷ்ணன்மீது நீங்கள் வைத்திருக்கும் பாசம் குடும்பத்தில் ஏனைய பொறுப்புகளை மறந்துவிட வைத்து விடுகிறது.

**வாசு:** ஏன் உன்னையே மறந்துவிட்டேன் என்று குறை கூறுகிறாயா? நினைவுகளையும் மறதிகளையுமே ஒதுக்கிவிடும் பருவம் எய்தினாலும் ஒருவருடைய சுவாசத்தையே மறந்துவிட முடியுமா?

**தேவகி:** போதும்! கவிதை பாடும் காலமும் கடந்துவிட்டது! நான் என்னைப் பற்றி எதுவும் கூறவில்லை. சுபத்திரை பற்றிய எண்ணம் தோன்றவில்லையா உங்களுக்கு?

**வாசு:** ஏன் அவளுக்கு இப்போ என்ன?

**தேவகி:** அவள் இப்போ பருவப் பெண்!

**வாசு:** தாய்மாரிடமுள்ள குறை இதுதான். தங்கள் பெண்களைப் பார்த்ததும் அவர்கள் வளர்ந்துவிட்டார்கள் என்ற ஏக்கம் ஏற்பட்டுவிடுகிறது.

**தேவகி:** ஆனால் தந்தையரோ அவர்கள் இன்னும் குழந்தை என்று கணிப்பது..! நேற்று அவள் கண்ணாடியில் தன்னைத் தானே பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தாள். இதன் காரணம் என்ன? மழை வருமுன்னே மின்னல் தோன்றுவது போல் அவள் சிந்தையிலும்...!

**வாசு:** தேவகி! சுபத்திரா ஒரு சாதாரண பெண்ணல்லவே!

**தேவகி:** இதுவும் தந்தையரின் மற்றுமொரு குறை! தங்கள் மகள் ஏதோ தனிச் சிறப்புடையவள் என்று கருதுவது! சுபத்திராவிடம் அத்தகைய சிறப்பு அம்சம் என்ன என்றுதான் கூறுங்களேன்?

**வாசு:** பிரதானமாக அவள் நம் கிருஷ்ணனின் அன்புத் தங்கை என்பதே ஒரு சிறப்பு அம்சமல்லவா?

பலராமன் வருகிறார்.

**பலரா:** அம்மா...! அப்பா...! என் வணக்கம்!

**வாசு:** வாழ்க மகனே! அமர்ந்துகொள்! அஸ்தினாபுரத்திலிருந்து எப்போது திரும்பினாய்?

**பலரா:** இதோ நேராக அங்கிருந்துதான் வருகிறேன். முதலில் தங்களின் பாத நமஸ்காரம் புரிந்து விடுகிறேன். அத்துடன் முக்கியமான சம்பவம் பற்றி பேசவும் வேண்டியிருக்கிறது.

**வாசு:** பயணக் களைப்புத்தீர ஓய்வெடுக்காமலே பேசுவதற்கு அவ்வளவு அவசரம் என்ன மகனே?

**தேவகி:** முதலில் உனது அத்தை குந்தி எவ்வாறுள்ளாள்? அதனைக் கூறு பார்க்கலாம்.

**பலரா:** அத்தை இந்திரப் பிரஸ்தத்திலுள்ளார் அம்மா! எங்கும் யுதிஷ்டிரனின் புகழ்தான் ஒலிக்கிறது.

**வாசு:** அதெல்லாவற்றையும் அர்ச்சுனனிடம் கேட்டுத் தெரிந்துகொண்டோமே!

**பலரா:** என்ன அர்ச்சுனன் இங்குள்ளானா?

**தேவகி:** கிருஷ்ணனுடன் தங்கியிருக்கிறான்.

**பலரா:** அப்படியா...? சரி! சுபத்திரையைப் பற்றியே சதா எண்ணிக்கொண்டிருந்தேன். நான் வருவதற்கு முன்னர் அவளுக்கு திருமணப் பேச்சுவார்த்தை எதுவும் நடந்துவிடக்கூடாதே என்று கருதினேன்.

**தேவகி:** ஏன்? ஏதாவது சிறப்பான சம்பந்தம் உண்டா?

**பலரா:** ஆமாம் அம்மா! அஸ்தினாபுரத்தின் மாமன்னாக வரப்போகும் அந்த துரியோதனனையே சுபத்திரைக்கு நான் தகுந்த மணவாளனாக நினைத்தேன்! அவனே என்னிடம் கோரிக்கை விடுத்தான்.

**தேவகி:** ஆனால் இச்சம்பந்தத்தினை குந்தி ஏற்பாளா?

**பலரா:** இப்போது நாடு பிரிந்துவிட்ட பின்னர் பிரச்சனைகள் யாவும் தீர்ந்து விட்டனவே!

**வாசு:** பிரிவினையுடன் பிரச்சனை தீர்ந்து விடுவதில்லை. இப்பொழுது எல்லைகள் சுருங்கிவிட்டன. இதனால் எவருக்கும் திருப்தி இல்லையே!

**பலரா:** ஆனால் அப்பா! நான் துரியோதனனுக்கு வாக்களித்துவிட்டேனே!

**வாசு:** வாக்களித்து விட்டாயா.....? அவ்வாறானால்...!

இவ்வேளையில் கிருஷ்ணர் உள்ளே வருகிறார்.

**கிருஷ்:** அண்ணா வணக்கம்! துரியோதனன் மிக நன்றாக உங்களை மகிழ்ச்சியூட்டியிருக்கிறான் போலும்!

**தேவகி:** மகனே! ஒரு நல்ல செய்தி! பலராமன் உன் அன்புச் சகோதரிக்கு பொருத்தமான வரனைத் தேடி வைத்திருக்கிறான்.

**கிருஷ்:** அண்ணன் இத்தனை நாட்களின் பின் திரும்பியுள்ளமையினால் எல்லோருக்கும் நல்ல வெகுமதிகொண்டு வந்திருப்பார் என்பதை அறிவேன். அண்ணா! எனக்கு என்ன கொண்டு வந்தீர்கள்?

**பலரா:** பார்த்தீர்களா அப்பா! சுபத்திரையின் திருமணம் பற்றி நாம் பேசுகிறோம். இவன் தன்னைப்பற்றித்தான் முதலில் கருதுகிறான். இவ்வளவு பேராசை உனக்குக் கூடாதப்பா!

**கிருஷ்:** அண்ணனிடம் தம்பி கேட்பது தவறா? நீங்கள் பயணத்திலிருந்து வந்த இரதத்திலிருந்து இறங்கியதும் இங்கு ஏன் ஓடி வந்தீர்கள் என்பதை அறிவேன். அதனால்தான் நானும் ஓடோடி வந்தேன். அண்ணா! எமது மாளிகையில் ஒளி வீசும் நிலவு சந்திர வம்சத்தினைத்தான் சென்றடைய வேண்டுமல்லவா?

**பலரா:** அப்பா! தம்பியின் கருத்தும் அதுவே தான். ஆகவே இனி தடை ஏதுமில்லையே?

**கிருஷ்:** இருப்பினும் அண்ணா இதற்கான தீர்மானம், எதுவும் கதிரவன் ஒளி வீசும் பொழுதில்தான் எடுக்கப்படல் வேண்டும். அப்போதுதான் எம் தங்கையின் வாழ்வும் ஒளிவீசும்.

**தேவகி:** ஆமாம்! நாளை பகலில் இதற்கு முடிவெடுப்போமே?

**பலரா:** கிருஷ்ணா! அதற்கிடையில் நீ எதுவித குறும்புகளையும் தொடங்கி விடமாட்டாயே..?

**கிருஷ்:** அண்ணா! நம் அன்புத் தங்கையின் விடயத்தில் பிரச்சனைக்கு வழி வகுக்கலாமா? அவ்வாறு ஏன் கருதுகிறீர்கள்?

**வாசு:** கிருஷ்ணன் கூறுவது சரியே! மகனே நாளைக்காலை முடிவெடுக்கலாம். நீ போய் ஓய்வெடுத்துக்கொள்!

-காட்சி மாற்றம்-

அர்ச்சுனன் தூங்குகிறான். கிருஷ்ணன் அவனை எழுப்புகிறான்.

**கிருஷ்:** பார்த்தா!.....பார்த்தா...! நான் தான்! நானே தான் உன்னை துயிலெழுப்புகிறேன். சிக்கலான பிரச்சினை உருவாகியுள்ளது.

அர்ச்சுனன் வில்லையும் அம்புறாத் தூணியையும் எடுக்கிறான்.

**கிருஷ்:** என்ன! என் அண்ணன் பலராமனையா உன் பாணங்களுக்கு இரையாக்கப் போகிறாய்? பதற்றப்படாதே! முதலில் என்னை அமரச்சொல்ல வேண்டாமா?

**அர்ச்:** இது உன் மாளிகை! இதில் உன்னை நான் உபசரிக்கலாமா?

**கிருஷ்:** சரி! சரி! சுருக்கமாகவே சொல்கிறேன். அண்ணன் பலராமன் சுபத்திரைக்கு துரியோதனனை முடித்து வைக்க திட்டமிட்டுள்ளான்.

**அர்ச்:** துரியோதனனையா..? அப்போ நான் என்ன செய்ய வேண்டும் கேசவா..?

**கிருஷ்:** உனக்குக் கட்டளையிடவில்லை நண்பனே! ஒரு சத்திரியன் ஒரு கன்னியை விரும்பி அவளும் அவனையே விரும்பினால் அந்த சத்திரியனின் கடமை என்ன? இருவருக்கும் இடையிலுள்ள தடைகளை நீக்கி அவன் அவளைக் கடத்திச் சென்றாவது மணம் முடிப்பது.

**அர்ச்:** அப்போ சுபத்திரையை நான் கடத்திச் செல்ல வேண்டும் என்கிறாயா?

**கிருஷ்:** நான் அவ்வாறு சொல்லவில்லை! சத்திரியனின் கடமையைத்தான் கூறினேன். நாளை சுபத்திரை இராய்வத மலைக் கோவிலுக்குச் செல்கிறாளாம் என்று கேள்விப்பட்டேன்.

அர்ச்சுனனுக்குப் புரிந்து விடுகிறது.

-காட்சி மாற்றம்-

சுபத்திரையும் கிருஷ்ணனும்

**சுபத்:** நான் மலைக் கோவிலுக்குச் செல்லப் போவதில்லை.

**கிருஷ்:** ஓஹோ தவறாகப் புரிந்துகொண்டேன் போலும். நீ துரியோதனனுடன் அஸ்தினாபுரம் போவதாகத்தான் யாரோ சொல்லியிருப்பார்கள்.

**சுபத்:** அவ்வாறு யார் சொன்னார்கள் அண்ணா?

**கிருஷ்:** மூத்த அண்ணன்தான். பெற்றாரிடம் தன் முடிவினை கூறிவிட்டான். அவர்கள் வாக்களிப்பதற்கு முன்னர் நான் அங்கு சென்று முடிவெடுப்பதை நாளை பொழுது விடியும்வரை ஒத்தி வைத்தேன்.

**சுபத்:** நான் ஒருபோதும் துரியோதனனை ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

**கிருஷ்:** உனது எண்ணத்தில் உறுதியிருந்தால் காலையில் கோவிலுக்குப்போ.

**சுபத்:** தங்கள் ஆணைப்படி நடக்கிறேன் அண்ணா!

**கிருஷ்:** சொந்த வாழ்க்கை பற்றிய முடிவில் மற்றவர் கட்டளை முக்கியமல்ல. சரியான தீர்மானத்தினை அவரவர்களே எடுத்தாக வேண்டும். நாளை நீ ஆலயம் சென்றால் அங்கிருந்தே அர்ச்சுனன் உன்னை அழைத்துச் செல்லக் காத்திருப்பான்.

-காட்சி மாற்றம்-

அர்ச்சுனனை சந்தித்த நினைவுகளை மிதக்க விட்டு சுபத்திரா இருக்கும்போது தோழிகள் அவளை அலங்கரிக்கின்றனர்.

பின்னணிப்பாடல்:

*மையல் கொண்ட மாதவளோ மயங்குகிறாள்*
*பைய நடந்தவனை பாசமுடனணைக்க*
*பாதச் சிலம்புகளின் பரல்களொலி தடுக்க*
*நெய்யாயுருகி மனம் புண்ணாய்ப் பரிதவிக்க*
*காதலின்ப மாமழையில் கன்னியவள் தோய்ந்து நிதம்*
*வேதனையிலே வெதும்பி சோதனைகளாழ்த்த கதை*
*காதலனின் காதுகளிலே ஓதமாட்டாளோ—*
*தூது செல்லத் தென்றலே நீ துணை போக மாட்டாயோ.?*

-காட்சி மாற்றம்-

பலராமன் தேகப்பயிற்சி செய்து கொண்டிருக்கும்போது அர்ச்சுனன் அவரிடம் விடைபெறுகிறான். பின்னர் கிருஷ்ணனிடம் செல்கிறான்.

**கிருஷ்:** அண்ணன் பலராமனிடம் விடை பெற்றாகிவிட்டதா? அவருடைய வாழ்த்தும் உனக்கு அவசியம். ஒன்றை நினைவில் கொள். திரௌபதி தீயிலிருந்து தோன்றியவள். அவள் குணங்களும் சுடக்கூடும். திரௌபதிக்கும் சுபத்திரைக்குமிடையில் நல்லுறவு எவ்வாறிருக்குமோ தெரியாது. பார்த்தா! சுபத்திரா என் தங்கை. அதுபோல் திரௌபதியும் எனக்குத் தங்கை முறைதான். இந்த ஒரே அம்சம் அவர்களுக்குள் உறவு மலர ஏதுவாகலாம்.

**அர்ச்:** எனக்கு எதுவுமே புரியவில்லை கண்ணா!

**கிருஷ்:** இப்பொழுது எதுவும் புரிய வேண்டிய அவசியமில்லை. சுபத்திராவும் நீயும் எதிர்கால சந்திர வம்சத்தை தழைக்க வைக்க வேண்டியவர்கள். எனது இரதம் தயாராக இருக்கிறது புறப்படலாம்.

**அர்ச்:** நன்றி! வாழ்த்துக்கள். போய் வருகிறோம்.

**கிருஷ்:** முக்கியமான மற்றொன்று! இரதத்தை சுபத்திராவே செலுத்தட்டும். ஏனெனில் இது அவளுடைய யாத்திரை!

-காட்சி மாற்றம்-

சுபத்ரா தோழியருடன் காவலர் சூழ ஆலயம் செல்லும் வழியில் அர்ச்சுனன் இரதத்தில் எதிர்ப்படுகிறான். கைலாகு கொடுத்து தன் இரதத்தில் அர்ச்சுனன் சுபத்திரையை ஏற்றுகிறான். இருவரும் செல்வதைக்கண்ட தோழியரும் காவலரும் திகைப்புற்று அரண்மனைக்கு ஓடுகின்றனர்.

-காட்சி மாற்றம்-

துவாரகை அரண்மனை–வாசுதேவரும் மந்திரிப் பிரதானிகளும் சூழ்ந்திருக்க பலராமன் கோபத்துடன் வருகிறார்.

**பலரா:** துவாரகாபுரி வீரர்களே! விருந்தாளியாக வந்த அர்ச்சுனன் தங்கை திரௌபதியைக் கடத்திச்சென்றுவிட்டான். அவனை இந்திரப் பிரஸ்தம் செல்வதற்குள் மடக்கிப் பிடித்துவிட வேண்டும்.

**வீரர்கள்:** ஆமாம்! நாங்கள் புறப்படத் தயார்.

**பலரா:** கிருஷ்ணா! ஏன் மௌனமாக இருக்கிறாய்? நீ ருக்மணியை கடத்திக் கொண்டு வரும்போது அவள் அண்ணன் ருக்மி படையுடன் வந்தானே! மறந்துவிட்டாயா?

**கிருஷ்:** அண்ணா! நான் ருக்மணியை கடத்தி வரவில்லையே! அவளுடைய கருத்துக்கு விரோதமாக அவளை சிசுபாலனுக்கு மணம் முடிக்க முயற்சித்தார்கள். தன்னைக் காப்பாற்றும்படி ருக்மணி எனக்கு அழைப்பு விடுத்தாள். நான் அவளுக்கு உதவினேன். அது தாங்கள் அறிந்ததே! நீங்களும் தங்கை சுபத்திரையின் எண்ணங்களுக்கு மாறாக துரியோதனனுக்கு அவளை மணம் முடித்து வைக்கத் திட்டமிட்டீர்கள். அவள் அர்ச்சுனனிடம் உதவி கோரியிருப்பாள்.

**பலரா:** துரியோதனனை சுபத்ரா விரும்பவில்லை என்று யார் சொன்னது?

**கிருஷ்:** அவளே என்னிடம் கூறினாள்.

**பலரா:** துரியோதனனை திருமணம் பேசியது அவளுக்கு எப்படித் தெரிந்தது?

**கிருஷ்:** மகிழ்ச்சியூட்டும் செய்தியாக இருக்குமே என்று நானேதான் அவளிடம் கூறினேன். அவள் தனக்கு விருப்பமில்லை என்று வருந்தினாள். அண்ணன் வாக்களித்து விட்டாரே என்று கூறினேன்.

**பலரா:** இவற்றையெல்லாம் அர்ச்சுனனிடம் யார் கூறினார்கள்? அவனுடைய உதவி தேவைப்படுகிறது என்று யார் மூலம் சுபத்திரை தூது அனுப்பினாள்?

**கிருஷ்:** அண்ணா! இவ்வினாக்களுக்கு விடை கூறவேண்டியவள் சுபத்திரைதான்.

**அமைச்சர்:** அர்ச்சுனனை விடக்கூடாது.

**அமை.2:** அவனுடைய சாவுக்கு அவனே வழிதேடி விட்டான்!

பலரும் எதிர்ப்புக்குரல் கொடுக்கின்றனர்.

**கிருஷ்:** பொறுங்கள்! உங்களுக்கு மாறான கருத்தை நான் சொல்லவில்லை. ஆனால் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உண்மையில் அர்ச்சுனன் நமது பாரம்பரியப் பண்பாட்டைப் பாதுகாத்திருக்கிறான். ஒரு பெண் மிருகத்தைபோல் வாங்கவோ விற்கவோ உள்ள கடைச்சரக்கல்ல. பெண்ணொருத்தி தன் கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கொண்டவள். இம்முறைக்கு முரண்பாடாக நடக்க நீங்கள் முயன்றீர்கள். அர்ச்சுனன் அவளுக்கு உதவினான். அந்த பாண்டு புத்திரனின் குறையென்ன? அவனை எதிர்த்து நின்று உங்களால் வெற்றிபெற முடியுமா? அந்த மகேஸ்வரனைத் தவிர வேறு எவராலும் அர்ச்சுனனை வெல்ல முடியாது. அவனை எதிர்த்துப் போனால் துவாரகையின் பெருமைக்கே இழுக்காக முடியும். அவர்களை சகல மரியாதைகளுடனும் அழைத்து வந்து திருமணத்தை முறைப்படி முடித்து வைப்பதே மேல்.

சகலரும் உருவிய வாள்களை உறையிலிடுகின்றனர்.

**பலரா:** இவனை வாய் திறக்கவிட்டால் போதும்! ஏனையோர் யாவரும் வாய் மூடவேண்டியது தான். சரி அவர்களை மரியாதையுடன் அழைத்துவர ஏற்பாடு செய்வோம்.

பின்னணிப் பாடல்:

*காதலரிருவர் கருத்தொருமித்திடில்*
*தாமதமகற்றி திருமண வினையினை*
*நிறைவுற நிகழ்த்திடத் தவறுகளகலும்*
*நெறிமுறை சிறப்புறும் உறவுகளோங்கிடும்.*

எம்.ரீ.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்



436331

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு




## இப்படியும் வாழலாம்

மொரோக்கோ நாட்டைச் சேர்ந்தவர் இந்த மொட்டைத் தலையர் தாஹர். இவருக்கு பெரிய நட்சத்திர ஹோட்டல் சொந்தமாக இருக்கிறது. பொழுது போகாவிட்டால் தாஹர் விளையாடுவது அபாய முதலைகளோடு தான். மனிதரைத் தின்னும் முதலைகள் தாஹரைத் தொட்டு விளையாடுகின்றன. இடைக்கிடையே அவை முரட்டுத்தனங்கள் காட்டியதால் தாஹரின் உடம்பில் காயங்கள் இருந்தாலும் அதுபற்றி அவர் கவலைப்படுவதே கிடையாது. இந்த முதலையின் நீளம் 14 அடி.




Kala

JEWELLERY


புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

433686

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


## தருவது-லியோ-டெ

## வயிறும் படைக்கும் வரலாறு



உடைக்க முடியவில்லை

(தகவல்- ஆ.சிறிஸ்கந்தராஜா)

## அதிஷ்டக்கார அம்மா



ஒரே சூலில் ஆறு குழந்தைகள் பிறந்த செய்தி கேட்டு பிரிட்டிஷ் மக்கள் பலர் குறைபட்டு பேசத் தொடங்கி விட்டனர். பிரிட்டிஷ் அரசு தன் குடிமக்களது மருத்துவ செலவுகளை ஏற்பதால் ஆறு குழந்தைகளது பிரசவ செலவும் வந்து சேரும் என்றுதான் மக்கள் கவலைப்பட்டனர். ஏன் என்றால் வரி கொடுப்பவர்கள் அவர்கள்தானே. இதனால் சாதனை படைத்த தாய்க்கு வேதனை. ஆனால் 6 குழந்தைகளது படங்களும் பத்திரிகைகளில் வெளியானவுடன் பிரிட்டிஷ் மக்கள் மௌனமாகி விட்டனர். காரணம் அந்தக் குழந்தைகளது அழகு வாயடைக்க வைத்துவிட்டது.

## என்றென்றும் அன்புடன்




1994 பாராளுமன்றத் தேர்தல்-கொழும்பு மாவட்டம்



சுயேச்சைக் குழு

கொழும்பு வாழ்
தமிழ், முஸ்லிம் மக்களின்
ஆத்மார்த்த தோழன்
A. கங்காதரன்
சட்டத்தரணி, அகில
இலங்கை சமாதான நீதவான்.

X 8

"சிறுபான்மையினர் நீதியைக் கேட்கின்றனர்.
தராசுதான் பதில் சொல்லும்." ADVT.



"சொல்வதைச் செய்வோம்
செய்வதை சொல்வோம்"

தேர்தல் வந்தவுடன்
மக்களை-தேடிவரும் கூட்டமல்ல
சேவையிலே-மக்கள் மத்தியிலே
என்றும் நிற்கும்
தோழர் டக்ளஸ் தேவானந்தா
தலைமையிலான
சுயேச்சைக்குழு 2
சூடும் வெற்றி
ஆகஸ்ட் 16 அன்று!
என்று சொல்கிறார்கள்
யாழ் மாவட்ட மக்கள் இன்றே!!



சுயேச்சைக்குழு 2 X

தமிழ்-முஸ்லிம் மக்களின்
ஒற்றுமைக்காக-விமோசனத்திற்காக. ADVT.